
# சைவ போதினி



எட்டாம் வகுப்பு

கொழும்பு விவேகானந்த சபை வெளியீடு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

விவேகானந்தசபை வெளியீடு:

# சைவபோதினி

## எட்டாம் வகுப்பு

புதிய பாடத்திட்டத்திற்கு அமைய எழுதப்பெற்றது.

**1973**

உரிமை பெற்றது) (விலை ரூபா 2-00

அச்சுப்பதிவு: ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகம் - நாவலப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பதிப்புரை

"ஊனத் திருள் நீங்கிட வேண்டில்
ஞானப் பொருள் கொண்டடி பேணும்" -சம்பந்தர்

தமிழர் தொன்னெறியாய சைவசமயக் கல்வியறிவொழுக்க ஆசாரங்களை மக்கள் நன்கு கற்றுத் தெரிந்து, தெளிந்த முறையில் நன்மைபெற வாழ்ந்து, ஈற்றில் பெருநிலையில் அடங்கி வாழும் பேரின்பப் பேற்றிற்கு ஆளாக வேண்டும் என்ற பெருநோக்கைக் கருத்திற் கொண்டு, பல்லாற்றானும் ஒல்லுமட்டும் நன்றெண்டுகளாற்றி வரும் கொழும்பு விவேகானந்தசபை, கடந்த நாற்பத்துமூன்றுஆண்டுகளாகச் சைவசிறார்களுக்கென அகில இலங்கை அடிப்படையில் ஆண்டுதோறுஞ் சைவ சமய பாடப் பரீட்சை ஒன்றையும் நடாத்திவருகின்றது. அப்பரீட்சைக்கெனச் சபையினால் எழுதப்பட்டும், பாடசாலைகளில் "சைவசமயங் கற்பிப்பதற்குப் பாட நூல்களாகக் கைக்கொள்ளுதற்கு ஏற்றவை" எனக் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டதுமான வெளியீடுகளே சைவ போதினிகள் ஆகும். அப்படி இருந்தும், அரசினர் பாடத் திட்டத்தைத் தழுவியே சபையாரின் பரீட்சை இப்போது நடந்து வருவதனால், அப்பாடத் திட்டங்களுக்கு அமைவுற இரண்டாம் வகுப்புமுதல் எட்டாம் வகுப்புவரையான சபை வெளியீடுகளைப் புதிதாகத் திருத்தி வெளியீட்டிருக்கின்றனம்.

இப்புதியப் பதிப்பில் யாதேனும், பிழைகள் குறைகள் இருக்கக் கண்டால், அவற்றைச் சபையார்க்குத் தெரிவிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றனம்.

மேலும் இந்நூலில் வரும் பொருளடக்கக் கருவூலங்களைச் செப்பமுற ஒழுங்குபடுத்தித் தொகுத்து எழுதியுதவி, இதனை ஒளிவிளக்காக்கிய சைவப் பெரியார் தமிழவேள் சபையாரின் நன்றிக்கும் சைவ உலகின் போற்றலுக்கும் உரியவராவர்.

10-12-73. கொழும்பு விவேகானந்த சபையார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பொருளடக்கம்


| பாடம். | | பக்கம். |
|---|---|---|
| 1. | சைவ சமயப் பிரமாண நூல்கள். | 1 |
| 2. | சைவ நாற்பாதங்களும் நால்வகை முத்திகளும் | 8 |
| 3. | திருக்கோயில் அமைப்பு | 12 |
| 4. | இறைவன் மூர்த்தங்கள் | 19 |
| 5. | திருக்கோயில் வழிபாடு | 28 |
| 6. | சரியை வழிபாடு | 33 |
| 7. | திருக்கோயிற் கிரியைகள் | 38 |
| 8. | பசு [ஆன்மா] | 42 |
| 9. | பாசம் | 44 |
| 10. | திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம் | 54 |
| 11. | திருநாவுக்கரசுநாயனார் தேவாரம் | 61 |
| 12. | அப்பர் தேவாரம் | 64 |
| 13. | சுந்தரர் தேவாரம் | 69 |
| 14. | திருவாசகம் | 72 |
| 15. | திருவிசைப்பா | 85 |
| 16. | திருப்பல்லாண்டு | 86 |
| 17. | திருப்புராணம் | 88 |
| 18. | திருப்புகழ் | 92 |
| 19. | கந்தர் அலங்காரம் | 95 |
| 20. | நீதிப்பகுதி திருக்குறள் | 97 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. மங்கையர்க்கரசியார் 111
22. மெய்கண்டதேவர் 113
23. அருணந்தி சிவாசாரியார் 116
24. மறைஞான சம்பந்த சிவாசாரியார் 117
25. உமாபதி சிவாசாரியார் 118
26. கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள் 120
27. தாயுமான சுவாமிகள் 122
28. சிவஞான முனிவர் 124
29. மன்று தொழுத பதஞ்சலி 126
30. சிதம்பரம் 129

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# 1. சைவ சமயப் பிரமாண நூல்கள்

## (அ) சைவ சமயம்:

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் வாழ்ந்த நம் முன்னோர் கடவுள், உலகு, உயிர் என்னும் முப்பொருள்களையும் பற்றி அறிந்திருந்தனர். உலக வாழ்வு உயிர்களை அநாதியே பற்றி நிற்கும் மல நீக்கத்திற்கென அமைந்தது என்று தெளிந்தனர். கடவுளை அன்பு வடிவாகக் கண்டனர்; கடவுளுக்கு அன்பு எனும் பொருளமையச், "சிவம்" என்று பெயருமிட்டனர். உயிர்களைப் 'பசு' என்றும், அறியாமையைச்செய்யும் இருளைப் 'பாசம்' என்றும் வழங்கினர்; உலக வாழ்வைப் பேரருளினால் அளித்த இறைவனை நன்றி அறிதலுடன் வழிபட்டு ஒழுகினர்; வாழ்வில் இன்பமும் அமைதியுங் கண்டனர்; அவர்கள் கைக்கொண்ட நெறி சைவசமயம் என அழைக்கப்பட்டது.

உலகில் பல சமயங்கள் நிலவுகின்றன. அவற்றுள் சைவ சமயம் மிக மிகப் பழமை வாய்ந்தது. தொன்மையினாலும், பொருள் ஆழத்தினாலும், சமரச நோக்கத்தினாலும், பிற சமயங்களைக் காட்டிலும் உயர்ந்தது. எல்லாச் சமயங்கட்கும் தாயகமாய் உள்ளது. பல்லாயிரம் ஆண்டுகள் சென்றும் பண்பு குன்றாமல் நின்று நிலவுவது நம் பழம்பெருஞ் சைவம்.

சைவம் கடவுளைச் சிவம் என்றும், உயிர்களைப் பசுவென்றும், அறியாமையைச் செய்யும் இருளைப் பாசம் என்றுங் கூறும் என்று முன்னர் அறிந்தோம். கடவுள் பதி என்றுங் கூறப்படுவார். பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களையும் முடிந்த முடிபாக அறுதி இட்டுக் கூறுதலின், சைவஞ் சித்தாந்தம் என்றுங் கூறப்படும். பதி, பசு, பாசம் எனும் மூன்றினையும் இறை, உயிர், தளை எனவும் வழங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயத்தின் இயல்புகளைத் தமிழ் மொழியிலும், வட மொழியிலும் உள்ள நூல்கள் செவ்வனே விளக்குகின்றன. தமிழ்மொழியில் பன்னிரு திருமுறைகளும், பதினான்கு மெய்கண்ட சாத்திரங்களுந் தலைமைபெற்று விளங்குகின்றன. வடமொழியில் வேதங்களும், ஆகமங்களும், உபாகமங்களுந் தலைமை பெற்று விளங்குகின்றன. அன்றியுந் தமிழ் மொழியில் ஞானாமிர்தம், பண்டார சாத்திரம் முதலிய சார்பு நூல்களும், சிவஞானபாடியம் முதலிய உரைநூல்களும் உண்டு. வடமொழியில் தத்துவப் பிரகாசிகை முதல் இரத்தினத் திரவியம் ஈறாக உள்ள எட்டுச் சார்பு நூல்களும், பௌட்கரவிருத்தி, மிருகேந்திரவிருத்தி, சிவாக்கிர பாடியம் முதலிய உரைநூல்களும் உண்டு. மற்றும் புராணங்கள் இதிகாசங்கள் என இரு பகுதியான நூல்களும் உண்டு. சைவ சமயிகள் இவற்றைக் கற்றுப் பயன்பெறல் வேண்டும்.

—✶—

## (ஆ)* வேதம்:

சிவபெருமான், ஆன்மாக்கள் பொருட்டு அருளிச்செய்த நூல்கள் இரண்டு. அவை வேதம், சிவாகமம் என்பன. அவற்றுள் முதற்கண் நிற்பது வேதம். வேதத்தை அறிவு நூல் என்பர். வேதத்திற்குச் சுருதி, நிகமம் முதலிய பெயர்களும் உண்டு. வேதத்தைப் பின்பற்றுவோர் வைதீகர் எனப்படுவர். வேதம் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்காகும். இவை முறையே சதாசிவமூர்த்தியின் தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் ஆகிய நான்கு திருமுகங்களில் நின்றுந் தோன்றின என்று பெரியோர்கள் கூறுவர். வேதங்கள் காலத்தால் மிக முற்பட்டவை; அநாதியானவை; வேதத்தை ஞானகாண்டம்; கரும காண்டம் என இரண்டாகப் பிரிப்பர். ஞான காண்

---

* ஸ்ரீகாம கோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள் அருளிய நன்மொழிகள் பக்கம்: 264

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டம் பிரமத்தைப் பற்றிய ஆராய்ச்சியாகும். இந்து மதத்தைச் சேர்ந்த சகல பிரிவினரும் ஞான காண்டத்தை ஏற்றுக் கொள்வர். கரும காண்டம் வருணாச்சிரம தருமங்களையும், இந்திரன் முதலிய தேவர்கள் பூசைகளையும் விவரித்துக் கூறும். வேதங்களுக்கு உரை செய்தவர்கள் பல்வேறு சமயத்தவர்கள். கால வேறுபாடுகளுக்கேற்ப வேதங்கள் காலந்தோறும் இருடிகளால் வகுக்கப்படும்.

தற்காலத்துள்ள நான்கு வேதங்களுந் துவாபரயுகத்தின் இறுதிக் காலத்தில், கலியுகத் தொடக்கத்தில், சற்றேறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் அவதரித்த வியாச முனிவரால் வகுக்கப்பட்டுள்ளன. ஒரு மனிதன் வேதம் முழுவதையும் படிப்பது இயலாத காரியம். ஆகவே, வியாசர், ஒருவன் வாழ்நாளில் படித்து முடிக்கக்கூடிய பாகத்தை ஒவ்வொரு பிரிவாகப் பிரித்து வைத்தார். அவை "சாகை" என்று வழங்கப்பெறும். வியாசரிடஞ் சுமந்து, பைலர், ஜைமினி, வைசம்பாயனர் எனும் நால்வரும் நான்கு வேதங்களையும் பாடங் கேட்டனர். இருக்கு வேதம் 21 சாகைகளையும், யசுர் வேதம் 100 சாகைகளையும், சாம வேதம் 1000 சாகைகளையும், அதர்வ வேதம் 9 சாகைகளையும் கொண்டன. இருக்கு வேதத்தில் இப்பொழுது ஐதரேயசாகை மட்டும் இருப்பதாகவும், யசுர்வேதத்தில் காண்வசாகை, தைத்திரீய சாகை, மாத்யந்தினசாகை என்னும் மூன்று சாகைகள் மட்டும் இருப்பதாகவும், சாமவேதத்தில் கௌதுஞ்சாகை, தலவகார சாகை என்னும் இரண்டு சாகைகள் மட்டும் இருப்பதாகவும், அதர்வ வேதத்தில் ஒரு சாகைகூட இப்பொழுது வழக்கத்தில் இல்லையென்றும் பெரியோர்கள் கூறுவர். ஒவ்வொரு சாகையும் மூன்று பிரிவுகளை உடையது. அவை மந்திரம், பிராம்மணம், உபநிடதம் என்பன. மந்திரம் உச்சரித்தால் புண்ணியத்தைத் தருவது; பிராம்மணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்ன கருமம், இதை உத்தேசித்து இப்படிச் செய்ய வேண்டும் என்று விதிப்பது; உபநிடதம் ஞானப்பகுதி. ஒவ்வொரு சாகையின் முடிவில் இருக்கும் மந்திரமும், பிராம்மணமும், கர்மகாண்டத்தைச் சேர்ந்தவை. உபநிடதங்கள் ஞான காண்டத்தைச் சேர்ந்தவை. உபநிடதங்கள் ஈச, கேனகட, பிரச்சின, முண்டக, மாண்டூக்கிய, தைத்திரிய, ஐதரேய, சாந்தோக்கிய, பிருக தாரணியக முதலாகப் பலவாம்.

—✱—

## (இ) ஆகமம்:

சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டு அருளிச்செய்த முதல் நூல்கள் இரண்டனுள் ஆகமமும் ஒன்று. ஆகமம், தந்திரம் என்பன ஒரு பொருட் சொற்கள். ''ஆகம'' என்னுஞ் சொல்லை ஆ + க + ம எனப் பிரித்து ஆ—சிவஞானம் என்றும், க — மோட்சா தனம் என்றும், ம — மலநாசம் என்றும் பொருள் கொண்டு, ஆகமம் ஆன்மாக்களுக்கு மலத்தை நாசம் செய்து ஞானத்தை உதிப்பித்து மோட்சம் கொடுப்பதற்காக உபதேசிக்கப்பட்ட நூல் எனவும், ஆ + கம் + ம் எனப் பிரித்து ஆ-பசு, கம்-பதி, ம்-பாசம் எனப் பொருள் கொண்டு ஆகமம் பதி, பசு, பாச இலக்கணங்களை விரித்துக் கூறும் நூல் எனவும் பெரியோர் கூறுவர். சிவாகமங்கள் இருபத்தெட்டாம். அவை காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அம்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கிநேயம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகபிம்பம், புரோத்கீதம், இலலிதம், சித்தம், சந்தானம், சருவோக்தம், பரமேசுரம், கிரணம், வாதுளம் என்பனவாம். இவை ஆன்மாக்கள் மலத்தை அகற்றி இன்பம் பெறும் வழிகளைக் கூறும். சிவாகமங்கள் கடவுள் வழிபாட்டை இரகசியம், மந்திரம், மூர்த்தி, ஆலயம் ஆகிய முறைகளில் விரித்துக் கூறும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் சொல்லுக்கும், மனத்துக்கும் எட்டாத பொருளாய் இருத்தலால், அவரை மறைகள் கூறும் விதமாக வழிபடச் சிலராலேதான் முடியும். பெரியோர்கள் தம் உடலையே இறைவனாக வழிபடுவர். ஏனையோர் வழிபடுவதற்காகவே ஆலயங்களை அமைக்குமாறு ஆகமங்கள் கூறுகின்றன. ஆலயம் என்பதன் பொருள் "ஆன்மாக்களை இறைவனிடம் இலயிக்கும்படி செய்யும் இடம்" என்பதாம். சிவாலயத்தின் மூலத்தானத்தில் இலிங்கம் காணப்படும். அதற்குக் காரணம் கடவுள் உருவமாயும், அருவமாயும் இருப்பதேயாகும்.

சிவன் ஒருவனே பரமாத்மா ஆதலின், அவனுக்கே இலிங்கம் உரியது எனச் சைவாகமங் கூறும். சிவாகமங்களில் ஆலய அமைப்புச் செவ்வனம் விளக்கப்பட்டிருக்கின்றது. மூலத்தானம், அருத்தமண்டபம், மகா மண்டபம், மூர்த்திகள், பிராகாரம், பலிபீடம், கொடிமரம், நந்தி, கோபுரம் முதலியவற்றின் இயல்புகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இம்மையிலும், மறுமையிலும் இன்பம் பெறும் பொருட்டு, புதிய ஆலயங்களை அமைக்குமாறும், பழைய ஆலயங்களைப் புதுப்பிக்குமாறும் சிவாகமங்கள் கூறுகின்றன. சிவாகமத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு பாதங்கள் விளக்கப் பெற்றுள்ளன. சிவாகமங்களுள் ஞானகாண்டப் பகுதியை நிருவாண தீட்சை பெற்றோரும், கருமகாண்டப் பகுதியை விசேட தீட்சை பெற்றோரும் ஓதலாம் என்று பெரியோர் கூறுவர்.

சிவாகமங்கள் இருபத்தெட்டையுந் திருமூலர் தமது திருமந்திரத்தில் வர்ணித்துள்ளார். ஆகமங்கள் பல இன்னும் அச்சேறாமல் இருக்கின்றன. காமிகம், காரணம், வாதுளம், சுப்பிரபேதம், புட்கரம் ஆகிய ஐந்து ஆகமங்களும் கிரந்த எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளன. இவைகளில் சிலவற்றிற்குத் தமிழ் மொழி பெயர்ப்பும் உண்டு. ஆகமங்களிற் கூறப்பட்டுள்ள கும்பாபிடேகம், நித்திய பூசை முதலிய நற்கருமவியல்களை விளக்குவதற்குத் தனியாக நூல்களும் இயற்றப் பெற்றுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ஈ) புராணம்:

புராணம் வேதத்திற்குப் பூதக்கண்ணுடியாக உள்ளது. "புராணம்'' என்பதற்குப் பழைய செய்தி என்பது கருத்து. ஆன்மலாபமான சரித்திரங்களைப் புராணஞ் சொல்லுகின்றது. சுருங்கக் கூறின், வேதவாக்கியப் பொருள்களை வலியுறுத்தி, விரித்து அறிவிப்பது புராணத்தின் நோக்கமாகும். உலகின் தோற்றம், ஒடுக்கம், பாரம்பரியம், மனுவந்தரம், பரம்பரைக் கதைகள் ஆகிய இவ்வைந்தையுங் கூறுதலால் புராணம் "பஞ்சலக்கணம்'' எனவும் பெயர் பெறும். புராணங்கள் குறைந்த நிலையில் உள்ளவர்களுக்குப் பயன்படக் கூடியன. இவைகளைப் படிப்பதால் சிவபக்தி வளரும்; சமய உண்மைகள் நன்ருக மனத்திற் பதிவதன் பொருட்டுக் கதைகளில் வைத்து இவை பேசப்படும். வடமொழிப் புராணங்கள் பதினெட்டாம். அவை: பிரமம், பதுமம், வைணவம், சைவம், பாகவதம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்கிநேயம், பௌடியம், பிரமகைவர்த்தம், இலிங்கம், வராகம், காந்தம், வாமனம், கூர்மம், மற்சம், காருடம், பிரமாண்டம் என்பனவாம்; இவற்றுள் சிவபுராணம் பத்து: அவை: சைவம், காந்தம், இலிங்கம், கூர்மம், வாமனம், வராகம், பௌடியம், மற்சம், மார்க்கண்டேயம், பிரமாண்டம் என்பனவாம். விட்டுணு புராணம் நான்கு. அவை: நாரதீயம், பாகவதம், காருடம், வைணவம் என்பனவாம். பிரம புராணம் இரண்டு. அவை: பிரமம், பதுமம் என்பனவாம். சூரிய புராணம் ஒன்று. அஃது ஆக்கிநேயம். அன்றி உப புராணங்கள் பதினெட்டும் என்பர். தமிழிற் பல புராணங்கள் இருக்கின்றன. அவற்றுள் பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம் முதலியன மிகவும் சிறந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (உ) இதிகாசம்:

இராமாயணம், மகாபாரதம் ஆகிய இரண்டும் இதிகாசம் எனப்படும். "இதிகாசம்" என்னுஞ் சொல்லுக்கு இப்படி முன்பு இருந்தது என்பது பொருள். புராணம், உலகம் முன்பு எவ்வாறு இருந்தது. எப்படிக் கடவுளாற் படைக்கப்பட்டது என்பனபோன்ற பழைய செய்திகளைக் கூறும். இதிகாசம் தேவர், அசுரர், மக்கள் முதலியோர் களுக்கிடையே முன்பு நடந்த நிகழ்ச்சிகள், கதைகள் முதலியவற்றை விளக்குஞ் செய்திகளைக் கூறும். பெரும்பாலும் உபதேச பரம்பரையில் வந்த ஒரு கதையைப் பிரதானமாகக்கொண்டு, பல கிளைக் கதைகளோடு சேர்த்து விரித்துக் கூறும். இதிகாசம் வேதத்தில் வரும் மந்திரங்களுக்குப் பொருள் காண்பதற்குப் பேருதவியாய் அமைந்துள்ளது என்பர். சிபி, நளன், யயாதி முதலிய பண்டை அரசர்களின் வரலாறுகள் செய்யுள்களாக அமைக்கப்பட்டுச் சூதர், மாகதர் என்ற மரபினர்களால் வேள்விகளின் போதும், விழாக்களின் போதும் அரசர்கள் முன்னிலையிற் பாடப்பட்டு வந்தன. அவற்றை ஆக்கியானங்கள் என வழங்கினர். இவ்விதம் பல ஆக்கியானங்கள் பாரதத்துள் சேர்க்கப்பட்டுள்ளன. இதிகாசமும் புராணத்துள் அடங்குமென்று அறிஞர்கள் கூறுவர்.

—✱—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. சைவ நாற்பாதங்களும் நால்வகை முத்திகளும்

உலக இன்பங் கருதிச் செய்யப்படுவன நல்வினைகள். அவை நிலையான இன்பத்தைத் தருவதில்லை. உலகப் பயன் கருதாது வீடு கருதிச் செய்யும் சரியை, கிரியை, யோகம் என்பன இருவினை ஒப்பினை உண்டாக்கி, ஞானத்திற்கு வழி திறக்கும்.

நல்வினைகள் எல்லாம் பசு புண்ணியம் எனப்படும். சரியை, கிரியை, யோகம் சிவபுண்ணியம் எனப்படும். பசு புண்ணியம், சிவபுண்ணியம் என்ற பகுப்பு, செய்கின்ற வர்கள் கருத்து வேறுபாடு பற்றியே கொள்ளப்படும்.

சிவ புண்ணியத்தைப் பொது என்றும், சிறப்பென்றும் இரண்டாகப் பிரிப்பர். வேள்வியில் பல தேவர்களுடன் சிவ பிரானை வழிபடுவது பொதுவாகும். சிவாலயத்தில் சிவ பிரானை வழிபடுவது சிறப்பாகும். சிறப்புச் சிவபுண்ணியம், சிவதீட்சை இன்றிச் செய்யப்படுவது, சிவதீட்சை பெற்றுச் செய்யப்படுவது என இரு பகுதிகளாய் அடங்கும். அன்றி மெய்யன்பாற் செய்யப்படுவது, புகழ் அதிகாரம் முதலி யன கருதிச் செய்யப்படுவது என இரு பகுதிகளாகக் கூறப் படுவதும் உண்டு. இவை முறையே உண்மை எனவும், உபாயம் எனவுங் கூறப்படும்.

மக்கள் ஒவ்வொருவருங் கடவுளுக்கும், மெய்யடியார் களுக்குந் தொண்டுகளும் வழிபாடும் செய்து நிலையான இன்பத்தைப் பெற முயல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான், உயிர்கள் படிமுறையால் உணர்ந்து உய்வதற் பொருட்டு, தூலம், சூக்குமம், அதிசூக்குமம் என்னும் வடிவங்களைக் கொண்டருளி, அவ்வவ் வடிவங்களில் வழிபடும் முறையை வேத சிவாகமங்களில் உணர்த்தி அருளினர். சரியை இறைவனது தூலவடிவத்தை வழிபடுவதாகும். கிரியை இறைவனது சூக்கும வடிவத்தை வழிபடுவது. யோகம் அவனது அதிசூக்கும வடிவத்தை வழிபடுவது. ஞானமாவது அண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய பரம்பொருளை நேரே வழிபடுவது. இவை உலகப்பற்றேடு செய்யப்படும் வழி உபாய மார்க்கம் என்றும், உலகப் பற்றுச் சிறிதும் இன்றிச் செய்யப்படும் வழி உண்மை மார்க்கம் என்றும் கூறப்படும்.

## (அ) சரியை

சரியை புற வணக்கமாம். இது சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என நான்கு வகையினதாம். சரியையிற் சரியை, திருக்கோயில் அலகிடல், மெழுகுதல் முதலியனவாம். சரியையில் கிரியை, ஒரு மூர்த்தியைப் பூசித்தலாம். சரியையில் யோகம், நெஞ்சில் உருத்திரக் கடவுளைத் தியானஞ் செய்தலாம். சரியையில் ஞானம், முன் கூறிய தியான பாவனையில் உறைப்பான ஓர் அனுபவ உணர்வு நிகழ்தலாகும். இதற்குப் பலன் புவன பகுதிகளின் உலகமெய்தி, ஆண்டுள்ள போகங்களை நுகர்வது ஆகும். அது சாலோக முத்தி எனப்படும்.

## (ஆ) கிரியை

கிரியை அகப்புற வணக்கம். இது கிரியையிற் சரியை, கிரியையிற் கிரியை, கிரியையில் யோகம், கிரியையில் ஞானம் என நான்கு வகைப்படும். கிரியையிற் சரியை சிவ பூசைக்கு வேண்டும் உபகரணங்கள் எல்லாஞ் செய்து கொள்ளுதலாம். கிரியையிற் கிரியை, சிவாகமத்தில் விதித்தவாறே ஐவகைச் சுத்தி முன்னுக, சிவலிங்க வடிவிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் பூசனையாம். கிரியையில் யோகம், அகத்தே பூசை, ஓமம், தியானம் மூன்றிற்கும் மூவிடம் வகுத்துக்கொண்டு செய்யப்படும் அந்தரியாகமாம். கிரியையில் ஞானம், மேற் கூறிய அந்தரியாக உறைப்பின் கண் நிகழும் ஓர் அனுபவ உணர்வாம். இதற்குப் பயன் புவனபதிக்கு அணுக்கத் தொண்டராய் வைகுதல். அது சாமீபமுத்தி எனப்படும்.

## (இ) யோகம்

யோகம் அக வணக்கம். இது யோகத்திற் சரியை, யோகத்திற் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம் என நான்கு வகையினதாம். யோகத்திற் சரியை இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் என்னும் நான்குமாம். இயமம்: கொல்லாமை, வாய்மை, கள்ளாமை, பிறர் மனை விரும்பாமை, இரக்கம், வஞ்சனையில்லாமை, பொறையுடைமை, மனங்கலங்காமை முதலியனவாம். நியமம்: தவம், சந்தோஷம், தேவபத்தி, தானம், பூசை, ஞான சாத்திரங் கேட்டல், செபம், விரதம் முதலியனவாம் ஆசனம், யோகம் எட்டினுள் ஒன்றாகிய இருக்கை, பிராணாயாமம், பிராணவாயுவைத் தடுத்தல். யோகத்திற் கிரியை, பிரத்தியாகாரமுந் தாரணையுமாம். பிரத்தியாகாரம் மனத்தை இந்திரிய விடயங்களில் விடாது தடுத்தல். தாரணை, மனத்தை அகத்தில் ஒரு தானத்தில் நிறுத்துதல். யோகத்தில் யோகம், தியானமாம். யோகத்தில் ஞானம், சமாதி. யோகத்திற்குப் பயன் புவனபதிக்கு ஒத்த வடிவுடைமையாம். அது சாரூபமுத்தி எனப்படும்.

## (ஈ) ஞானம்

ஞானம் அறிவால் எங்கும் வழிபடுவது. இது ஞானத்திற் சரியை, ஞானத்திற் கிரியை, ஞானத்தில் யோகம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானத்தில் ஞானம் என நான்கு வகையினதாம். ஞானத் திற் சரியை, ஞான நூல்களைக் கேட்டல். ஞானத்திற் கிரியை கேட்டவற்றைச் சிந்தித்தல். ஞானத்தில் யோகம், சிந்தித்தவற்றைத் தெளிதல். ஞானத்தில் ஞானம், நிட்டை கூடுதல். அபர ஞானப் பயன் புவனபதிகளால் அனுட்டிக் கப்படுதலாம். இந்நெறி நின்றோர் சாயுச்சிய முத்தி பெறு வர்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு மார்க்கங்களையுந் தாச மார்க்கம், சற்புத்திர மார்க்கம், சக மார்க்கம், சன்மார்க்கம் எனவுங் கூறுவர். சரியை முதலிய வற்றை முறையே அரும்பு, மலர், காய், கனி போல்வன என்று தாயுமான சுவாமிகள் கூறுவர். சாலோக, சாமீப, சாரூப முத்திகளை அபரமுத்தி என்றும், சாயுச்சிய முத்தி யைப் பரமுத்தி என்றுஞ் சாத்திரங்கள் கூறும்.

—*—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. திருக்கோயில் அமைப்பு

நாம் இறைவனை வழிபட அமைந்த இடம் திருக் கோயில். இறைவனை வழிபடும் இடம், மனம் ஒன்றி வழி பாடு நிகழ்த்துதற்குரிய சிறந்த இடமாக இருத்தல் வேண்டும். இயற்கை அழகு நிறைந்த இடமே சிறந்த இட மாகும். பழம்பெருங் கோயில்கள் இருக்கும் தலங்கள், அத் தகைய இடங்களாக இருத்தலைக் காணலாம். ஆற்றங்கரை களிலும், மரச்சோலைகளிலும், மரத்தடியிலுந் தெய்வ உருவ மைத்து மக்கள் முதலில் வழிபட்டனர்; அங்கு சிறு கட்ட டமும் அமைத்தனர். மலைக்குகைகளிலும் அமைத்தனர். பின்பே இப்போதமைந்திருக்கும் முறையிலே கோயில்கள் எழுந்தன. இவை ஆகம முறைப்படி அமைந்தவை. இக் கோயில்கள் மக்களின் உடலமைப்பு முறையிலே அமைக்கப் பெற்றுள்ளன; மனத்தில் இறைவனை வழிபடும் முறையைக் கோயில்களில் வழிபடும் முறை அறிவிக்கிறது.

ஆகவே, ''கோயில்'' என்பது உடல் எனுங் கோயிலின் புறச்சின்னமாகும். புறச்சின்னத்தை உடலிலுள்ள தத்து வங்களுக்கு ஒத்திருக்கும்படி கட்டவேண்டும் என ஆகமங் கள் கூறுகின்றன. சுற்றிலும் மதிலெடுத்து, ஒருபுறம் பெரிய வாயில் அமைத்து, அங்கு ஒரு பெரிய கோபுரம் அமைக் கின்றனர். அக்கோபுரத்திற்குத் தூலலிங்கம் என்று பெயர். தொலைவிலிருக்கும் இதனைக் கண்டு தெய்வ வடிவமாக எண்ணி வணங்குவது முறை. கோபுரத்தைக் காணும் போதெல்லாம், மக்களுக்குத் தெய்வ நினைவு உண்டாகும் என்னும் நோக்கத்துடன் இதனை அமைத்துள்ளனர். இதனை ''அரசகோபுரம்'' என்றுங் கூறுவதுண்டு.

அரச கோபுரத்தில் உலகிலுள்ள தாழ்ந்ததிலிருந்து உயர்ந்ததுவரை எல்லாப் பொருள்களின் உருவங்களையுங் காணலாம். உலக நினைவை அக்காட்சி உண்டாக்குகிறது. இக் கோபுரத்தின் வாயில்கள், ஒன்றன் மேல் ஒன்றாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றை எண்ணிக்கையாகவே இருக்கும். வாயில்கள் மூன்ருக இருந்தால், நனவு, கனவு, சுழுத்தி என்னும் மூன்று அவத்தைகளையும், ஐந்தானுல் ஐம்பொறிகளையும், ஏழானுல் ஐம்பொறிகளுடன் மனம், புத்தி என்னும் இரண்டையுங் குறிக்கின்றன என்பர். எத்தனை வாயில்கள் இருப்பினுந் தரைமட்டத்திலுள்ள வாயில் வழியாகவே நாம் உட்செல்ல முடியும். இவ்வாறே கடவுள் நாட்டஞ் செல்லும்போது நம் மனம் ஒன்றே பயன்படும் என்பர்.

கோபுரத்தைக்கடந்து உள்ளே சென்ருல், நம் காட்சிக்கு வருவது பலிபீடம். அதன் அருகிற் சென்று வீழ்ந்து வணங்கும்போது நம் மனத்தில் உள்ள கீழான இயல்புகளையெல்லாம் பலிகொடுத்துவிட்டு, மேலான இயல்புடன் நாம் கோயிலுக்குள் இறைவனை வணங்கச் செல்கிருேம். பின்னர் இறைவனைச் சுற்றி வலம்வருதல் பிராணுயாம முறையைக் காட்டுகிறது. பலிபீடத்தைச் சார்ந்திருப்பது கொடிக் கம்பம். அதன் முகம் உள்முகமாக அமைக்கப்பட்டிருக்கிறது. கொடிக்கம்பத்திற்கு அடுத்திருப்பது உள்ளிருக்கும் தெய்வத்திற்குரிய வாகனம். அஃது ஆன்மாவைக் குறிக்கிறது. ஆன்மா உள்முகமாக இறைவனை நோக்குகிறது. இறைவனை அடைவது ஆன்மாவின் குறிக்கோள் என்று அது காட்டுகிறது. மற்றுங் கடவுளைச் சென்றடைவதற்கு எப்போதும் மனம் கடவுள் நாட்டத்திலேயே இருக்க வேண்டும் என்பதை அந்த வாகனம் இறைவனை நோக்கியவாறே அமைந்திருக்கும் நிலை அறிவிக்கிறது. இறைவனைச் சுற்றிவரும் அடியவன் வாகனத்தையும் சேர்த்தே சுற்றிவருகிருன். வாகனத்திற்கும் இறைவனுக்குங் குறுக்கே செல்வது வழிபாட்டு முறைக்கு மாருகும்; இஃது இடையூறு செய்வதுமாகும்.

கோயிலின் கருப்பக்கிருகந் திரையினுல் மறைக்கப்பெற்று இருளாக உள்ளது. காற்றும் வெளிச்சமும் நன்ருகப் பரவாத இடம் அது. ஆகமவிதி அவ்வாறிருக்க வேண்டுமென்று கூறுகிறது என்பர். கருப்பக் கிருகத்தின் அருகிற் சென்று, இறைவனைக் காண ஒளி வரும்வரை அடியவன் காத்-

திருக்கின்ருன். சிறிது நேரத்தில் மணியொலி கேட்கிறது: பின்னர் திரை விலகுகிறது. தீப ஆராதனையாலும், விளக்கினாலும் வெளிச்சமுண்டாகி இறைவன் காட்சி உண்டாகிறது. மனமே கருப்பக்கிருகம். அங்கு நிகழவேண்டிய ஞானக்காட்சியின் புறத்தோற்றமே இது. மனத்தை உள்முகமாகச் செலுத்தும் ஆன்மசாதகன் முதலிற் காரிருளையே தன்னுட் காண்கின்ருன். மனத்தை உள்முகமாக அமைத்து வைத்திருக்கப்பழக வேண்டும். அப்பழக்கத்தால் உள்ளத்தினுள் இனிய ஓசையும், பிறகு ஞானஒளியும் உண்டாகின்றன.

ஆகவே, ஆகம்முறைப்படி அமைந்த கோயில்கள் சுற்று மதிலும், பெருங் கோபுரமும், வாயிலும், பலிபீடமும், கொடிக் கம்பமும், வாகனமும், கருப்பக்கிருகமும் உடையனவாகி, நம் உள்ளக்கோயில் அமைந்திருக்கும் முறையை உணர்த்துகின்றன என அறிகிரேம்.

''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானுர்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே.''

என்பது திருமூலர் திருமந்திரம்.

(பெருங்கோயில் — கருப்பக்கிருகம், வாய் — சுழுமுனை நாடித் தானத்தின் வாயில், அது குண்டலினித் தானமாகிய மூலதாரம். கள்ளப்புலனைந்து—ஐம்புலன் வழிச்செல்லும் அறிவை, உள்முகப்படுத்தித் தியானத்தில் அழுந்தலால் உண்டாகும் ஞான ஒளி.)

இப்பாடலில், கோயிலுக்கு இன்றியமையாத பகுதிகளாகிய கருப்பக்கிருகம், ஆலயம், கோபுரவாசல், சிவலிங்கம், விளக்கு ஆகிய இவற்ருேடு, நம் சரீரத்தில் முறையே உள்ளம், ஊனுடம்புவாய், உயிர், ஐம்புலன் வழிச்செல்லும் அறிவு ஆகியவை ஒப்பிட்டுக் கூறப்பட்டிருத்தலைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களில் ஒன்று முதல் ஐந்து வரை ஒற்றைப் படையில் சுற்றுப் பிராகாரங்கள் (ஆவரணங்கள்) உள்ளன. பிள்ளையார் கோயில் போன்ற சிறு கோயில்களில், ஒரு சுற்றுப்பிராகாரமே அமைந்திருக்கும். நமது தூலசரீரத்துள்ளே உயிர் இருத்தல்போல, ஒரு பிராகாரமே அமைந்த கோயிலினுள் மூல மூர்த்தி இருக்கும். மூன்று பிராகாரம் அமைந்த கோயில்கள் நம் தூலசரீரம், சூக்குமசரீரம், காரணசரீரம் ஆகிய மூன்றையும் ஒப்ப அமைந்தவை. ஐந்து பிராகாரங்களிருப்பின், அவை நம் உடலில் உள்ள (அ) அன்னமயகோசம், (ஆ) பிராணமயகோசம், (இ) மனோமயகோசம், (ஈ) விஞ்ஞானமயகோசம், (உ) ஆனந்தமயகோசம் என்ற ஐந்து பகுதிகளை ஒப்பனவாகும்.

கோயிலின் ஒவ்வொரு பகுதியில், அல்லது சுற்றுப்பிராகாரங்களில் விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், தட்சணாமூர்த்தி, சபாபதி, சூரிய சந்திரர், துர்க்கை, இலட்சுமி, சரசுவதி, சண்டேசுவரர், நவக்கிரகங்கள் முதலிய மூர்த்திகள் உண்டு. மூல மூர்த்தியாகிய சிவலிங்கத்தின் சந்நிதி மண்டபத்தில், இடப்பக்கமாக உமாதேவியார்க்குரிய கோயில் இருக்கும். அங்ஙனமின்றிப் புறம்பாகத் தேவி கோயில்கள் உள்ள ஆலயங்களும் உண்டு.

மேலும், கோயிலுள்ளே அபிடேக தீர்த்தக்கிணறு, மடைப்பள்ளி, களஞ்சிய அறை, வாகனசாலை, நீராடுவதற்குரிய தீர்த்தத் திருக்குளம், வசந்த மண்டபம், யாகசாலை, உற்சவ மூர்த்திகளாகிய உலோக விக்கிரக மூர்த்திகள் எழுந்தருளியிருக்குஞ் சபாமண்டபம் அல்லது கல்யாண மண்டபம், கண்டாமணி மண்டபம் போல்வனவும் அங்கங்கே அமைந்திருக்கக் காணலாம். சில ஆலயங்களில் நந்தவனமும் அமைந்திருக்கும்.

## மண்டபங்கள்

கோயிலின் பிரதான மூர்த்தி இருக்கும் இடமாகிய கருப்பக்கிருகம் 'மூலஸ்தான மண்டபம்' எனப்படும். அது முதலாக வெளிக்கோபுரமாகிய இராசகோபுரம் வரையில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையே ஒன்றன் பின் ஒன்ருகப் பல மண்டபங்கள் இருக்கும். அவை (அ) அர்த்த மண்டபம், (ஆ) அந்தரான மண்டபம், (அல்லது மணி மண்டபம்), (இ) மகா மண்டபம், (ஈ) நிர்த்த மண்டபம், (அல்லது சோபன மண்டபம்) (உ) ஸ்தம்ப மண்டபம் (அல்லது உருத்திர கோபுர மண்டபம்) (ஊ) அநுமண்ணிமண்டபம் என்பன. இவற்றுட் சில மண்டபங்கள் குறைய அமைத்தலும் உண்டு; ஆலயச் சூழ் நிலைமை, செல்வ நிலைமை முதலியவற்றைப் பொறுத்து ஆலயம் பெரிதாக அல்லது சிறியதாக வகுத்தமைக்கு ஏற்ப மண்டபங்கள் மிகுதலும் குறைதலுமுரியவாகும்.

சிவன் கோயில்களில் சிவலிங்கமும், விநாயகர் கோயிலில் விநாயகரும், சுப்பிரமணியர் ஆலயங்களில் சுப்பிரமணியக்கடவுளும், அம்பாள் ஆலயமாயின் அம்பாளும் கருப்பக்கிருக மண்டபத்துள் இருக்கும் மூலமூர்த்தியாகும். கருப்பக்கிருகத்தின் மேற்பாகம் உயரமாக விமானம் (தூபி) அமைந்தும், அதன் உச்சியில் கலசங்கள் பொருந்தியும் இருக்கும். அந்தத் தூபி ''தூலலிங்கம்'' எனப்படும். கோபுரமில்லாத ஆலயங்களிலும், இத்தூபியைத் தூரத்திற் கண்டவுடனே அவ்வாலயத்துள்ள கடவுளாகப்பாவித்து வணங்குவதற்கு உரியதாக அஃது உயரமாக அமைக்கப்பட்டுள்ளது. 'தூலலிங்க மாந்தூபி சூக்குமமா முள்ளிலிங்கம், ஏலும் பலிபத்திரம்' என்பது சைவ சமய நெறி.

அர்த்த மண்டபத்தில் தீபக்கால், தூபக்கால் முதலிய பூசைப் பொருட்கள் வைக்கப்பட்டிருக்கும். சுவாமியைத் தரிசிக்கலாகாத அபிடேக காலம், நைவேத்திய காலம் முதலிய காலங்களில், இம்மண்டபத்தின் நடுவே ஒரு திரைச்சீலை தொங்கவிடப்பட்டிருக்கும். அத்திரையின் அருகில் உட்பக்கமாகவே பூசகர் நின்று கால பூசையின் ஆராதனைகளைச் செய்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகா மண்டபத்திலே, மூலமூர்த்திக்கு எதிரில் நித்தி யாக்கினி ஓம குண்டமும், தாமிரமயமாகிய நந்தி பலிபீடங் களும், தர்ப்பணமும் [தர்சனக் கண்ணாடி] அமைக்கப்பட்டி ருக்கும். சிவலிங்கம் மூலமூர்த்தியாயின், இம்மண்டபத்தின் ஒரு பக்கஞ் சார உமாதேவியார் கோவில் அமைந்திருக் கும்.

ஸ்தம்ப மண்டபத்தில் நந்தி, பலிபீடம், கொடிமரம் ஆகியவை உள்ளன. ஆராதனைக் காலங்களில் சனங்கள் பலரும் இம் மண்டபத்தில் நின்று தரிசனஞ் செய்தற்குரிய யதாக இருத்தலின், இது தரிசன மண்டபம் எனப்படும். கொலுமண்டபம், ஆயிரக்கால் மண்டபம், நூற்றெட்டுக் கால் மண்டபம் முதலாயினவும் உண்டு.

## நந்தி

சிவலிங்கப் பெருமானுக்கு எதிரில் உள்ள நந்தி, (இடப தேவர்) பசுவாகிய ஆன்மாவைக் குறிக்கின்றது. அது தனக்குப் பின்னேயுள்ள பலிபீடத்துக்குச் சமீபமாய், அதனை நோக்கியிராமல், சிவலிங்க மூர்த்தியை நோக்கி, அவருக்கு எதிர்முகமாக இருக்கிறது. அந்த நிலை, ஆன்மா தன்னோடு அநாதியே கலந்துள்ள ஆணவம் முதலிய பாசப்பற்றினைக் கைவிட்டு, அவற்றிற் பராமுகமுடைய தாய்ச் சிவத்திலே பற்று வைத்து, அவரைச் சரணடைந்து, அவரருளை வேண்டிச் சரியை, கிரியை முதலிய சிவபுண்ணிய வழியில் நின்றால், சிவத்தோடு அத்துவிதமாகிய பேரின்ப அநுபவத்தைப் பெறமுடியும் என்பதை உணர்த்துகின்றது.

''நந்தி'' என்பது சிவத்துக்குப் பெயர்; ''நந்திநாமம் நமச்சிவாய'' என்னுஞ் சம்பந்தர் தேவாரத்தாலும் அறி யலாம். அப்பெயர் இடப தேவர்க்கு ஆகி வழங்குவது, பாசங்களின் நீங்கிய ஆன்மாவானது, சிவத்துவம் பெற்றுச் சிவத்தோடு அத்துவிதமாய் நிற்கும் என்ற குறிப்பை உணர்த்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலிபீடம்

நந்திக்குப் பின்னே உள்ள பலிபீடம் பத்திரலிங்கம் எனப்படும்; இதனை 'பாசத்தை நீக்குஞ் சிவசக்தி' என்றுங்கூறுவர். அதை வணங்கும் போது அதில் நம்முடைய அகங்காரத்தை (தீய எண்ணங்கள், வினைகள், ஆன்மபோதம் இவற்றை)ப் பலியிட்டு, 'என் செயலாவது யாதொன்றுமில்லை யினித்தெய்வமே உன் செயலே எல்லாம்' என்று தெளிந்து, சிவனருள் வசப்பட்டு நிற்பின், ஆன்மா பாசத்தின் நீங்கிச் சிவத்தை அடையும் என்பதைக் காட்டுகின்றது.

"ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாகும்
ஆய பசுவும் அடலே றெனநிற்கும்
ஆய பலிபீட மாகுதற் பாசமாம்
ஆய வரனிலை யாய்ந்துகொள் வார்கட்கே"

என்பது திருமூலர் திருமந்திரம்.

"தூலலிங்க மாந்தூபி சூக்குமமாம் உள்ளிலிங்கம்
ஏலும் பலிபத் திரம்" —சைவ சமய நெறி

பத்திரலிங்கம் — மங்கலத்தை உண்டாக்கும் லிங்கம், மங்கலமாவது பாச நீக்கம்.

## கொடிமரம்

திருவிழாக் காலத்திலே கொடிமரத்திலே ஒரு சீலை சுற்றப்பட்டிருக்கக் காணலாம். விழாத் தொடக்க நாள் முதல் முடிவு நாளாகிய தீர்த்தவிழா நாள்வரை அது அவ்வாறிருக்கும். சிவோற்சவத்திற்குச் சீலையிலே அவருடைய வாகனமாகிய இடபம் எழுதப்பட்டிருக்கும். அந்தச் சீலையோடு ஒரு தருப்பைக் கயிறும் சேர்ந்திருக்கும். கொடி மரஞ் சிவத்தையும், பசு எழுதப்பட்ட சீலை ஆன்மாவையும், தருப்பைக் கயிறு பாசத்தையும், அச்சீலையின் உள்ளே வைத்து மூடப்பட்டுள்ள மஞ்சள் பூசப்பட்ட நூற்கயிறு திருவருளையுங் குறிக்கும் என்று சிவாகமம் கூறுகின்றது.

'பாசத்தாற் கட்டுண்ட ஆன்மா, திருவருளாற் சிவனுடைய பஞ்சகிருத்தியங்களுக்கு உட்பட்டு, இறுதியிற் சிவத்தோடு சேர்க்கப்படுகின்றது' என்ற தத்துவத்தை, திருவிழாக்காலத்திற் காணப்படுங் கொடி மரக்காட்சி குறிக்கின்றது என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. இறைவன் மூர்த்தங்கள்

பதி:

கடவுள் மேலானவர்; அருவமும் உருவமும் அற்றவர்; குணமுங் குறிகளும் இல்லாதவர்; மலத்திற் பொருந்தாதவர்; அழிவற்றவர்; உயிர்களது அறிவுக்கு அறிவாகி நிற்பவர்; சலனம் அற்றவர்; ஆனந்தமே வடிவானவர்; மாறுபட்ட உணர்வினரால் சென்று அடைய முடியாதவர்; தம்மை வழிபடுவோர்க்குச் சென்றடையும் முத்தி நிலையாய் உள்ளவர். அணுவுள் அணுவாகவும், பெரியனவற்றுள் பெரிதாகவும் விளங்குபவர். அறிவால் தெளிந்த பெரியோர் அவரைச் ''சிவம்'' என வழங்குவர்.

சிற்றறிவை உடைய உயிர்கள் கடவுளை எப்படிப்பட்டவர் என்று அறிந்து வழிபடற்பொருட்டு, அவருக்கு எட்டுக் குணங்கள் கற்பிக்கப்பட்டுள்ளன. அவை, தம் வயத்தராதல், தூய உடம்பினராதல், இயற்கை உணர்வினராதல், முற்றும் உணர்ந்தவராதல், இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கியவராதல், பேரருள் உடையவராதல், முடிவில் ஆற்றல் உடையவராதல், வரம்பில் இன்பமுடையவராதல் என்பனவாம். இவற்றை எல்லாம் சத், சித், ஆனந்தம் எனும் மூன்றனுள் அடக்கி உண்மை, அறிவு, இன்பம் எனும் பொருட்பட ''சச்சிதானந்தம்'' என்றுங் கூறுவர்.

சிவனுடன் அவரது வல்லமையாகிய பராசக்தி வேறுபாடின்றி இருக்கின்றாள். அவள் இச்சை, ஞானம், கிரியை எனும் மூன்று திறங்களாக விரிவாள். சிவன், திருவருளாகிய அச்சக்திகளுடன் சேர்ந்து ஐந்தொழில்களைச் செய்கின்றார். ஐந்தொழில் பஞ்சகிருத்தியம் என்றுஞ் சொல்லப்படும். அவை: படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பனவாம். இவற்றைச் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்றுஞ் சொல்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமசிவன் ஐந்தொழில்களைச் செய்ய எடுக்குந் திருமேனிகள் அருவம், உருவம், அருவுருவம் என்பன; இவற்றை முறையே நிட்களம், சகளம், நிட்களசகளம் என்றுங் கூறுவர். சிவபெருமான் அருவத்திருமேனி உடையபொழுது சிவன் எனவும், உருவத் திருமேனியை உடையபொழுது மகேசுரன் எனவும், அருவுருவத் திருமேனியை உடைய பொழுது சதாசிவன் எனவும் பெயர் பெறுவர். பெரியோர் ஐந்தொழிலையும் பரமசிவனது திருவிளையாட்டு என்று கூறுவர். அவன் உயிர்களைப் பிறப்பாகிய துன்பக் கடலினின்றும் மீட்பதற்கு அருள் புரிவதாகவுங் கூறுவர்.

சிவபெருமான் ஆன்மாக்களுக்குப் போகம், யோகம், முத்தி முதலியவற்றை உதவவும், வினைகளை நீக்கவுஞ் சந்திரசேகரர் முதலிய இருபத்தைந்து மூர்த்தங்களை எடுத்துள்ளார். அன்றியும் விநாயகர், வைரவர், வீரபத்திரர், சுப்பிரமணியர் என்னும் மூர்த்தங்களையுங் கொண்டருளியுள்ளார். இம்மூர்த்தங்களுக்குஞ் சிவபெருமானுக்கும் பேதமில்லையாம். கடவுள் நம்மிடம் அளவில்லாத அன்பு உடையவராக இருக்கின்றார். நம்க்கு வேண்டிய யாவற்றையுந் தாமாகவே தந்தருளுவார். நாம் அவரை நினைந்து, துதித்து, வாழ்த்தி வணங்க வேண்டும்.

## சிவலிங்கம்:

சிவபெருமான் புறத்தே சிவலிங்கம் முதலிய திருமேனிகளிலே ஆதாரமாக நின்று, ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டை ஏற்றருளுகின்றார். இலிங்கம் என்ற சொல்லுக்கு "அடையாளம்-குறி" என்பதுபொருள். பிரபஞ்சம் இலிங்கத்திடத்தே ஒடுங்கி விரிகின்றது. சிவலிங்கஞ் சதாசிவ வடிவத்தைக் குறிக்கும். இதனால் மக்கள் கடவுள் உருவமாயும், அருவமாயும் இருக்கின்றார் என்பதை உணர்ந்து கொள்ளலாம். சிவன் ஒருவனே பரமாத்மா, அதனால் அவனுக்கே சிவலிங்கம் உரியதெனச் சிவாகமங் கூறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவலிங்கம், படைத்தல், முதலிய ஐந்தொழிலைச் சித்திரிக்கின்றது. ஆகமங்களில் இலிங்க வேறுபாடுகள், பூசைக்கு ஏற்ற இலிங்கங்கள், சிவலிங்க பிரதிட்டை முதலியன விபரிக்கப்பட்டுள்ளன. சிவலிங்கம், பரார்த்தலிங்கம், இட்டலிங்கம் என இருவகைப்படும். பரார்த்தலிங்கம், சிவபெருமான் சங்காரகாலம்வரை வெளிப்பட்டு நின்று ஆன்மாக்களுக்கு அனுக்கிரகிக்கப்பெறும் இலிங்கமாம். இது சுயம்புலிங்கம் முதலாகப் பல்வகைப்படும். இட்டலிங்கமாவது ஆசாரியார் விசேட தீட்சை செய்து, சீடனைப் பார்த்து "நீ உள்ளளவும் இவரைக் கைவிடாது நாள்தோறும் பூசி" என்று கொடுப்ப "அவ்விதமே செய்வேன்" என்று உறுதியுரைத்துச் சீடன் வாங்கிப் பூசிக்கும் இலிங்கமாம். இதுவும் வாணலிங்கம் முதலாகப் பலவகைப்படும். சிவலிங்கம் சோதிக்கொழுந்து வடிவமாய் உள்ளது. சோதி என்பது ஞானசோதியாம். அதாவது, உயிர்களது பாசங்களை எரிக்கும் ஞான நெருப்பாம். எனவே, சிவலிங்கப் பெருமானை வணங்குவோர் தம்மை அந்த ஞானசோதியிடம் ஒப்படைத்து விட்டால், அது அவர்களுடைய பாசங்களை எரித்துப் பரிசுத்தர் ஆக்கிவிடும். திருமூலர் சிவலிங்கத்தைப் பிரணவ ரூபம் என்பர். பிரணவம் ஞான வடிவமாகும்.

இற்றை நாள் ஆராய்ச்சியாளர், ஆதியில் சோதி வடிவினனுன சூரியன் வணக்கமே உலகில் நிலை பெற்றிருந்ததென்றும், அவனைத் தூண் வடிவத்தில் வைத்து வணங்கினர் என்றும், அத்தோற்றத்துடன் சிவலிங்கத்திற்குத் தொடர்புண்டு என்று கருத இடம் உண்டென்றுங் கூறுவர்.

## உமாதேவியார்:

உமாதேவியார் சிவபெருமானுடைய திருவருட் சத்தியாவார். சத்தியாவது நெருப்புஞ் சூடும்போல் சிவத்துடன் வேறுபாடு இன்றி உள்ள வல்லமையாகும்.

திருவருட்சத்தி யெனப்படும் பராசக்தியில் இருந்து ஆதிசத்தி தோன்றும். ஆதிசக்தியைத் திரோதான சக்தி என்றுங் கூறுவர். ஆதிசத்தியில் இருந்து, இச்சா சத்தி, ஞானசத்தி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியா சத்திகள் தோன்றும். இச்சா சத்தி ஆன்மாக்களுக்கு அருள் செய்யும். கிரியா சத்தியில் இருந்து ஜநநி, ஆரணி, குரோதயித்திரி என்னுஞ் சத்திகள் தோன்றும். இவை முத் தொழில்களையுஞ் செய்யும். ஞானசத்தி ஞானத்தைக் கொடுக்கும். சிவசத்தி ஒன்றே தொழில் வேறுபாட்டால் இங்ஙனம் பல பெயர்களைப் பெற்று நிற்கின்றது. நமது தாயார் நம்மை அன்புடன் காப்பது போல் சிவசத்தியாகிய உமாதேவியார் நம்மை எல்லாம் அன்பினுல் காத்தருளுகின்ருர். உலகிற்கு அருள் புரிதற்காக உமாதேவியார் பல அவதாரங்களை எடுத்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

முன்னொருகால் உமாதேவியார் தக்கனுக்கு மகளாகப் பிறந்து வளர்ந்தார். உரிய காலத்தில் தக்கன் சிவபெருமானுக்கு மணஞ் செய்து கொடுத்தான். தக்கன் சிவனை இகழ்ந்தான். அதனுலே உமாதேவியார் தக்கனது யாகத்தை அழிக்க வேண்டுமென்று வேண்டினுர். சிவபெருமான் வீரபத்திரரைத் தோற்றுவித்துத் தக்கனது யாகத்தை அழிப்பித்தார்.

இமயமலை அரசன் செய்த தவத்தினுல் உமாதேவியார் அவனுக்கு மகளாய் அவதரித்தார். தவஞ்செய்து சிவபெருமானை அடைந்தார்.

மலையத்துவச பாண்டியனுக்கு அவன் செய்த தவப் பயனுய் உமாதேவியார் மகளானுர். மணிமுடி கவித்து அரசாண்டார். மதுரையில் சிவபிரானுல் ஏற்றுக்கொள்ளப் பட்டார்.

உமாதேவியார் உயிர்களை உய்விப்பதற்காகக் காமாட்சி, சிவகாமி, விசாலாட்சி முதலிய திருப்பெயர்களைத் தாங்கி அருள் செய்கின்ருர். நாம் அவரை வணங்கி உய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயகர்:

விநாயகக் கடவுளைச் சிவபெருமானுடைய மூத்த திருக்குமாரர் என்று வேதாகமங்கள் கூறும். விநாயகக்கடவுளின் திருமுகம் யானைமுகம் போன்றிருக்கின்றது. அது பிரணவ வடிவத்தைக் குறிக்கின்றது. பிரணவஞ் சுத்த ஞானமாகும். ஆகவே, விநாயகக் கடவுள் சுத்த ஞானத்தையே வடிவமாக உடையவர் எனப் பொருள்படும். சிவபெருமானும் ஞானமே வடிவமாக உடையவர். எனவே இருவருக்கும் வேறுபாடு இல்லையாகும். இவருக்கு விக்கினேசுரர், விநாயகர், கணபதி, சியேட்டராசர் முதலிய திருப்பெயர்கள் உண்டு. மக்கள் ஞானத்தைப் பெறுவதற்காக அவரை வணங்குகின்றனர். மக்கள் எத்தொழிலைச் செய்யப் புகினும் முதலில் விநாயகரை வழிபடுவர்.

இவரைப் பற்றிப் புராணங்களில் பல கதைகள் கூறப்படுகின்றன: களிறும் பிடியுமாக எழுதியிருந்த ஓவியத்தில் இறைவன் இறைவியுடைய திருக்கண்கள்பட, அங்கிருந்து விநாயகர் யானை முகத்துடன் தோன்றினர் என்பர். தேவர்கள் பாற்கடலைக் கடைந்தபோது இவரை வணங்காது தொடங்கியதால், அவர்கள் மத்தாகக்கொண்ட மந்தர மலையைக் கடலினுள் தாழ்த்தினர் என்றும், பின் தேவர்கள் வேண்ட உதவி புரிந்தார் என்றும் சொல்லப்படுகின்றது. பொய்ச்சாட்சி சொல்லிய குற்றத்தினல் குருட்டுப் பாம்பாகச் சாபம் பெற்ற விட்டுணு, இவர் அருளால் சாபம் நீங்கப் பெற்ருர். விநாயகரது பஞ்ச கிருத்திய நடனத்தைக் கண்டு சிரித்த சந்திரனுக்கு இவர் சாபம் நல்கினர் என்பர். கயமுகாசுரனைக் கொன்று தேவர்களுக்கு நன்மை செய்தார். பெருச்சாளி வடிவங்கொண்ட கயமுகாசுரனைத் தமது வாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னமாகக் கொண்டருளினர். சிவபெருமான் தன் இரு பிள்ளைகளுள் உலகத்தை வலம்செய்து முதலில் வருபவருக்கு ஒரு மாங்கனி அளிப்பதாகக்கூற, இறைவன் அல்லாது ஞாலமில்லையாகையால், இறைவனே உலகம் எனக் கண்டு இறைவன் இறைவி திருவுருவங்களை வலம்வந்து வணங்கி மாங்கனியைப் பெற்றருளினர். அகத்தியரது கமண்டலத்திலிருந்த நீரைக் காகமாகச் சென்று காவிரியாகப் பாயச் செய்தவரும் இவரே. நாம் இவரை அன்புடன் வணங்கி நல்லருள் பெற்று உய்தல் வேண்டும்.

## சுப்பிரமணியர்:

சுப்பிரமணியக் கடவுளே சிவபிரானது இளைய திருக்குமாரர் என்று போற்றப்படுபவர். அவருக்கு முருகன், கந்தன், கடம்பன், கார்த்திகேயன் முதலிய பல திருப்பெயர்கள் உண்டு. சிவபெருமானுடைய ஆறு திருமுகங்களில் நின்றும் ஆறு பொறிகள் தோன்றிச் சரவணப் பொய்கையைச் சேர்ந்து ஆறுமுகங்களையுடைய வடிவம் ஒன்று ஆயது. உமாதேவியார் குழந்தையை எடுத்துத் திருவருள் வடிவினதும், பரஞானமுடையதுமாகிய தம்து முலையின் பாலை ஊட்டி அருளினர்.

முருகக் கடவுளுக்குச் சரவணபவன் என்னும் ஒரு திருப்பெயரும் உண்டு. இதில் பிரணவமுந் திருவைந்து எழுத்துஞ் சேர்ந்திருக்கின்றன. இதனை "ஆறெழுத்தடக்கிய அருமறைக் கேள்வி" என நக்கீரர் கூறுவர். சிவனுக்கும் முருகனுக்கும் வேறுபாடு இல்லையாம். நாரதர் வேள்வியில் தோன்றிய ஆட்டுக் கடாவை அடக்கி வாகனமாக்கிக்கொண்டு விளையாடியவர் இவராவர். தேவர்கள் சூரனாதியர்களால் பெரிதும் இன்னல் உற்றபோது, தேவர் துயர்தீர்க்கவே கலியுகவரதனாகிய கந்தன் தோன்றினன்; வேற்படையை இவருக்கு உமாதேவியார் அளித்தார் எனக் கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் தனது வேலாயுதத்தால் சூரனைப் பிளந்து தேவர் குறையினைத் தீர்த்தருளினார். பிளக்கப்பட்ட சூரனது இரு கூறுகளுள் ஒன்று மயிலாகவும், மற்றது சேவலாகவும் மாறின. முருகப்பெருமான் கருணை கூர்ந்து மயிலை வாகனமாகவும், சேவலைக் கொடியாகவும் ஏற்றுக் கொண்டார்.

வள்ளிநாயகியார், தெய்வநாயகியார் ஆகிய இருவரும் முருகக் கடவுளின் சத்திகள் என்று சொல்லப்படுவர். வேலாயுதத்தையும் சத்தியாகக் கூறுவர். இவற்றை முறையே இச்சா சத்தி, கிரியாசத்தி, ஞானசத்தியெனப் பெரியோர் கூறுவர். முன்பு ஒருகால் பிரமதேவர் முருகக் கடவுளைச் சிறு பிள்ளை என எண்ணி வணங்காது சென்றபோது, முருகக்கடவுள் அவரைப் பிரணவத்தின் பொருள் யாதென வினவினார். பிரமன் அறியாது திகைக்கவே, அவரை இச் சிறையில் இட்டார். சிவபிரான் விரும்பியபடி பின்னர் அவரை விடுதலை செய்தார். அகத்திய முனிவருக்குத் தமிழ் கற்பித்தவரும் முருகக் கடவுளே. முருகக் கடவுளைத் தமிழ்க் கடவுள் என்றும் பெரியோர் கூறுவர்.

தென் நாடும், தமிழ் மொழியும் ஏற்றம் அடைய வேண்டிப் பாண்டியர் குடியிலும், மதுரை வணிகர் குடியிலுந் தோன்றி நாடாண்டும், தமிழ் ஆராய்ந்தும் அருள் செய்தவர் இக்கடவுள். சம்பந்தப் பெருமானாக அவதரித்தவரும் இவரே என்பாரும் உளர்.

முருகக் கடவுள் தன்னை வழிபடுவார்க்குச் சிறப்பும், மெய்ஞ்ஞானமும், வீடுபேறும் அளிப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலக்குமி:

விட்டுணு காத்தற் கடவுள்; புண்ணிய விசேடத்தால் சிவனுடைய அதிகாரத்தை அவர் ஏவல்வழிப் பெற்றவர். விட்டுணுவின் சத்தி இலக்குமி என்று பெயர் பெறுவாள். அவள் திருமாலின் மார்பகத்தில் வீற்றிருக்கின்ருள்.

இவள், அடியார்கள் தன்னை வணங்கி இட்டசித்திகளைப் பெறும் பொருட்டு, பொன்னிறம் உடையவளாய், இடக்கையில் வில்வம் பழத்தினையும், வலக்கையில் தாமரையினையும் தாங்கி, அபயவரத கரங்களுடன் இருபுறத்திலும் யானைகள் நின்று பொற்கலசத்தால் கங்கை நீரைக்கொண்டு அபிடேகம் செய்ய இருக்கின்ருள் என்று நூல்கள் குறிப்பிடுகின்றன.

இலக்குமி தன்னை அன்புடன் பணிபவர்களுக்குத் தனம் முதலியன அளிப்பதனுல் தனலக்குமி, தானியலக்குமி, வீரலக்குமி முதலிய பெயர்களைப் பெறுவாள். இவள் தன் யோக பலத்தால் பலவுருவமடைந்து, சுவர்க்சத்தில் சுவர்க்க இலக்குமியாகவும், அரசர்களிடத்தில் இராசலக்குமியாகவும், இல்லத்தில் கிருகலக்குமியாகவும், மங்கலப் பொருள்களில் மங்கள ரூபிணியாகவும், சூரிய சந்திரரிடத்தில் சோபை ரூபிணியாகவும் விளங்குகின்ருள். இவளைத் தேவர்கள் யாவரும் வணங்கித் துதிப்பார்கள்.

ஒருமுறை துருவாசர் இந்திரனது செல்வங்களெல்லாம் கெட்டழியும்படி சாபமிட, இவள் தேவர்கள் இடத்திலிருந்தும் நீங்கி வைகுண்டம் அடைந்தாளாம். மீண்டும் தேவர்கள் செல்வம் பெறுதற்கு விழைந்து பாற்கடலைக் கடைந்தபோது, பாற்கடலில் பிறந்தாள் என்றும் பிரமசைவர்த்த புராணங் கூறும். இவளுக்கு ''ரமை'' ''சஞ்சலை'' முதலிய பெயர்களும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கற்பத்தில் கண்ணுவ முனிவரின் சாபத்தால் மானிட வடிவங் கொண்டு வனத்தில் தவம் புரிந்து திருமாலை இவள் அடைந்ததாகவும் நூல்கள் கூறுகின்றன.

இவள் தக்கயாகத்தில் பிச்சாடன மூர்த்தியிடம் விட்டுணுவின் உயிர்ப்பிச்சை வேண்டிப் பெற்றவளாவாள். பைரவமூர்த்தி பிரமன் சிரத்தைக் கிள்ளியபோது, அவர் கையைவிட்டு நீங்காதிருந்த கபாலத்தில் பிச்சையிட்டு அதனை நீங்கிச் செய்தவளும் இவளேயாம்.

இலக்குமி தேவியே சீதை, உருக்குமணி, வேதவதி, ஆண்டாள் முதலிய அவதாரங்களை எடுத்து உலகோருக்கு அருள் புரிந்துள்ளாள். நாம் இலக்குமிதேவியைப் பத்தி சிரத்தையுடன் வழிபட்டால் சகல செல்வங்களும் கைகூடும்.

## சரசுவதி:

பிரமன் படைத்தற் கடவுள். புண்ணிய விசேடத்தால், சிவனுடைய அதிகாரத்தை அவர் ஏவல் வழிப் பெற்றவன். பிரமதேவனின் சத்தி சரசுவதி என்று பெயர் பெறுவாள். அவள் பிரமதேவன் நாவில் வீற்றிருக்கின்றாள். சரசுவதி சகல கலைகளுக்குந் தெய்வமாக இருக்கிறாள்.

சரசுவதி அடியவர்கள் தன்னை வணங்கி, இட்ட சித்திகளைப் பெறும் பொருட்டு வெள்ளை நிறம் உடையவளாய்க் கைகளில் செபமாலை, புத்தகம், வீணை தாங்கி, வெள்ளைக் கலையணிந்து இருக்கின்றாள் என்று நூல்கள் கூறும். அன்றி, பிரம வித்தையை முகம் என்றும், நான்கு வேதங்களைக் கரங்கள் என்றும், எண் எழுத்து ஆகிய இரண்டினையும் கண்கள் என்றும், சங்கீத சாகித்தியங்களைத் தனங்கள் என்றும், புராண இதிகாசங்களைப் பாதங்களென்றும், ஓங்காரத்தை யாழ் என்றுங் கூறி, கலை அவளின் வடிவம் என்றும் பெரியோர் விளக்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு காலத்தில் பிரமதேவன் சரசுவதியை விட்டு யாகஞ் செய்தான். சரசுவதி சினங்கொண்டு நதி உருவாகி யாகத்தை அழித்தாள். பிரமதேவனுடைய சாபத்தினால் இவள் நாற்பத்தெட்டுப் புலவர்களாக மானுட வடிவந்தாங்கி, சங்கப் பலகை ஏறிச் சிவபெருமானை வணங்கிப் பேறு பெற்றாள் என்றும் ஒரு வரலாறு உண்டு. சரசுவதி பிரமனுடைய யாக கலசத்துள் தோன்றினாள் என்றுங் கூறுவர். சரசுவதியின் சாபத்தினாலே புலத்திய முனிவர் அரக்கரானார். இவள் இட்ட சாபத்தின் காரணமாகவே பிரமதேவனின் சிரத்தைச் சிவபெருமானின் திருக்குமார மூர்த்தத்தில் தோன்றிய பைரவக் கடவுள் கிள்ளினார் என்றுங் கூறுவர்.

சரத் காலத்தில் பூசிக்கப்படுதலால் ''சாரதை'' என்றும், பாரத தேசத்தில் நதியாகப் பிறந்ததால் ''பாரதி'' என்றும், பிரமன் பத்தினியாதலால் ''பிராம்மி'' என்றும், வாக்குகளுக்குத் தேவியாதலால் ''வாணி'' என்றும், அக்கினியைப் போலப் பாவத்தைக் கொளுத்தி யாவரும் காண மஞ்சள் நிறம் பெற்றிருத்தலால் ''சரசுவதி'' என்றும் இத்தேவி அழைக்கப்படுகின்றாள்.

இவள் தன் அடியவர்களுக்காகப் பல்வேறு வடிவங்களைத் தாங்கி, அவ்வப்போது திருவருள் செய்துள்ளாள். நாம் சரசுவதியைப் பக்தி சிரத்தையுடன் வழிபட்டால், சகல கலை ஞானங்களும் கைகூடும்.

# 5. திருக்கோயில் வழிபாடு

## அ. திருக்கோயிலுக்குச் செல்லும் முறை

திருக்கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனஞ் செய்யக் கருதுவோர், முறைப்படி நீராடித் தோய்த்து உலர்ந்த ஆடைகள் இரண்டு (உடையும் மேலாடையும்) அரையிலே தரித்து, அனுட்டானமுஞ் செபமும் முடித்துக் கொண்டு கோயிலுக்குப் போதல் வேண்டும். தீட்சை பெறாதவர்க்கு அனுட்டானமுஞ் செபமுமில்லையாதலால், ஏனைய ஆசாரங்களுடன் விபூதியணிந்து கொண்டு போதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகும் போது வெறுங்கையுடன் போகலாகாது. ஒரு பாத்திரத்திலே (தட்டம் போன்றது) தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை முதலியன வைத்து, அரைக்குக் கீழ்ப்படாமற் கையிற் கொண்டு செல்லல் வேண்டும். சிவபெருமானையுஞ் சிவாக்கினியையும் (யாகம்-ஓமத்தீ) ஆசாரியாரையுஞ் சேவிக்கச் செல்லும் போது வெறுங்கையுடன் போகாது, தம்மாலே கொடுத்தற்கு இயன்ற பதார்த்தத்தை அவர் முன்னிலையில் வைத்து வணங்குதலே தகுதி. பொருளில்லாதவர் பத்திர புட்பங்கள் கொடுத்து வணங்குதல் வேண்டும். அதுவும் இயலாதவர், சந்நிதியில் உள்ள குப்பை முதலியவற்றைப் போக்கி வணங்கல் வேண்டும்.

ஆசாரமில்லாமலும், கால் கழுவாமலும், சனனசௌசமரண சௌசத்தோடும், பாக்கு வெற்றிலை தின்றுகொண்டும், சிரசிலே வேட்டி கட்டிக்கொண்டும், போர்த்துக்கொண்டும், சட்டையிட்டுக்கொண்டும், தோளிலே உத்தரீயமிட்டுக்கொண்டும், பாதரட்சையிட்டுக் கொண்டுங் கோயிலுக்குள்ளே செல்லலாகாது.

## ஆ. திருக்கோயிலில் வழிபடும் முறை

திருக்கோயிலுக்குச் சமீபித்தவுடனே தூல லிங்கமாகிய கோபுரத்தை வணங்கி, இரண்டு கைகளையும் சிரசிலே குவித்துக்கொண்டு, உள்ளே புகுந்து பத்திரலிங்கமாகிய பலிபீடத்துக்கு இப்பால் வணக்கஞ் செய்தல் வேண்டும். ஆடவர் அட்டாங்க வணக்கமும், பெண்கள் பஞ்சாங்க வணக்கமுஞ் செய்தல் தக்கது. திரயாங்க வணக்கம் இருபாலார்க்கும் பொதுவாக உரியது.

வணக்கம் 3, 5, 7, 9, 12 தரங்களுள் (தடவைகளுள்) இயன்ற அளவு செய்யலாம். ஒருதரம் இருதரம் செய்தல் குற்றம். வணக்கம் செய்யும்போது, மேற்கேயாயினுந் தெற்கேயாயினும் கால் நீட்டல் வேண்டும். கிழக்கேயாவது வடக்கேயாவது கால் நீட்டலாகாது. ஆதலால், கிழக்கு நோக்கிய சந்நிதியிலே பலிபீடத்துக்கு இப்பால் அக்கினி திசை (தென்கிழக்கு) மூலையிலும், தெற்கு அல்லது மேற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கிய சந்நிதிகளில் பலிபீடத்துக்கு நிருதி திசை (தென் மேற்கு) மூலையிலும், *வடக்கு நோக்கிய சந்நிதியில் பலி பீடத்துக்கு வாயுதிசை (வடமேற்கு) மூலையிலுஞ் சிரசை வைத்து, மார்பு பூமியிலே படும்படி அட்டாங்க வணக்கம் அல்லது பஞ்சாங்க வணக்கஞ் செய்யத் தக்கது.

அட்டாங்க வணக்கமாவது தலை, கையிரண்டு, செவி யிரண்டு, மோவாய், புயங்கள் இரண்டு என்னும் எட்டு அவயவமும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதலாம். பஞ்சாங்க வணக்கமாவது தலை, கையிரண்டு, முழங்கால் கள் இரண்டு என்னும் ஐந்து அவயவங்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதலாம். (அட்ட + அங்கம்—அட் டாங்கம்—எட்டு அவயவங்கள்) (பஞ்ச + அங்கம்—பஞ்சாங் கம், ஐந்து அவயவங்கள்) திரயாங்க வணக்கமாவது இரண்டு கைகளையுஞ் சிரசின்மேற் குவித்து வணங்குவதாம்.

(சிரசினால்மாத்திரம் வணங்குவது "ஏகாங்க வணக்கம்" எனவும், சிரசின்மேல் வலக்கரத்தைக் குவித்து வணங்கு வது "துவயாங்க வணக்கம்" எனவும்படும்.)

பலிபீடத்திற்கு இப்பால் வணங்கியபின் எழுந்து கும்பிட்டு, சிவபெருமானைச் சிந்தித்தவண்ணமாக, ஸ்ரீபஞ் சாட்சர மந்திரத்தைச் செபித்துக் கொண்டாயினும், "சிவ

---

*பகல் 15-நாழிகை (12 மணி) யாகிய உச்சிவேளைக்குப் பின் அஸ்தமனத்துக்கு முன் தரிசிக்கச் சென்றால், மேற்கே (சூரியன் இருப்பதனால்) காலை நீட்டத்தகாது. ஆகையால் அட்டாங்க பஞ்சாங்க வணக்கஞ் செய்யாமல், நின்றபடி இரண்டு கைகளையும் குவித்து உச்சியின்மேல் வைத்துக் கொண்டு வணங்குதலாகிய திரயாங்க வணக்கமே செய்து தரிசனம் செய்தல் வேண்டும். சூரிய கிரகணம், மாதசங்கி ராந்தி (மாதப் பிறப்பு) புண்ணிய காலங்கள் பிற்பகலில் நேரும் பொழுது ஆலயதரிசனம் பிற்பகலில் செய்ய நேரிடும் என அறிக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ'' என்று உச்சரித்துக் கொண்டாயினும், இரு கைகளை யும் மார்புக்கு நேராகக் குவித்துக் கும்பிட்டுக்கொண்டு பிர தட்சிணம் [வலமாகச் சுற்றி வருதல்] செய்தல் வேண்டும். வலஞ் செய்யுங்கால் பூரணகருப்பவதியானவள் எண்ணெய் நிறைந்த குடத்தைத் தலையின்மேற் சுமந்து கொண்டு காலில் விலங்கு பூட்டப்பட்டவளாய் நடப்பது போல, செந் துக்கள் வருந்துமே என்று இரங்கி, பூமியைப் பார்த்துக் கொண்டு அதிகம் மெல்லவாக நடந்து செல்லல் வேண்டும். ஓடி வலம் வருதல் குற்றமாகும்.

உலகபோகங்களை விரும்பினவர்கள் வலமாகவும், மோட் சத்தை விரும்பினவர்கள் இடமாகவும், போகம் மோட்சம் இரண்டையும் விரும்பினவர்கள் வலமும் இடமும் ஆக வும் பிரதட்சிணஞ் செய்தல் முறையாகும்.*

சிவபெருமானை 3, 5, 7, 9, 15, 21 தரங்களுள் இயன்ற அளவு பிரதட்சிணஞ் செய்தல் தகும். விநாயகரை ஒரு தரமும், சூரியனை இரண்டு தரமும், பார்வதிதேவியை யும் விட்டுணுவையும் நான்கு தரமும் பிரதட்சிணஞ் செய் தல் தகும்.

பிரதட்சிணஞ் செய்யும் பிராகாரத்திலே [ஆவரணத் திலே] தூபியின் நிழலேனுங் கொடிமரத்தின் நிழலேனும் இருந்தால், அதனை மிதியாமற் செல்லுதல் வேண்டும். அஃது இயலாதபோது, அந்நிழலில் மூன்று கூறுகள் தலைப் பக்கத் திலே நீக்கி, எஞ்சிய ஏனைய இரண்டு கூறுகளுள்ள இடத்திலே செல்லல் வேண்டும். ஆனால், சுவாமி உற்சவங்கொண்டரு ளுங் காலத்திலே சுவாமியுடன் செல்லும்போது அந்நிழ லிருப்பினும் அவ்வாறு நீக்காது செல்லலாம். அபிடேக காலத்திலே உட்பிராகாரத்திலே பிரதட்சிணம், வணக்கம், தோத்திரம், செபம் முதலானவை செய்தல் ஆகாவாம்.

* பிரமசாரிகள் வலமாகவும், கிருகஸ்தரும் வானப் பிரஸ் தரும் வலம் இடம் ஆகிய இருமுறையினாலும், சந்நியாசி கள் இடமாகவும் பிரதட்சிணஞ் செய்யக் கடவர். பிரதட் சிணஞ் செய்யும் பிராகாரத்தில் உள்ள பலிபீடத்தையும் இடபத்தையும் சேர்த்துப் பிரதட்சிணஞ் செய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பிரதட்சிணஞ் செய்து சந்நிதானத்திலே வீழ்ந்து வணங்கி எழுந்து கும்பிட்டுத் துவாரபாலகரை வணங்கி, பின்பு கணநாயகராகிய திருநந்திதேவரை வணங்கித் துதித்து, "பகவானே அடியேன் உள்ளே புகுந்து சிவபெருமானைத் தரிசித்துப் பயன்பெறும் பொருட்டு அனுமதி செய்தருளும்" என்று பிரார்த்தித்துக் கொண்டு உள்ளே போதல் வேண்டும்.

முதலில் விநாயகரைத் தரிசித்து, மனத்திலே தியானித்து நெற்றியிலே மும்முறை குட்டி, வலக்காதை இடக்கையினாலும் இடக்காதை வலக்கையினாலும் பிடித்துக்கொண்டு மூன்று முறை தாழ்ந்தெழுந்து தோத்திரஞ் செய்தல் வேண்டும்.

பின் அஞ்சலியுடன் கும்பிட்டுக்கொண்டு சிவலிங்கப் பெருமான் சந்நிதியை அடைந்து தரிசித்து, மனத்திலே தியானித்து, சிரசிலும், மார்பிலும் அஞ்சலி செய்து பத்தியுடன் தேவாரம் முதலிய அருட்பாக்களால் தோத்திரஞ் செய்தல் வேண்டும். அதன்மேல் அருச்சனை செய்வித்து இயன்ற தட்சிணை கொடுத்துப் பின்பு உமாதேவியார், நடேசர், தட்சிணாமூர்த்தி, சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளையுஞ் சமய குரவர்களையுந் தரிசித்து வணங்கித் துதித்தல் வேண்டும்.

பார்வதி தேவியார் கோயில் தனியே இருப்பின், அங்கே சென்று முறைப்படி வணக்கம் பிரதட்சிணம், தோத்திரங்கள் செய்து வணங்குதல் வேண்டும்.

இறுதியாக அர்ச்சகரிடம் விபூதி வாங்கித் தரித்துக் கொண்டு, பிரதட்சிணஞ் செய்து சண்டேசுரர் சந்நிதியை அடைந்து வணங்கித் துதித்து மும்முறை கைதட்டிச் சிவதரிசன பலனைத் தரும்படி வேண்டி, நந்தி தேவரை அடைந்து கும்பிட்டுப் பலிபீடத்துக்கு இப்பால் வணக்கஞ் செய்து எழுந்து, வடக்கு நோக்கி இருந்து சிவபெருமானைத் தியானித்துப் பஞ்சாட்சர மந்திரத்தை இயன்ற அளவு செபித்து எழுந்து வீட்டுக்குச் செல்லுதல் வேண்டும். தரிசனஞ் செய்து திரும்பும் போது சிவபெருமானுக்கும் இடப தேவருக்கும் புறங்காட்டாது திரும்புதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. சரியை வழிபாடு

## அ. பூந்தோட்டத் தொண்டு:

சரியை வழிபாட்டிற்கு உரியவைகளிலே, திருப்பூந்தோட்டத் தொண்டும் ஒன்றாகும். திருக்கோவிலில் நாள்தோறும் நடைபெறும் பூசைக்கு வேண்டிய பூக்களைத் தூயமுறையிலே நாள் தோறும் பறித்தற்கும், தொடுத்தற்கும் பூந்தோட்டந் திருக்கோயிலுக்குப் பக்கத்திலே இருத்தல் பயன் தருவதாகும்.

பூந்தோட்டத்தை எத்தகைய இடத்திலே வைத்தல் வேண்டும், அங்கு வளர்க்க வேண்டிய பூச்செடி கொடிகள் எவை, எவ்வாறு பூக்களை எடுக்க வேண்டும் என்னும் இவைகளைப் பற்றிச் சிவாகமங்களிலே விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

பூந்தோட்டத்திற்குரிய இடம் திருக்கோயிலை அடுத்துள்ள தூய நிலமாக இருத்தல் வேண்டும். எவ்வகைக் குற்றமும் இருத்தலாகாது. பசுக் கூட்டங் கட்டப் பெற்றுத் தூய்மைப்படுத்துதல் நன்று. நன்கு உழுது பண்படுத்தல் வேண்டும். நாற்புறமும் உயர்ந்த மதில் கட்டவேண்டும்.

### பூந்தோட்டத்தில் உண்டாக்குவதற்குரியவை:

**மரங்கள்:—** வில்வம், பாதிரி, பன்னீர், கொன்றை, மந்தாரை, சண்பகம், குருந்து, மகிழ், புன்னை, கடம்பு, ஆத்தி, வன்னி, நெல்லி, பலாசு, கோங்கு.

**செடிகள்:—** அலரி, நந்தியாவர்த்தம், செம்பரத்தை, துளசி, செவ்வந்தி, மருக்கொழுந்து, திருநீற்றுப்பச்சை, தருப்பை.

**கொடிகள்:—** மல்லிகை, முல்லை, இருவாட்சி, பிச்சி, அறுகு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீரில் வளர்வன:—** தாமரை, செங்கழுநீர். இவைகளின் பூக்கள் முறையே கோட்டுப்பூ, நிலப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ எனப்படும்.

## பூந்தோட்டத்தில் செய்யத் தகாத குற்றங்கள்:—

கோவிற் பூந்தோட்டத்துள் ஆசாரமற்ருேர், புறச் சமயிகள் ஆகியோரை அனுமதித்தலாகாது. எச்சில் அழுக்குப் பொருள்கள் முதலியவற்றை அங்கு இடலாகாது. அங்குள்ள பூக்களை மணத்தலாகாது. கடவுட் பூசைக்கேயன்றி வேறு தேவைகளுக்கு எடுத்தலாகாது.

**பூக்களை எடுக்கும் முறை:—** சமய தீட்சையும், தூய ஆசாரமுங் கடவுட் பத்தியும் உள்ளவரே பூ எடுத்தற்குத் தகுந்தவராவர். சூரிய உதயத்திற்கு முன் நீராடித் தோய்த் துலர்ந்த ஆடையைத் தரித்து, திருப்பூங் கூடையையுந் தண்டையும் எடுத்துக்கொண்டு திருவைந்தெழுத்தை உச் சரித்த வண்ணம் பூந்தோட்டத்திற் சென்று தண்டினுல் வளைத்து, விரல்களினுற் பூக்களை எடுத்துக் கூடையுள் இட வேண்டும். கூடையையுந் தண்டையும் எப்போதும் அரை அளவுக்கு மேலே உயர்த்தி வைத்திருத்தல் வேண்டும். சில வற்றின் பத்திரங்களும் பூசைக்குரியன. வாடிய பூவும், நிலத்தில் விழுந்த பூவும், பழுதுற்ற பூவும் எடுத்தலாகாது. பூ எடுக்கும்போது கைகளினுல் உடலையேனும், உடையை யேனும் தீண்டலாகாது. பேசுதல், சிரித்தல், கடவுட் சிந் தனை இல்லாதிருத்தல் என்பனவும் ஆகர்வாம்.

விநாயகருக்குத் துளசியும், சிவபெருமானுக்குத் தாழம் பூவும், உமாதேவியாருக்கு அறுகும், வில்வமும், வைரவருக்கு நந்தியாவர்த்தமும், சூரியனுக்கு வில்வமும், திருமாலுக்கு அட்சதையும், ஆகாவாம்.

பூ எடுத்த பின் கூடையிலுள்ள பூக்களைப் பத்திரங்களி னுல் மூடிக் கால் கழுவிக் கோயிலில் உயர்ந்த இடத்தில் வைத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலரிமூன்று நாட்களுக்கும், தாமரை ஒரு கிழமைக்கும், வில்வம் ஆறுமாதத்திற்கும், துளசி ஒருவருடத்திற்கும் வைத்திருந்து பூசைக்கு உபயோகிக்கலாம்.

பெரியபுராணத்திற் கூறப்படும் முருகநாயனர், கணநாத நாயனர், சிவகாமியாண்டார் ஆகியோர் இத்தொண்டினைச் செய்து வீடுபேறு பெற்றவர்களேயாம்.

## ஆ. திருக்கோயிலைச் சுத்தம் செய்தல்:

திருக்கோவிலைச் சுத்தம் செய்தலுஞ் சரியை வழிபாட்டுக்கு உரியவைகளுள் ஒன்ருகும்; இதற்குத் திருவலகிடுதல் எனவும் பெயர்.

நாள்தோறும் சூரியன் உதிக்கமுன் நீராடித் தோய்த்துலர்ந்த ஆடையைத் தரித்து, சிவசிந்தையுடன் திருக்கோயிலுட் சென்று இத்தொண்டைச் செய்தல் வேண்டும். மண்டபம், உள்வீதி, புறவீதி ஆகியவைகளை நன்கு கூட்டிச் சுத்தமாக்க வேண்டும். கூட்டும்போது சிற்றுயிர்களுக்கு ஊறு விளைத்தலாகாது. குப்பை கூளங்களைத் தூரத்தே அதற்குரிய ஓரிடத்தில் இடவேண்டும்.

மண்டபங்களின் நிலத்தைத் தூய பசுக்களின் சாணத்திஞல் மெழுகுதல் வேண்டும். நாள்தோறுமேனுங் கிழமைக்கு இரு முறையேனும், ஒருமுறையேனும் இதனைச் செய்யலாம். மேல் கிழ் தள்ளிச் சாணத்தை எடுத்தல் வேண்டும். சுத்த நீரிற் கரைத்தல் வேண்டும். அடையல்களை அகற்ற வேண்டும். நோயுள்ள பசுவின் சாணம், அசுத்தமான இடத்தில் உள்ள சாணம் என்பன ஆகாவாம். சீமெந்து இட்ட, அன்றேல் கல்பதித்த நிலமாயின், நாள்தோறும் சுத்தமான நீரிஞற் கழுவலாம். வீதி நிலங்களுக்கு நாள்தோறும் சுத்த நீரைத் தெளித்துவிட வேண்டும்.

திருவீதியில் முளைத்த புல்லைச் செதுக்குதல், மதில்கோபுரம் என்பவற்றில் முளைத்த செடிகளை வேரோடு அகற்றல், கோவில் மண்டபத்திலும், உள்வீதியிலும், புற வீதியிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள எச்சில், மலம், அழுகிய பொருள் முதலியவற்றை அகற்றல், அகற்றியவைகளைத் தூரத்தில் அவைக்குரிய இடங்களில் இடல், கோவில் வீதிகள் அசுத்தமடையாமற் பாதுகாத்தல், கோவிற் கிணறு, குளம் முதலிய நீர் நிலைகளைச் சுத்தமாக வைத்திருத்தல் என்பனவுந் திருவலகிடலுடன் செய்தற்குரிய தொண்டுகளாகும்.

இத்தொண்டுகள் செய்யும் போது பேசுதலுஞ் சிரித்தலுஞ் சிவசிந்தை இல்லாமையும் ஆகாவாம்.

சமய குரவர்களுள் ஒருவராகிய திருநாவுக்கரசுநாயனாரும், திலகவதியாருந் திருக்கோயில்களிலே திருவலகிடல், புல் பூண்டுகளை அகற்றல் முதலிய திருத்தொண்டுகளைத் தம் பணியாகக் கொண்டவராவர். இத்தொண்டுகளைப் பற்றித் திருநாவுக்கரசுநாயனார் தாம் அருளிய தேவாரத்திற் குறிப்பிட்டுள்ளார். அப்பாடல்:-

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோவில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதி யென்றும்
ஆரூரா என்றென்றே அலறு நில்லே.

(திருவாரூர்த் திருத்தாண்டகம்)

## இ. திருவிளக்கேற்றுதல்:

சரியை வழிபாட்டுத் தொண்டுகளுள் திருவிளக்கேற்றுதலும் ஒன்றாகும். இதற்கு விளக்குத்தகழியும், திரியும் நெய்யும் வேண்டும்.

தாமரை நூல், வெள்ளெருக்குநூல், பருத்திநூல் ஆகியவற்றாலே திரியை அமைக்கலாம். பருத்தி நூலிலும் வெள்ளெருக்கு, தாமரை என்பவற்றின் நூல்கள் உத்தமமானவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல்களின் இருபத்தொன்று, பதினாறு, பதினாலு, ஏழு என்னும் இழைகளைக் கொண்டு கற்பூரப்பொடி சேர்த்துத் திரிகளை ஆக்கல் வேண்டும்.

## திருவிளக்கிடுதற்குரிய நெய் வகைகள்:

பசுநெய், எருமைநெய், வெள் எள்ளின்நெய், மரவிதைகளின் நெய் என்பன. இவைகளுள் பசுநெய்யும் எள்நெய்யுஞ் சிறந்தனவாகும். கபிலைப் பசுவின் நெய் உத்தமத்தில் உத்தமம். ஏனைய பசுக்களின் நெய் உத்தமத்தில் மத்திமம். வெள்ளெள் நெய் மத்திமத்தில் மத்திமம். ஏனைய எள் நெய் மத்திமத்தில் அதமம். மரவிதைகளின் நெய் அதமத்தில் அதமம்.

## திருவிளக்குகளின் வகைகள்:

சட்டவிளக்கு, விடிவிளக்கு, மாவிளக்கு முதலியன. சட்டவிளக்கும், விடிவிளக்கும் நாள்தோறும் இடுதற்குரியன. மாவிளக்கு விசேட தினங்களில் இடப்படும். செஞ்சம்பா அரிசி மாவினாலே அகல் செய்து, பசுநெய்யுந் தாமரை நூலும் இட்டுக் கடவுளை வழிபடுவதாம்.

நீராடித் தோய்த்துலர்ந்த உடையணிந்து, திருவைந்தெழுத்தை உச்சரித்துக்கொண்டு, தூய சிந்தையுடன் திருவிளக்கிடுதல் வேண்டும். திருவிளக்கிடுவோர் சமய தீட்சை பெற்றவராயுஞ், சமய ஆசாரம் உள்ளவராயும் இருத்தல் வேண்டும். இத்தொண்டைச் செய்யும்போது கதைத்தல் சிரித்தல் கடவுட் சிந்தனை இன்மை ஆகியன இருத்தலாகாது.

நமிநந்தியடிகள், கணம்புல்லநாயனார், கலியநாயனார் ஆகியோர் திருவிளக்கிடுந் திருத்தொண்டைச் செய்து வீடுபேறு பெற்றவராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. திருக்கோயிற் கிரியைகள்

"உயிர்கள் இவ்வுலகில் நல்வாழ்வு பெறவும், இவ்வுலக வாழ்வின் பின் நற்பேறெய்தவுந் தக்கதாய் மந்திரங்களோடு இணைந்து செய்யப்படும் நற்செய்கைகள் கிரியைகள்" எனப் படும். அக்கிரியைகள் ஆன்மார்த்தக் கிரியைகள், பரார்த்தக் கிரியைகள் என இருவகைப்படும்.

ஒருவர் தமது ஈடேற்றங் கருதிச் செய்யுங் கிரியைகள், ஆன்மார்த்தக் கிரியைகள் எனவும் பிறரது நன்மை கருதிச் செய்வன பரார்த்தக் கிரியைகளெனவுங் கூறப்படும்,

திருக்கோயிலில் நடைபெறுங் கிரியைகள் பரார்த்தக் கிரியைகளாம். பரார்த்தக் கிரியைகளும், நித்தியக் கிரியை கள், நைமித்தியக் கிரியைகள் என இருவகைப்படும்.

## (அ) நித்தியக் கிரியைகள்

திருக்கோயிலில் நாள்தோறும் நிகழ்வன நித்தியக் கிரி யைகள் எனப்படும். அவை பூசை எனவும்படும். அபிடேகம் அலங்காரம், நிவேதனம், தீபாராதனை, அருச்சனை, தோத் திரம், வாழ்த்து என்பன பூசையின் அங்கங்களாம்.

இப்பூசை, கோயில்களின் வசதியையும், விடுமுறையை யும் அநுசரித்துத் தினமும் பலமுறை நிகழும். திருச்செந்தூர் முதலிய சில வசதி நிறைந்த கோயில்களிற் பன்னிரு காலப் பூசையும், பல பெருங்கோயில்களில் ஆறுகாலப் பூசையும், வசதி குறைந்த சில கோயில்களில் மூன்று காலப் பூசையும் நடைபெற்று வருகின்றன.

திருவனந்தற் பூசை, காலைசந்திப்பூசை, உச்சிக்காலப் பூசை, சாயங்காலப்பூசை, இரண்டாங்காலப்பூசை, அர்த்த யாமப் பூசை என்பன ஆறுகாலப் பூசைகளாம்.

சூரியன் உதிக்க மூன்றே முக்கால் நாழிகையின் முன் திருவனந்தற் பூசையும், சூரியன் உதித்த பின் ஏழரை நாழி கைக்குள் காலைசந்திப் பூசையும், நடுப்பகலில் உச்சிக்காலப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசையும், சூரியன் மறைவதற்கு மூன்றேமுக்கால் நாழிகைக்கு முன் சாயங்காலப் பூசையும், சாயங்காலப் பூசையிலிருந்து மூன்றேமுக்கால் நாழிகையில் இரண்டாங் காலப் பூசையும், இரண்டாங்காலப் பூசையிலிருந்து மூன்றேமுக்கால் நாழிகைக்குள் அர்த்தயாமப் பூசையும் நிகழும்.

பூசையின் அங்கங்களுள், அபிடேகமாவது:- எண்ணெய் பால் முதலியவற்றாலும், நன்னீராலும், இறைவன் திருவுருவை நீராட்டுதல்; அலங்காரமாவது:- பட்டாடை, மலர் மாலை, ஆபரணம் முதலியவற்றால் திருமேனியை அலங்கரித்தல்; நிவேதனமாவது:- அன்னம், பலகாரவகை பழவகை தாம்பூலம் என்பனவற்றைச் சமர்ப்பித்தல்; தீபாராதனையாவது:- இறைவனது திருமுன்னிலையிலே தீபங்களைப் பிரணவ வடிவமாகச் சுற்றிக் காட்டுதல்; அருச்சனையாவது:- இறைவனது குணவியல்புகள், அருட்செயல்கள் முதலியவற்றை விளக்குஞ் சிறப்புத் திருநாமங்களை ஒவ்வொன்றாக ஓதிப் பத்திர புட்பங்களை இறைவன் திருவடியிலே சாத்துதல்; தோத்திரமாவது:- வேதமந்திரங்களாலும், திருமுறைகளினாலும் இறைவனைத் துதித்தல்; வாழ்த்தாவது:- பூசையிலே குறைபாடுகள் நேர்ந்திருந்தால், அவை நீங்க வேண்டுமெனவும், கோயில் நிருவாகிகள், பணியாளர், ஊரவர் உலகத்தவர் யாவரும் நல்வாழ்வு பெறவேண்டுமெனவும் வாழ்த்துதல்.

## (ஆ) நைமித்தியக் கிரியைகள்

நித்தியக்கிரியைகளில் உண்டாகின்ற குற்றங் குறைகளை நீக்குவது காரணமாகச் செய்யப்படுவன நைமித்தியக்கிரியைகள். (நிமித்தம்—காரணம்; நைமித்தியம்—காரணங் கொண்டு நிகழ்வது) இவை விசேட தினங்களில் விசேடமான முறையில் நிகழ்வதால், விசேட கிரியைகள் எனவும் வழங்கும்.

நைமித்தியக் கிரியைகள் பலவகைப்படும். அவற்றுள், சோமவார பூசை, சுக்கிரவார பூசை, முதலியன வாரத்துக்கு ஒருமுறை நிகழ்வன; பிரதோச பூசை முதலியன:- இருவாரத்துக்கு ஒருமுறை நிகழ்வன; சதுர்த்தி, கந்தசட்டி முதலியன மாதமொருமுறை நிகழ்வன; விநாயக சதுர்த்தி, கந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டி, நவராத்திரி, சிவராத்திரி, மார்கழித் திருவெம்பாவை முதலியனவும், மகோற்சவமென்னுந் திருவிழாவும் வருடமொருமுறை நிகழ்வன; கும்பாபிடேகம் மகோதயம் முதலியன பல வருடங்களுக்கொருமுறை நிகழ்வன.

இவற்றுள் மிகச் சிறந்தது மகோற்சவம். [மகா-உற்சவம் உற்சவம்-திருவிழா] இது திருவிழா நடைபெறும் நாட்களின் எண்ணிக்கை காரணமாகவும், திருவிழாவில் நடைபெறுங் கிரியைகள் காரணமாகவும் பலவகைப்படும். கிரியைகள் காரணமாக நடைபெறுவனவற்றுள், கொடியேற்றந்தொடங்கித் தீர்த்தம் முடியவுள்ள மகோற்சவம் பெரும்பான்மையான பெருங்கோயில்களில் நடைபெறுகின்றது.

இம்மகோற்சவக்கிரியைகள் சைவசித்தாந்த உண்மைகளை விளக்குவன ஆகும். கொடியேற்றத் திருவிழா முப்பொருளியல்பையும், முத்தியடையும் முறையையும், உணர்த்தும். மேலும், அத்திருவிழா படைத்தலையும், வாகனத் திருவிழாக்கள் காத்தலையும், தேர்த்திருவிழா அழித்தலையும் உணர்த்துமென ஆகமங்கள் கூறும்.

## அபிடேகப் பொருள்கள்:

எண்ணெய், அரிசிமா, மஞ்சள்மா, பஞ்சகவ்வியம், பஞ்சாமிர்தம், பால், தயிர், நெய், தேன், கருப்பஞ்சாறு, பழவகைச்சாறு, இளநீர், அன்னம், வெந்நீர், விபூதி, குங்குமம், சந்தனம், பன்னீர், கும்பநீர், புண்ணிய தீர்த்தம்.

## நிவேதனப் பொருள்கள்:

ஆசாரமுள்ள பரிசாரகராற் தூய முறையிலே திருக்கோயிலின் மடைப்பள்ளியிற் பக்குவம் செய்யப்பெற்ற சுத்த அன்னம், சர்க்கரையன்னம், பாயாசஅன்னம், பயற்றன்னம், எள் அன்னம் ஆகியவைகளும், கறிவகைகளும், பட்சணவகைகளும், பழவகைகளும், நெய், தயிர், தேங்காய், தாம்பூலம் ஆகியவைகளுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீபாராதனைக்குரிய தீப வகைகளும், உபசரணைப் பொருள்களும்:

பஞ்சமுக தீபம், ஒற்றைத் தீபம், அடுக்குத் தீபம், கும்ப தீபம், பஞ்ச ஆராத்தி ஆகியவைகளும், கண்ணடி, குடை, கொடி, ஆலவட்டம், சாம்ரை, விசிறி, ஆகியவைகளுமாம்.

நித்திய பூசையில் அபிடேகம் படைத்தலையும், மாலை ஆபரணுதிகளாற் செய்யப்படும் அலங்காரங் காத்தலையும், தூபம் அழித்தலையும், கற்பூர தீபம் மறைத்தலையும், அடுக்குத்தீபம் அருளலையுங் குறிக்கும். தீபாராதனை நிகழும் போது சுவாமி தரிசனஞ்செய்வது பெரும் பேருகும். கோவிலிற் தீப ஒளி காண்பிக்கும்போது, மூலத்தானத்தில் மறைந்திருந்த இறைவனின் திருவுருவந் தெளிவாகக் காட்சி தருகிறது. ஞானுசாரியாரது மந்திர உபதேசத்தினுல், உள்ளத்தில் எமது அஞ்ஞானத்தால் மறைந்திருக்கும் இறைவனைத் தெளிவாகக் காட்சி தருதலை இது குறிக்கிறது.

திருவிழாவின் ஈற்றில், அதனை நன்கு நிறைவேற்றிய குருவை உபசரித்து வழிபட்டு, அவர் அருளைப் பெறுதல் முக்கியமாகும்.

நித்தியம், நைமித்தியம் ஆகிய இருவகைக் கிரியைகளும் பலன் கருதிச் செய்யப்படுமாறுல், அவை காமியக் கிரியைகள் எனப்படும். இவ்விருவகைப் பூசைகளுட் பலவும், பலவகைத் திருவிழாக்களும், உருத்திராபிடேகம், சங்காபிடேகம், இலட்சார்ச்சனை, சகஸ்ரநாமார்ச்சனை என்பனவுங் காமியக் கிரியைகளே.

## திருவிழாக்களின்போது செய்யத்தகாத குற்றங்கள்:

திருவிழாப் பூசையைக் காலங்கடத்துதல், பய பத்தியற்ற முறையிலே நடந்து கொள்ளுதல், தேவையற்ற வேடிக்கைகள் நடனங்கள்-பாட்டுக்கள்-அலங்காரங்கள் முதலியன நிகழ்த்

தல், வேண்டத்தகாத ஆடையணிகளுடன் திருக்கோயிலுக்குச் செல்லுதல், மண்டபங்களையும் வீதிகளையும் விளையாட்டிற்கும் பொழுது போக்கிற்கும் உரிய இடமாக்குதல், திருக்கோவிலையும், அங்கு நடைபெறும் கிரியைகளையும் குறைவாக மதித்தல் என்பனவும் இவைபோன்ற பிறவுமாம்.

திருக்கோயிற் கிரியைகள் பற்றிய உண்மைகளைச் சைவ சமயிகள் யாவரும் தப்பாது அறிந்திருத்தல் வேண்டும்.

—★—

## 8. பசு (ஆன்மா)

ஆன்மா, பசு, ஆவி, என்பன உயிரைக் குறித்து நிற்கும் சொற்கள். ஆன்மா மும்மலங்களினுலே பந்திக்கப்பட்டிருத்தலால், அது பசு எனப்பட்டது.

ஆன்மாக்கள் என்றும் உள்ளன; எண்ணிறந்தன. ஆணவ இருளில் அழுந்திக் கிடப்பன; இறைவனது அருளால் நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப உடல்களைப் பெறுவன; போகங்களை அனுபவிக்கும் வழியில் புண்ணிய பாவங்களைப் புரிந்து சுவர்க்க நரகங்களிலே செல்லும் இயல்பின; ஆணவ மலம் பரிபாகம் அடையும் காலத்தில், குரு அருளாலே அறிவில் விளங்கும் ஞானப்பிரகாசத்தினுல் மல மறைப்பை நீக்கிச் சிவனது திருவடியை அடையுந் தன்மையுடையன.

ஆன்மாவையும் உடம்பையும் ஒன்றென அறிவிலார் மயங்குவர். ஆன்மா வேறு, உடம்பு வேறு. ஆன்மா உடம்பினை விரும்பி எடுப்பதும் இல்லை; உடம்பு ஆன்மாவை விரும்பி எடுப்பதுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மாவிலே தீய குணங்களை உண்டாகச் செய்வது ஆணவம். ஆன்மாவை ஆணவத்தில் இருந்து விடுவித்து, அதன் மயக்கத்தைத் தீர்ப்பதற்காகவே கடவுள் ஆன்மாவிற்குச் சரீரத்தைக் கொடுத்தருளுகின்றார். ஆன்மா தூல, சூக்கும தேகங்களில் நின்றுகொண்டு தன் முயற்சிகளைச் செய்யும்.

ஆன்மாக்கள் தாம் புரிந்த நல்வினை தீவினைகளுக்கு ஈடாக நால்வகைத் தோற்றத்தையும், ஏழுவகைப் பிறப்பையும், எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதத்தையும் அடைந்து பிறந்து இறந்து உழலும். நால்வகைத் தோற்றங்களாவன:- அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்பவைகளாம். அண்டசம், முட்டையிற்றோன்றுவன. சுவேதசம், வேர்வையிற்றோன்றுவன. உற்பிச்சம், வித்து வேர் கிழங்கு முதலியவைகளை மேற்பிளந்து தோன்றுவன. சராயுசம், கருப்பையிற்றோன்றுவன. எழுவகைப் பிறப்புக்களாவன:- தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பனவாம்.

ஆன்மாக்களில் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூன்று வகையுண்டு. விஞ்ஞானகலர் ஆணவ மலம் ஒன்றேயுடையவர். பிரளயாகலர் ஆணவம், கன்மம் இரண்டும் உடையவர். சகலர் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையுமுடையவர். மனிதர்களும், தேவர்களும், மிருகம், பட்சி முதலிய இயங்கியற் பொருள்களும், புல், பூண்டு முதலிய நிலையியற் பொருள்களுஞ் சகலர்களாம்.

ஆன்மாக்கள் இளைப்பாறும் பொருட்டுச் சிவபெருமான் உலகங்கள் எல்லாவற்றையும் ஒரு காலத்தில் அழிப்பார். அதைச் சர்வ சங்கார காலமென்பர். சர்வ சங்கார காலத்தில் ஆன்மாக்கள் ஆணவத்தோடு மட்டும் இருக்கும். இதைக் கேவல நிலையென்பர். மும்மலங்களோடு கூடியிருக்கும் நிலையைச் சகலநிலையென்பர். மலங்களினின்றும் நீங்கிச் சுத்தமாக இருக்கும் நிலையைச் சுத்தநிலையென்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. பாசம்

ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்றும் பாசம் எனப்படும். இவை, ஆன்மா இறைவனை உணர்ந்து பேரின்பம் பெறுவதற்குத் தடையாய், அவ்வான்மாவைப் பந்தித்து நிற்பதாற் பாசம் எனப்பட்டன.

## அ. ஆணவம்

ஆணவம் என்பதன் பொருள் ஆன்மாவை அணுத்தன்மை செய்வது என்பதாம். அணுத்தன்மை செய்தலாவது, சிற்றறிவுஞ் சிறு செயலும் உடையதாக்குதலாம். ஆணவம் ஆன்மாக்களுக்குப் பொய்ப் பிரபஞ்சத்தை மெய்ப்பொருள் என்று அறிவித்து நிற்றலால், அவை வினைகளை இயற்றி, பிறவியுள் ஆக்கப்பட்டுத் துன்புறுகின்றன. "நான் பெரியவன், நான் எனது நன்மைகளைக் கவனிக்க வேண்டும். என்று எண்ணுகின்ற அகந்தையும், இஃது எனது பொருள் இஃது எனது உரிமை" என்று எண்ணுகின்ற மமதையும் ஆணவத்தின் பிரிவுகளாம். இவற்றை "யானெனதென்னும் செருக்கு" என்று வள்ளுவர் கூறுவர்.

ஆணவம், ஒன்றாய்த் தத்தம் பரிபாக காலத்தில் நீங்கும் எண்ணிறந்த சத்திகளை உடையதாய், பேரிருளாய் நின்று அஞ்ஞானத்தை விளைவிக்கும். இஃது ஆன்மாக்களோடு அநாதியே செம்பிற் களிம்பு போலவும், நெல்லில் உமிபோலவுங் கலந்து சகசமாய் நிற்கும். அதனாலே இதனைச் சகசமலம் என்றுங் கூறுவர். ஆணவம் அழிவற்றது. இதுவே எல்லா அனர்த்தங்களுக்குங் காரணமான மூலமலம். ஆன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக்களின் அறிவு தொழில் முழுவதையும் விளங்க ஒட்டாது தடுத்து நிற்பது இதுவே. ஆன்மா திருவருளை அறிந்து உய்யா வண்ணம் தடுப்பதுடன், ஆன்மாவுடன் சேர்ந்து நின்று அதன் அறிவு, இச்சை, செயல்களையும் மறைக்கின்றது. ஆணவத்தின் குணங்கள், காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்றுமாம். அன்றி மோகம், மதம், இராகம், கவலை, தாபம், சோஷம், விசித்திரம் என ஏழு என்றும்; கற்பம், விகற்பம், குரோதம், மோகம், கொலை, அஞர், மதம், நகை என எட்டு என்றும் கூறப்படுவதுமுண்டு. இந்த ஆணவத்தை நாம் கடவுளுடைய திருவருளாலே வெல்லுதல் வேண்டும். கடவுளுடைய திருவருளைப் பெறுதற்குத் தகுதி அற்றவர்கள் ஆணவத்திற்கு அடிமைப்பட வேண்டி நேரிடும். ஆணவம் முயற்சி செய்யும் போது மனத்திலே தீய எண்ணங்கள் தீய செயல்கள் உண்டாகும். எனவே நாம் தீய எண்ணங்களைக் கடவுள் வழிபாட்டினுலும், நல்லோர் சேர்க்கையினுலும், நல்ல நூல்களைப் படிப்பதினுலும் வலிகுன்றச் செய்து, இயலும் வழியெல்லாம் நல்ல செயல்களைச் செய்து, அரிய மானிடப் பிறவியைப் பயனுடையதாகச் செய்தல் வேண்டும்.

—★—

## (ஆ) மாயை

உலகப் பொருள்களின் தோற்ற ஒடுக்கங்கட்கு நிலைக்களனாய், முதற் காரணமாய் விளங்குஞ் சத்தி—ஆற்றல்—மாயை என்று சொல்லப்படும். இது சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை என முத்திறப்படும். பிரகிருதி மாயை அசுத்த மாயையின் காரியமாய்த் துன்பம் விளைத்தலின் ''அசுத்தம்'' என்றும், அசுத்த மாயை இன்பமே அன்றித் துன்பத்தோடு கலப்பது பற்றிச் ''சுத்த அசுத்தம்'' என்றும், சுத்த மாயை இன்பம் பயப்பதற்கு ஏதுவாய் அமைதலின் ''சுத்தம்'' என்றும் வழங்கும். பெரும்பாலுங் காரணகாரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையினாலும், பொருள் வகையினாலும், மாயை ஒன்றே என்று கொள்வதே சித்தாந்த முடிபாம். மா என்பது ஒடுங்குதல்; யா என்பது வருதல்; ஆகையால் எல்லாக் காரியங்களுந் தன்பால் வந்து ஒடுங்குதற்குந் தன்னில் நின்று தோன்றுதற்குங் காரணமாய் நின்றது மாயை எனப்படும்.

## i சுத்த மாயை

இது மாமாயை, குடிலை, குண்டலினி, விந்து முதலிய பெயர்களாலும் வழங்கும்; மல கன்மங்களோடு கலவாது சுத்தமாய் இருத்தலின் ''சுத்த மாயை'' எனப்படும். இதிலிருந்து சொல் வடிவும், பொருள் வடிவமாகிய இருவகைப் பிரபஞ்சங்கள் தோன்றும்.

பரமசிவனது சத்தியின் தொழிற்பாட்டால் சுத்தமாயையில் நாதந் தோன்றும். நாதத்திலிருந்து விந்து தோன்றும்; விந்திலிருந்து சதாக்கியம் தோன்றும்; சதாக்கியத்தில் மகேசுரம் தோன்றும்; மகேசுரத்தில் சுத்த வித்தை தோன்றும். சிவம் இவற்றை இடமாகக் கொண்டு சிவம், சத்தி, சதாசிவம், மகேசுரன், சுத்த வித்தை எனப் பெயர் பெற்று நிற்கும். சிவம்—சிவன்; சத்தி—அருள்; நாதம்—ஒலி; விந்து—வித்து; சதாசிவம்—அருட்சிவம்; மகேசுரமுஞ் சுத்த வித்தையும் இறைவனது உருவத் திருமேனிக்குரிய இடங்கள்.

இத்தத்துவங்கள் அன்றி, சாந்தியதீதை, சாந்தி, வித்தை, பிரதிட்டை, நிவர்த்தி என்னும் ஐந்து கலைகளும் புவனங்களும் தோன்றும். கலை, தத்துவம், புவனம் மூன்றும் பொருட் பிரபஞ்சம் எனப்படும். சாந்தியதீதை—அமைதி மேற் கலை; சாந்தி—அமைதிக்கலை; வித்தை—புலக் கலை; பிரதிட்டை—பதிவுக் கலை; நிவர்த்தி—நீத்தற் கலை.

விந்துவில் இருந்து சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் நான்கு வாக்குகளுந் தோன்றும். சூக்குமை—மூலம்; பைசந்தி—பிண்டம்; மத்திமை—இடை;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகரி-விரி; அன்றி எண்பத்தொரு மந்திரங்களுந் தோன்றும், வாக்குக்களால் எழுத்துக்கள் தோன்றும். வண்ணம்-எழுத்து, பதம், மந்திரம் என்னும் மூன்றுஞ் சொற் பிரபஞ்சம் எனப்படும். சொல்லும்பொருளும் வடிவான இந்த ஆறனையும் "அத்துவா" என்றுவழங்குதல் சித்தாந்தமரபு. அத்துவா-வழி. அஃதாவது ஆன்மாக்களுக்குக் கன்மம் ஏறுதற்கும், பரகதி அடைதற்கும் காரணமான வழியாகும். சுத்த மாயையில் ஐந்து தத்துவங்கள் உண்டு. சுத்த மாயையிலுள்ள ஐந்து கலைகள் எல்லாத் தத்துவங்களிலும் வியாபித்திருக்கும்.

## ii அசுத்த மாயை

இஃது அதோமாயை, மாயை, மோகினி என்னும் பெயர்களால் வழங்கும். மல கன்மங்களோடு கலந்து அசுத்தப்படுதலால் ''அசுத்த மாயை'' எனப்படும். இது நித்தியமாய், ஒன்றாய், கலைமுதல் நிலம் ஈறாகிய அசுத்தப் பிரபஞ்சத்துக்குக் காரணமாய், அவற்றின் வியாபகமாய், வினைக்கும் பற்றுக்கோடாய் வினையிற் கட்டுண்ட ஆன்மாக்களை மயக்குவதாய், அருவமாய் நிற்கும். அசுத்த மாயையில் இருந்து காலம், நியதி, கலையும். கலையிலிருந்து வித்தையும், வித்தையிலிருந்து அராகமுந் தோன்றும். நியதி-ஊழ் எனலாம். காலம் எல்லாக் காரிய நிகழ்ச்சியையும் வரையறைப்படுத்துவது; நியதி-வினை செய்தானுக்கு அதன் பயனைச் சென்றடைதற்கேதுவாகி உள்ளது; கலை ஆணவ மறைப்பாற் சூனியம் போலக் கிடந்த உயிர்கட்கு, ஆணவ மலத்தைச் சிறிது நீக்கி, அதன் கிரியா சத்தியை விளக்குவது. மலத்தைக் கலைப்பதாற் கலை எனப் பெயர் பெற்றது. வித்தை-உயிர்களின் அறிவாற்றலை விளக்குவது. அராகம்-அவா, அஃதாவது பொதுவான விருப்பம். இவை ''அசுத்தப்பிரபஞ்சம்'' என்று கூறப்படும். ஆறு தத்துவங்கள் அசுத்த மாயையில் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## iii பிரகிருதி மாயை

அனுபவ பூர்வமாய் நின்ற தத்துவப் பிரபஞ்சங்கட்கெல்லாம் இது மூலகாரணமாதல் பற்றி மூலப்பகுதி என்றும், பிரகிருதி மாயை என்றும், பிரதானமென்றும், மான் என்றும், அவ்வியத்தம் என்றும் வழங்கப்படும்.

மூலப் பிரகிருதியில் நின்று குணதத்துவமும், அதில் இருந்து புத்தியும், அப்புத்தியில் அகங்காரமுந் தோன்றும். குணம் மூன்று. அவையாவன:- சாத்துவிகம், இராசதம், தாமதம் என்பன. இவை சுகதுக்க மோகங்கட்கு ஏதுவாய் உள்ளன. சாத்துவிகக் குணம் மிகுந்தும் பிற இரண்டுங் குறைந்தும் உள்ளது புத்தி தத்துவம். இராசதம் மிக்கு ஏனையன குறைந்த இடத்தே அகங்காரம் தோன்றும். அகங்காரம் "யான் இது செய்வேன்" என்று துணிதற்கேதுவாய் உள்ளது. அகங்காரம் தைசத அகங்காரம், வைகாரிக அகங்காரம், பூதாதி அகங்காரம் என மூவகைப்படும்.

தைசத அகங்காரத்தில் இருந்து சாத்துவிக குண சம்பந்தமான மனமும், செவி முதலிய ஞானேந்திரியங்கள் ஐந்தும் தோன்றும். ஞானேந்திரியங்களாவன: செவி, துவக்கு, கண், நாக்கு, மூக்கு என்னும் ஐந்துமாம்.

வைகரி அகங்காரத்தில் இராசத குண சம்பந்தமான வாக்கு முதலாய கன்மேந்திரியம் ஐந்துந் தோன்றும். கன்மேந்திரியங்களாவன:- வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் என்னும் ஐந்துமாம்.

பூதாதி அகங்காரத்தில் இருந்து தாமத குண சம்பந்தமான தன் மாத்திரைகள் ஐந்துந் தோன்றும். தன் மாத்திரைகளாவன:- சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தம் என்னும் ஐந்துமாம்.

சத்தத்திலிருந்து ஆகாயமும், பரிசத்திலிருந்து வாயுவும், உருவத்திலிருந்து தேயுவும், இரசத்திலிருந்து அப்புவும், கந்தத்திலிருந்து பிருதிவியுந் தோன்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாயம் முதலிய பஞ்ச பூதங்களுக்கும் முறையே சதாசிவன், மகேசுவரன், உருத்திரன், விட்டுணு, பிரமா ஆகிய ஐவரும் அதிதேவதைகளாம். இருபத்தைந்து தத்துவங்கள் பிரகிருதி மாயையில் உண்டு.

## தத்துவங்கள்:

சிவதத்துவங்கள்:-

நாதம், விந்து, சதாக்கியம், ஈசுரம், சுத்த வித்தை ஆகிய ஐந்தாம்;

வித்தியாதத்துவங்கள்:-

காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை ஆகிய ஏழுமாம்;

(அ) அந்தக்கரணமாவது: மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்குமாம்;
(சித்தத்தை மனத்தோடு சேர்த்து அதற்குப் பதிலாகக் குணத்தை ஒரு தத்துவமாகக் கொள்வதும் உண்டு.)

(ஆ) ஞானேந்திரியமாவது: காது, துவக்கு, கண், நாக்கு, மூக்கு ஆகிய ஐந்துமாம்;

(இ) கன்மேந்திரியமாவது: வாய், கால், கை, பாயு, உபத்தம் ஆகிய ஐந்துமாம்;

(ஈ) தன்மாத்திரையாவது: சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தம் ஆகிய ஐந்துமாம்;

(உ) பூதமாவது: நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய ஐந்துமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தநு—கரண—புவன—போகம்

தநு என்பது உடம்பு. கரணம்: மன முதலிய கருவிகள். புவனம்-உடம்புக்கு ஆதாரமாகிய உலகங்கள். போகம் அநுபவிக்கப்படும் பொருள்கள். இத்தநு கரண புவன போகங்களாகிய பிரபஞ்சத்துக்கு முதற் காரணமாகச் சுத்தமாயை, அசுத்த மாயை, பிரகிருதிமாயை மூன்றும் அமைந்துள்ளன. சிவசத்தி துணைக் காரணமாக இருக்கிறது. சிவபெருமான் நிமித்த காரணமாக இருக்கிறார்.

### i தநு

முற்பிறவிகளிலே செய்யப்பட்ட நன்மை தீமைகளுக்கேற்ப உடம்பு கிடைக்கின்றது. தேகம் ஆணவம் முயற்சி செய்வதற்குக் கருவியாக இருக்கிறது. அன்றியுந் திருவருளின் முயற்சிக்கு இடமாக நின்று புண்ணியஞ் செய்யவும், நல்லறிவை விளக்கவுங் கருவியாகவும் இருக்கின்றது.

இரத்தம், தசை, எலும்பு, தோல் முதலியவற்றால் ஆக்கப்பட்ட நமது உடம்பு, தூல சரீரம் என்று சொல்லப்படும். தூல சரீரம் பூதங்களால் ஆக்கப்பட்டது. இதைவிட இன்னும் இரு சரீரங்கள் இருக்கின்றன. அவை சூக்கும சரீரம், காரண சரீரம் என்பனவாம். சூக்கும சரீரம் தன் மாத்திரை ஐந்து, அந்தக்கரணம் மூன்று ஆகிய எட்டுஞ் சேர்ந்தமைந்தது. இது உணருதல், நினைத்தல், விரும்புதல் முதலிய உட்செய்கைகளைச் செய்தற்குக் கருவியாய் உள்ளது. காரண சரீரங் கடவுளுடைய திருவருளாலே ஆன்மாவினுடைய அறிவையும், தொழிலையும் விளக்கி ஆனந்தத்துக்குக் காரணமாய் விளங்குவது, சிவ தத்துவங்களால் ஆக்கப்பட்டது இதுவாகும்.

தூல சரீரம் அன்னமய கோசம், பிராணமய கோசம் என்னும் இரு பிரிவுகளை உடையது. அன்னமய கோசம் வெளிப்பகுதி. பிராணமய கோசம் அன்னமய கோசத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவாறு இயக்குவதாகும். சூக்கும சரீரத்திற்கு மனோமய கோசம் என்றும் பெயர் உண்டு. காரண சரீரத்தில் விஞ்ஞான மயகோசம், ஆனந்த மயகோசம் என இருபகுதிகள் உண்டு. விஞ்ஞான மயகோசம் ஞானத்தை அளிப்பது. ஆனந்த மயகோசம் ஆனந்தத்தை அளிப்பது.

ஒருவன் இறக்குங் காலத்து முதற்கண் அன்னமய கோசமும், அடுத்துப் பிராணமய கோசமும் அழியும். ஏனையவை சர்வசங்கார காலத்தில் அல்லது முத்தி நிலையில் அழியும். உடம்புக்குத் தனு, சரீரம், புற்கலம் முதலிய பல பெயர்களுண்டு.

## ii கரணம்

புறக்கரணம், அகக்கரணம் முதலிய கருவிகள் கரணங்களென்று சொல்லப்படும். கரணஞ் சிறப்புக் கருவி. இவை ஆன்மா நல்வினை தீவினைகளைச் செய்வதற்கு ஏதுவாய் இருக்கின்றன. நெருப்பு இருக்கின்றது. அதைக்கொண்டு உணவினைச் சமையல் செய்து உண்ணலாம்; அதனால் பொருள்களை எரித்து அழிக்கவுஞ் செய்யலாம். அதுபோல, அகப் புறக் கருவிகளைக் கொண்டு தீவினைகளைச் செய்யாமல் நல்வினைகளைச் செய்து ஆன்மாக்கள் பாசங்களில் நின்றும் விடுபட வேண்டுமென்பது இறைவனின் திருவருள் நோக்கமாகும்.

## iii புவனம்

உலகத் தொகுதி முப்பத்தாறு தத்துவங்களிலும் உண்டாகிய அண்டங்களும், அவற்றைச் சார்ந்த புவனங்களுமாம். அது நிலம், கடல், மலை முதலிய அவயவப் பகுப்புக்களை உடையது. அண்டங்களை ஆயிரத்தெட்டென்பர். அந்த அண்டங்களிலே உள்ள புவனங்கள் உருத்திர மூர்த்தி முதலிய அதிபதிகளுக்கு உட்பட்ட சிறப்பிடங்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிவிர்த்தி கலையில் காலாக்கினி ருத்திரபுவனம் முதல் பத்திரகாளி புவனம் வரையில் 108 உண்டு. பிரதிட்டா கலையில் அம்ரேசபுவனம் முதல் சீகண்டபுவனம் வரையில் 56 உண்டு. வித்தியாகலையில் வாமபுவனம் முதல் அங்குட்ட மாத்திர புவனம் வரையில் 27 உண்டு. சாந்தி கலையில் புவனம் முதல் சதாசிவ புவனம் வரை 18 உண்டு. சாந்தியதீத கலையில் நிவிர்த்தி புவனம் முதல் அநாசிரித புவனம் வரையில் 15 உண்டு; ஆகவே, புவனங்களின் தொகை 224 என்பர் பெரியோர்.

காலாக்கினி ருத்திரபுவனத்திற்கு மேல் நரகங்கள் உண்டு. அதற்குமேல் அவற்றிற்கதிபதி வைகும் புவனம் உண்டு. அதற்குமேல் ஏழு பாதாளங்களும், அவற்றின் அதிபதி வைகும் புவனமும் உண்டு. அதற்கு நெடுந் தூரத்தில் பூவுலகுண்டு. பூமிக்கு நடுவில் எண் திசைப்பாலகரும், மும்மூர்த்திகளும் இடங்கொண்டுள்ளனர்.

பூவுலகம் ஒன்பது பெரும் பிரிவுகளைக் கொண்டது. பெரும் பிரிவு வருடம் என்று வழங்கப்பெறும். அவற்றுள் சிறந்தது பாரத வருடம். அதுவே கரும பூமி. ஏனைய போக பூமிகள். பாரத வருடமும் ஒன்பது கண்டங்களைக் கொண்டது.

பூவுலகின் மேல் ஆதித்த மண்டலம் வரையுள்ள பகுதி புவலோகம். அதன் மேல் சுவலோகம், மகலோகம், சனலோகம், தவலோகம், சத்தியலோகம், செங்கண்மால்லோகம், சிவலோகம் முதலியன உண்டு. இவ்வாறு ஒவ்வோர் அண்டங்களிலும் உண்டு.

உயிர்கள் புவனங்களிற் புகுந்து இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றன.

## iv போகம்

போகம், இன்ப துன்பங்களை அனுபவித்தற்கேதுவாகிய பொருள்களாம். அவை பலவாகும்; இவை கன்ம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுகர்ச்சியின் பொருட்டே கிடைக்கின்றன. சங்கார காலத்தில் தனுகரணுதிகள் எல்லாந் தத்தம் நிலை குலைந்து அருவமாய் மாயையுள் ஒடுங்கும்.

## (இ) கன்மம்:—

கன்மம் ஆன்மாக்கள் எடுக்கும் உடம்புகளுக்குக் காரணமாய்ப் பலவிதமான போகங்களைத் தரும். இஃது இடையருது ஓடும் நீர்ப் பிரவாகம் போலத் தொடர்ச்சியாய்ப் பல பேதங்களாய், ஆன்மாவை விட்டு நீங்காததாய், மனம் வாக்குக் காயங்களால் செய்யப்படுவதாய் இருக்கும்; அன்றியும் இன்ப துன்பந் தரும் புண்ணிய பாவ வடிவினதாய்ச் சர்வ சங்கார காலத்தில் உயிர்கள் மாயையில் ஒடுங்கும் போது அவ்வுயிர்களை விட்டு நீங்காது மாயையில் ஒடுங்கும்.

இக்கன்மம் பிராரத்தம், ஆகாமியம், சஞ்சிதம் என மூன்ருகும். இப்பிறவியில் ஒருவன் முன் செய்த வினையின் பயனை அனுபவிக்கும் போது, அது பிராரத்தம் என்று கூறப்படும். வினையை அனுபவிக்கும் போது, அவன் செய்யும் புதிய வினை ஆகாமியம் என்று கூறப்படும். அனுபவிக்கப்படாமல் எஞ்சி இருக்கும் வினை சஞ்சிதம் என்று கூறப்படும்.

கன்மத்தின் பயன், செய்த முறையில் அன்றி மாறியும் வரும். தெய்வங்காரணமாக வருங் கன்மத்தை ஆதி தெய்விகம் என்றும், பஞ்ச பூதங் காரணமாக வருங் கன்மத்தை ஆதி பௌதிகம் என்றும், உயிர்களால் வருங் கன்மத்தை ஆதி ஆத்மிகம் என்றுங் கூறுவர்.

நல்வினை தீவினைகள் அனுபவித்தே முடியவேண்டும். பிராயச் சித்தத்தினுலும், ஞான வழியில் நின்று ஒழுகுவதனுலும் அதிகமான பாவங்கள் நீங்கும் என்று சாத்திரங்கள் கூறும்.

தீவினையின் குணங்களாவன:- ஆசை, கோபம், பொருமை, செருக்கு, நீதியீனம் முதலியனவாம். நல்வினையின் குணங்களாவன:- கடவுள் பத்தி, அன்பு, நீதி, உண்மை, பெருமை முதலியனவாம்.

நாம் நல்வினை தீவினைகளை அறிந்து, ஆணவத்தை வலி குன்றச் செய்து, எம்மை ஈடேற்ற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தேவாரம்

—✶—

## தேவாரம்: (பொது)

சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்று உயிர்கள் அறிந்து வழிபட்டு உய்யுமாறு திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்னுஞ் சைவசமயகுரவர் மூவரும் அருளிச்செய்த தமிழ் மறை "தேவாரம்" என வழங்கும். இறைவனுக்கு நாரினால் தொடுத்துச் சாத்தும் நறுமலர் மாலைபோல, பத்திமை ஆகிய நாரின்கண் தொடுத்துச் சாத்தப்பட்ட தீந்தமிழ்ச் செஞ்சொல்மாலை இவை ஆதலின் இவற்றிற்கு இப்பெயர் உண்டாயிற்று: (ஆரம்-மாலை) தேவாரம் ஓரிலக்கத்து ஈராயிரம் திருப்பதிகங்களை உடையது என்றும் ஒழிந்தன போக எஞ்சிநிற்பன எழுநூற்றுத் தொண்ணூற்றேழு திருப்பதிகங்கள் என்றும் ஆன்றோர் கூறுவர். ஞானசம்பந்தப்பெருமானும் நாவுக்கரசுப்பெருமானும் சமகாலத்தவர். அது கி. பி. 7 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகும். சுந்தரமூர்த்தி சுவாமிகள் கி. பி. 9ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவர்.

அபயகுலசேகர சோழ மன்னன் வேண்டுகோளின்படி திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரது திருவருள் பெற்ற நம்பியாண்டார் நம்பிகள், சிதம்பரத்தில் பொற்சபை மருங்கில் உள்ள திருவறையிலே தேவாரச் சுவடிகளைக் கண்டெடுத்து, திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரத்தை மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்தை மூன்று திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரத்தை ஒரு திருமுறையாகவும் வகுத்து உலகிற்கு உதவி அருளினார்கள். இவ்வேழு திருமுறைகளும் அடங்கன்முறை என்றுங் கூறப்படும். நம்பியாண்டார் நம்பிகள் காலம் கி. பி. 10ஆம் நூற்றாண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1-ஆந் திருமுறை

பண்-பழந்தக்க ராகம்

## திருத்தோணிபுரம்

1. சிறையாரு மடக்கிளியே இங்கேவா தேனொடுபால்
முறையாலே உணத்தருவன் மொய்பவளத் தொடுதரளம்
துறையாருங் கடல்தோணி புரத்தீசன் துளங்கும் இளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே.

பொ-ரை:— அழகிய சிறகினையுடைய கிளியே இங்குவா; தேனும் பாலுங் கலந்து இனிமை பயக்கும் விதத்தில் உண்பதற்குத் தருகிறேன். நிறைந்த பவளமும், முத்தும் மிகுந்த கடற்றுறையினையுடைய திருத்தோணிபுரத்திலே வீற்றிருக்கின்ற கடவுளாகிய, இளம்பிறைச் சந்திரனை முடியில் சூடிய சிவபெருமானது அழகிய திருப்பெயரை ஒரு முறை பேசுவாயாக.

கு-ரை:— மடக்கிளி-இளங்கிளி. முறை-இனிமை பயக்கும்முறை. மொய்-நெருங்கிய, நிறைந்த. தரளம்-முத்து. துளங்குதல்-விளங்குதல். நாமம்-பெயர்; புகழுமாம்.

சம்பந்தப் பெருமான் இப்பதிகத்தில் சிவபெருமானைத் தலைவனாகவும், தம்மைத் தலைவியாகவும் எண்ணிப் பாடுகிறார். தமது ஆருயிர்த் தலைவனாகிய சிவபெருமானது திருப்பெயரைக் கூறும்படி கிளியிடம் வேண்டுகிறார்.

திருத்தோணிபுரம்:— பிரளய காலத்தில் உலகமெல்லாம் வெள்ளத்தில் மூழ்கிய காலை, பிரணவந் தோணியாக மிதந்தது. அத்தோணியில் இறைவனும் இறைவியும் வீற்றிருந்தது இப்பதியிலாகும். அதனால் இப்பெயர் உண்டாகியது. திருத்தோணி புரத்துக்குப் பன்னிரண்டு பெயர்கள் உண்டு. அவையாவன:- பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சைவயம், கழுமலம் என்பன. சுவாமி பெயர்-தோணி அப்பர். தேவி-திருநிலைநாயகி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1-ஆந் திருமுறை பண்-குறிஞ்சி

## திருச்சிராப்பள்ளி

2. நன்றுடையானைத் தீயதில்லானை நரைவெள்ளே(று)
ஒன்றுடையானை உமையொரு பாகமுடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்னுள்ளங் குளிருமே.

பொ-ரை:— நன்மையைச் செய்யும் இயல்பினையுடையவனை, தீமையைச் செய்யும் இயல்பு இல்லாதவனை, மிக்க வெண்மையுடைய தரும்தேவதையாகிய இடபத்தை உடையவனை, உமாதேவியை ஒப்பற்ற தனது இடப்பாகத்தில் வைத்துக்கொண்டிருப்பவனை, இயல்பாகவே பொருந்திய செல்வத்தினையுடையவனை, திருச்சிராப்பள்ளி மீது கோயில் கொண்டவனைப் புகழ்ந்து பாட என்மனம் மகிழ்வடையும்.

கு-ரை:— ஏறு-இடபம், சென்றடையாத திரு-நல்வினை காரணமாக வந்து சேராத செல்வம், எனவே இறைவன் இயற்கையான செல்வம் உடையான் என்பது விளக்கப்பட்டுள்ளது. சிராப்பள்ளி-திரிசிரபுரம் என வழங்கும். இங்கு திரிசிரன் என்பான் பேறு பெற்றான் என்று புராணம் கூறும். சிராப்பள்ளி மலையில் தாயுமானார் கோயில் உண்டு. தாயுமானார் என்ற பெயர் தன்மீது அன்பு கொண்ட மூதாட்டி ஒருத்தியின் மகளுக்குப் பிரசவ வேளையில் தாயாகி உதவி செய்த காரணத்தால் ஏற்பட்ட பெயராகும். காளத்தி, திரிகோணமலை, சிராப்பள்ளி ஆகிய மூன்றுந் தக்கிணகைலாசம் என்று கூறப்படுவதுண்டு.

சுவாமி-தாயுமானார். தேவி-மட்டுவார் குழலம்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1-ஆந் திருமுறை பண்-குறிஞ்சி

கோயில்

3. கோணா கணையானுங் குளிர்தா மரையானுங்
காணார் கழலேத்தக் கனலாய் ஓங்கினான்
சேணார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேத்த
மாணா நோயெல்லாம் வாளா மாயுமே.

பொ-ரை:— வளைவுடைய பாம்பைப் படுக்கையாக உள்ள திருமாலும், குளிர்ந்த தாமரைமேல் வீற்றிருக்கின்ற பிரமாவும், அடியும் முடியுங் காணாதவர்களாய்த் திருவடிகளைத் துதிக்கச் சோதி வடிவாகத் தோன்றிய சிவபிரானுக்கு உரியதும், தேவர்கள் வாழ்கின்ற இடமானதுமான சிதம்பரத்தின் கண் உள்ள பெருமானைத் துதித்தால், தீரமுடியாத துன்பங்கள் யாவும் உடனேயே நீங்கும்.

வி-ரை:— கோணாகணையான்—கோள் + நாக + அணையான்—வளைந்த பாம்பைப் படுக்கையாக உள்ளவன் (திருமால்) காணார்-காணாதவர்களாய். கனல்-நெருப்பு; சோதி. ஓங்கினான்-சிவபிரான். சேணார்.தேவர்கள்-(சேண் - ஆகாயம்) மாணா-கொடிய. வாளா-முயற்சியின்றி, தாமாக; தில்லை-சிதம்பரம் என்னும் ஊர்; சிற்றம்பலம்-சிவபிரான் எழுந்தருளியிருக்கும் கோயில். சிவபிரானை வணங்குதற்காகத் தேவர்கள் என்றுந் தங்கியிருத்தலின் 'சேணார் வாழ்தில்லை' என்றார்.

பதிக வரலாறு:- திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் ஞானப்பால்பெற்றுத் திருப்பதிகம் பாடிய பின், தந்தையாருடன் தங்கியிருந்தார். பல ஊர்களிலிருந்தும் பலர் நாள்தோறும் வந்து அவரைத் தரிசித்தார்கள். தமது தாயார் பிறந்த திருநனிப்பள்ளிக்குச் சென்று திருப்பதிகம்பாடி வணங்கினார். பின் வழியிலுள்ள தலங்களையுந் தரிசித்துச் சீகாழியை அடைந்தார் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் வந்து அங்கு தங்கியிருந்தார். சிவத்தலங்களுட் சிறந்த சிதம்பரத்தைத் தரிசித்தற்காகத் தந்தையாருடனுந் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாருடனும் அங்கு சென்று 'கற்றாங் கெரியோம்பி' என்னும் முதலையுடைய திருப்பதிகத்தைப் பாடி வணங்கினார். அப்பதிகத்தில்வரும் 9ஆம் பாடலே இதுவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை:— திருமால் காத்தற் கடவுள், பிரமா படைத்தற் கடவுள். யார் மேலானவர் என்பதையிட்டு இவர்களிருவருக்கும் ஒருமுறை விவாதம் உண்டாயிற்று. இதனைத் தீர்த்தற்காகச் சிவபிரான் இவர்கள் முன் சோதி வடிவமாகத் தோன்றினர். அங்கு எழுந்த அசரீரி வாக்கின்படி, திருமால் பன்றியாகிச் சோதியின் அடியைக் காண்பதற்கும், பிரமா அன்னமாகி அதன் முடியைக் காண்பதற்குஞ் சென்றனர். அவைகளைக் காணமுடியாதவர்களாய் இளைத்து மீண்டனர். அப்போது சிவபிரான் ஒருவரே எல்லார்க்கும் மேலானவர் என்னும் உணர்வு பெற்று, அவரைத் துதித்தனர்.

—★—

2-ஆந் திருமுறை பண்-செவ்வழி

## திருக்கேதாரம்

4. தொண்டர் அஞ்சுகளிறு மடக்கிச் சுரும்பார்மலர்
இண்டை கட்டி வழிபாடு செய்யுமிட மென்பரால்
வண்டு பாட மயிலாட மான் கன்று துள்ளவரிக்
கெண்டை பாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே.

பொ-ரை:- அடியார்கள் ஐம்புலன்களாகிய யானை ஐந்தையும் அவை செல்லும் பாதையில் செல்ல விடாது தடுத்து, வண்டு மொய்க்கும் பூக்களைப் பறித்துத் தலைமாலை கட்டிச் சிவபிரானுக்கு வழிபாடு செய்கின்ற இடமாவது வண்டுகள் பாடவும், மயில்கள் ஆடவும், மான் கன்றுகள் துள்ளவும், சுனைகளில் கோடுகளையுடைய கயல் மீன்கள் பாயவும், நீலோற்பல மொட்டுகள் விரிகின்ற திருக்கேதாரம் என்னும் பதி என்று பெரியோர் கூறுவர்.

கு-ரை:— அஞ்சு-ஐந்து என்பதன் போலி; சுரும்பு-வண்டு; இண்டை-தலையில் அணியும் மாலை, சுனை-மலையில் அமைந்த நீர்நிலை; ஞானசம்பந்த சுவாமிகள் தமிழ் நாட்டிலிருந்தே இத்தலத்தைப் பாடினரென்பர்.

சுவாமி-கேதாரநாதர், தேவி-கேதாரகௌரியம்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2-ஆந் திருமுறை பண்-சீகாமரம்

## திருப்புள்ளிருக்கு வேளூர்

5. பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக
மண்ணின்றி விண்கொடுக்கும் மணிகண்டன் மருவுமிடம்
எண்ணின்றி முக்கோடி வாணுள துடையானைப்
புண்ணொன்றப் பொருதழித்தான் புள்ளிருக்கு வேளூரே.

பதிகவரலாறு:— திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் சீர்காழியிலே தங்கியிருந்தபோது, தந்தையார் விருப்பப்படி அவருக்கு உபநயனச் சடங்கு நடைபெற்றது. திருநாவுக்கரசு நாயனுர் அவரைக் காணச்சென்ருர். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் அவரை வரவேற்று உபசரித்தார். சிலநாள் திருநாவுக்கரசர் அங்கு தங்கியிருந்துவிட்டுப் பிறதலங்களைத் தரிசிக்கச் சென்ருர். மீண்டுஞ் சிவத்தலங்களைத் தரிசிக்கும் விருப்பத்தினுலே ஞானசம்பந்தப்பெருமான் புறப்பட்டார். அவரது தந்தையாரும் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனுரும் ஏனைய அடியார்களும், அவருடன் சென்றனர். காவேரிக்கு வடபால் மேற்றிசை நோக்கிச் சென்று திருப்புள்ளிருக்கும் வேளூரை அடைந்து இறைவனை வழிபட்டார். அப்போது அவர் அருளிய பதிகம் இதுவாகும்.

சுவாமி-வைத்தியநாதர். தேவி-தையனுயகி.

பொ-ரை:— பண்ணோடு இசைபாடுகின்ற அடியார்கள் பூமியிலே குடிகளாக வாழுதலை நீக்கி, அவர்களுக்குச் சிவலோக வாழ்வை அருளுகின்ற நீலமணிபோன்ற கண்டத்தை உடைய சிவபிராணுனவர் எழுந்தருளியிருக்கும் இடமாவது: அளவு இல்லாது மூன்றுகோடி ஆயுளைப்பெற்ற இராவணனை அவனது உடல் துன்புறும்படி எதிர்த்து வலிமையை இல்லாமற் செய்த சடாயு என்பவன் வாழ்ந்த வேளூர் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி-ரை:— பண்-தாளத்தோடு கூடிய இசை அமைவு; இராகம். குடி-குடிகள். மண்-பூமி. விண்-மேலுலகம். உடையான்-இராவணன். புண்-காயம். புள்-பறவை; இங்கு பறவைகளுக்கு அரசனாகிய சடாயுவைக் குறிக்கிறது. பண்ணொன்ற-பண் + ஒன்ற. வாளுளதுடையானை-வாள்நாள் + அது + உடையானை; புண்ணொன்ற-புண் + ஒன்ற, "மண் குடியாக இன்றி" எனச் சேர்க்க.

திருப்புள்ளிருக்கு வேளூர்:— தென் தமிழ் நாட்டிலே, தஞ்சை மாவட்டத்திலே, காவேரியின் வடகரையில் இருக்கிறது. சடாயு, சம்பாதி என்னும் பறவையரசர்களது இருப்பிடமாக இருந்ததினால் இப்பெயர்பெற்றது. புள் + இருக்கு + வேள் எனப் பகுத்துச் சடாயுவினாலும், இருக்கு வேதத்தினாலும் குமரக் கடவுளினாலும் வழிபடப்பட்ட இடம் எனவுங் கூறுவர். குமரக்கடவுளுக்கு வேல் இங்குதான் கொடுக்கப்பெற்றது என்பர்; 'திரு' கடவுட் தன்மையை உணர்த்தும் சொல். வேள்-குமரக்கடவுள். இத்தலம் இப்போது வைத்தீசுவரன் கோவில் என வழங்குகின்றது. நோய்களை நீக்குஞ் சிறப்பினால் இப்பெயர் ஆயிற்று. தலவிருட்சம்-வேம்பு.

கதை: இராவணன் சிவபிரானை வழிபட்டு மூன்றுகோடி ஆயுளும், வீரவாளும், மேலான வலிமையும் பெற்றான். தந்தையின் சொல்லைக் காத்தற்காக இராமர் தம்து மனைவியுடனும், இலக்குமணனுடனுங் காட்டிலேயே தங்கியிருந்தார். இராம, இலக்குமணர்கள் இல்லாத நேரத்தில் இராவணன் சீதையைக் கவர்ந்து புட்பக விமானத்தில் ஆகாய வழியாக இலங்கையை நோக்கி வந்தான். இதனை அறிந்த சடாயு அவனை எதிர்த்துப் போரிட்டு அவனது விமானத்தைச் சேதமுறச் செய்தான். எனினும், இறைவன் அவனுக்குக் கொடுத்த வாளினால் வெட்டுண்டு நிலத்தில் வீழ்ந்தான். பலநாள் குற்றுயிராய் இருந்து இராமர் சீதையைத் தேடி வரும்போது நடந்தவைகளை அவருக்குக் கூறிப் பின்பு உயிர் விட்டார். இவர் இராமரது தந்தையின் நீண்டகால நட்பினராவர்.

இவ்வரலாறு இராமாயணத்திற் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. திருநாவுக்கரசு நாயனுர் தேவாரம்

4-ஆந் திருமுறை பண்-காந்தாரம்

## திருவதிகை வீரட்டானம்

**சுண்ண வெண் சந்தனச் சாந்துஞ் சுடர்திங்கட்சூளா மணியும்**
**வண்ண உரிவை யுடையும் வளரும் பவள நிறமும்**
**அண்ண லரண்முர ணேறும் அகலம் வளாய அரவுந்**
**திண்ணன் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்**
**அஞ்சுவ தியாதொன்று மில்லை அஞ்ச வருவது மில்லை.**

**பதிக வரலாறு:—** இளவயதிலே தந்தையுந் தாயும் இறந்தமையாலே திருநாவுக்கரசர் கல்வி கற்பதற்காகப் பாடலிபுரஞ் சென்று சமண சமயத்தவரானுர். திருவதிகை வீரட்டானத் திருக்கோயிலிலே இருந்த அவரது தமக்கையார் இச்செய்தியை அறிந்து உள்ளம் மிக வருந்தி, தமது சகோதரன் மீண்டுஞ் சைவ சமயத்தவனுக வேண்டும் என நாள்தோறும் இறைவனை வேண்டினுர். திருநாவுக்கரசருக்குச் சூலை நோய் உண்டானது. சமணர்களால் அந்நோய் குணமடையவில்லை. நோயின் துன்ப மிகுதியால் நாவுக்கரசர் தமக்கையாரிடஞ் சென்ருர். தமக்கையார் அவரைத் திருவதிகைக் கோயிலுக்கு அழைத்துச் சென்று, விபூதி அணிவித்துத் திருக்கோயிலையும் வலம் வரச் செய்தார். சூலை நோய் நீங்கியது. மீண்டுஞ் சைவ சமயத்தவராகித் தமக்கையாருடன் இருந்தார்.

இச்செய்தியை அறிந்த சமண குருமார் மிக வெறுப்படைந்து, அவரது செயலினுலே சமண சமயத்திற்கு இழிவு வந்து விட்டதென்றும், அவரைத் தண்டிக்க வேண்டுமென்றும் அரசனிடங் கூறினர். சமண சமயத்தவனுன அரசனும் அவர்களது துர்ப்புத்திக்கு இணங்கி, அவரை அழைப்பித்துச் சுண்ணும்பு அறையில் அடைத்து வைத்தான். பின்பு நஞ்சு கலந்த உணவைக் கொடுத்தான். இந்நேரம் நாவுக்கரசர் சிவபெருமானை நினைத்து தேவாரப் பதிகங்களைப் பாடி உயிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பினார். பின்பு அரசன் தனது பட்டத்து யானையை அவரிடம் ஏவினான். அப்போது நாவுக்கரசர் சிவபிரானை நினைத்து "சுண்ண வெண் சந்தனச் சாந்துஞ்" என்னும் இத்தேவாரத்தை முதலாக உள்ள பதிகத்தைப் பாடினார். யானை அவரை வலம் வந்து வணங்கி, தீய எண்ணங் கொண்ட சமணரையும் பாகனையுங் கொன்று, அரசனும் அஞ்சும்படி தனது இடத்தை அடைந்தது.

ப-ரை:— சுண்ண வெண் சந்தனச் சாந்தும்-பொடியாக்கிய வெண்மையான விபூதியுடன் சந்தனக் குழம்பையும்; சுடர்திங்கட் சூளாமணியும்-ஒளிபொருந்திய சந்திரன் என்னும் முடி மணியினையும்; வண்ண உரிவை உடையும்-அழகிய புலியினது தோலாகிய உடையையும்; வளரும் பவள நிறமும்-அழகு மேலும் மிகுகின்ற செம்மை நிறத்தையும்; அண்ணல் அரண் முரண் ஏறும்-அடைந்தார்க்கு அரணாகவும், அடையாதார்க்கு முரணாகவும் உள்ள இடபத்தையும்; அகலம் வளாய அரவும்-மார்பிலே சூழ்ந்துள்ள பாம்பையும்; திண்ணன் கெடிலப் புனலும்-வலிமையான கெடில நதி நீரினையும்; உடையார் ஒருவர் தமர் நாம்-உடைய ஒப்பற்ற முதல்வராகிய சிவபிரானது அடியவர்கள் நாங்கள்; (ஆகையால்) அஞ்சுவது யாதொன்றும் இல்லை-பயப்படுவதற்கு எதுவும் இல்லை; அஞ்சவருவதுமில்லை-பயப்படுத்துதற்காக வருவதற்கும் எதுவும் இல்லை.

வி-ரை—சுண்ணம்-பொடி, வண்ணம்-அழகு. அண்ணல்-பெருமை. உரிவை-புலித்தோல். முரண்-வலிமை. அகலம்-மார்பு. கெடிலம்-கெடிலநதி, உடையார்-சிவபிரான். தமர்-அடியவர். ஒருவர்-ஏகன், ஒப்பற்றவர். சூளாமணி-தலையிற் சூடும் அணிகலன். இடபமாவது தருமம். இப்பதிகத்தை அப்பரடிகள் பாடியருளியமை, மண்ணுலகத்தவர் இதனை ஓதிப் பயன்பெறுவது கருதியேயாகும். "சுண்ணவெண் சந்தனச் சாந்து தொடுத்த திருப்பதிகத்தை மண்ணுலகுய்ய வெடுத்து மகிழ்வுடனே பாடுகின்றார்" அப்பர் பெருமான் என, தெய்வச் சேக்கிழார் சிறப்புறக் கூறியமையும் ஈண்டு கருதற்பாலதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபூதியுஞ் சந்தனச் சாந்தும் சிவபிரானது திருமேனிமுழுவதும் பூசுதற்கும், புலித்தோல் உடை அவர் அரையில் அணிதற்கும் திங்களுங் கங்கையும் அவர் திருச்சடையிலே சூடுவதற்கும், பாம்பு அவர் மார்பிலுந் தோளிலும் அணிவதற்கும், ஏருது ஊர்தியாக அவரைத் தாங்குவதற்கும் உரியன. கடவுள் ஒருவரே ஆதலின் 'உடையார் ஒருவர்' என்ருர். ஏனைய சிவனடியாரையுந் தம்மோடு சேர்த்து 'நாம்' எனப் பன்மையாகக் கூறினர். தமது அடியவருக்கு வரும் இடையூறை அவர் நீக்கிக் காப்பர். எங்களுக்கு ஊறு விளைவிக்கும் ஏதுவும் உலகில் இல்லை; நாங்கள் எதற்கும், யாருக்கும் அஞ்சவேண்டுவதுமில்லை என்பதாம்.

உலகிற்கு ஊறு விளைவித்த புலியும், பாம்பும், கங்கையும் அவர் ஆணைக்கு அடங்கின. தக்கனின் சாபத்திஞலே திங்களுக்கு வந்த இழிவை நீக்கி யாவருந் தொழும் உயர்ந்த பேறு நல்கினர். தாருகவனத்து முனிவர்கள் ஆணவ முனைப்புடன் செய்த யாகத்திலிருந்து தோன்றிய, பாம்பையும் புலியையும் அடக்கித் தமக்கு அணியாகக் கொண்டார். பகீரதனுக்காகக் கங்கையைத் திருச்சடையில் அணிந்து தன் ஆணைக்கு உட்படுத்திஞர்.

**திருவதிகை வீரட்டானம்:** இது நடு நாட்டிலுள்ள சிவத்திருப்பதிகளில் ஒன்று. கெடிலநதிக்கரையிலுள்ளது. சிறந்த எட்டுச் சிவத்தலங்களுள்திருவதிகை வீரட்டானமும் ஒன்று. சிவபெருமான் திரிபுரதகனஞ் செய்தருளியதலமும் இதுவேயாம். இங்கு இறைவன் திரிபுர சங்கார உருவினராகக் காட்சி கொடுக்கின்ருன். மண் சிறிது தூரத்திற்கு வெண்ணீருகக் காணப்படுதல், திரிபுர சங்காரத்தை எமக்கு நினைவூட்டுகின்றது. அதிகமான் பரம்பரையினரால் இக்கோவில் நிறுவப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. மகேந்திரவர்மன் பல திருப்பணிகளை இங்கு செய்துள்ளான். திலகவதியாரும், அப்பரும் இங்கு தங்கித் திருத்தொண்டுகள் புரிந்துள்ளனர். திலகவதியார் தொண்டாற்றிய பூந்தோட்டங் கெடில நதிக்கரையில் இன்றும் இருக்கின்றது. திலகவதியாருக்கும், அப்பருக்கும் இங்கு தனித்தனியான கோவில்கள் உண்டு. அப்பரது சூலை நோயை நீக்கி, சைவனுக மீண்டும் மாற்றிய பெருமை உடையது இத்தலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பர் திருவிழா, சித்திரை மாதச் சுவாதி முதல் சதயம் வரை ஆண்டுதோறும் நடைபெறுகின்றது. சம்பந்தர், அப்பர், அருணகிரிநாதர் ஆகியோர் இத்தலமீது பாமாலை அருளியுள்ளனர். விட்டுணு, பிரமா, கருடன், பஞ்சபாண்டவர் ஆகியோரும் வழிபட்டுப் பெரும்பேறு பெற்ற தலமும் இதுவாகும். ஞானசம்பந்தருக்குத் திருநடனங் காட்டியதும், சுந்தரமூர்த்தி நாயனருக்குத் திருவடி தீட்சை செய்ததும் இத்தலத்தின் புறத்தேயுள்ள சித்தவடமடத்திலேயாம்.

சுவாமி-அதிகை விரட்டநாதர். தேவி-அதிகைநாயகி,

—★—

# 12. (அ) அப்பர் தேவாரம்

4-ஆந் திருமுறை திருநேரிசை

## திருப்பாதிரிப்புலியூர்

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூர்அரனே.

பொ-ரை:— திருப்பாதிரிப்புலியூரில் கோயில் கொண்ட சிவபெருமானே! தாயின் வயிற்றிலே கருவாகக் கருப்பையில் இருக்கும் பொழுதே உன் திருப்பாதங்களை நினைக்கும் எண்ணத்தையடைந்தவனாய் இருந்தேன். இவ்வுலகத்தில் மானுடப்பிறவி எடுத்து, உனது திருப்பெய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரைச் சொல்லிப் பழகினேன்; உன்னுடைய திருவருளால் அழகிய வாயானது பொலிவுபெறச் சிவாயநம என்னுந் திரு ஐந்து எழுத்தை ஓதி விபூதி அணிந்தேன். ஆதலி ஞலே நீ அடியவனுகிய எனக்கு வீடுபேறு தந்தருள்வாயாக.

கு-ரை:— கழல்-வீரக்கழல், அது பாதத்தை உணர்த் திற்று. நாமம்-இறைவன் பெயர்; புகழுமாம். அவனரு ளாலே அவன் தாள் வணங்கி என்று மாணிக்கவாசக சுவா மிகள் கூறியவாறு, சிவனருளாற் சிவநாமம் பயின்றவாறு கூறினுர்.

சுவாமி-தோன்ருத்துணைநாதர். தேவி-தோகைநாயகி.

இத்தலத்திலேதான் திருநாவுக்கரசு நாயனுர் "ஈன்ருளுமாய் எனக்கெந்தையுமாய்" என்னுந் திருப்பதி கம் பாடிக்கொண்டு கடலில் நின்றுங் கரையேறினுர். சிகராதி பஞ்சாட்சரத்தைச் சூக்கும பஞ்சாட்சரம் என்றுங் கூறுவர்.

6-ஆந் திருமுறை தனித்திருத்தாண்டகம்

## பொது

2. சங்கநிதி பதுமநிதி இரண்டுந் தந்து
 தரணியொடு வானுளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்
 மாதேவர்க் கேகாந்த ரல்ல ராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழு நோயராய்
 ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனுங்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
 அவர்கண்டீர் நாம்வணங்குங் கடவு ளாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ-ரை:— உலகிர்! சங்கம் என்னும் அளவினையும் பதும்ம் என்னும் அளவினையும் உடைய செல்வங்களைத் தந்து, அவற்றின் மேல் பூமியையும் வானத்தையும் அரசாளத் தருவார்கள் எனினும், சிவபெருமானிடத்தில் ஏகாக்கிர சித்தம் கொள்ளாதவராயின், அழிந்து போகின்ற அவர்களது செல்வத்தை யாம் பெரிதாக மதிக்கமாட்டோம். உறுப்பெல்லாங் குறைந்து அழுகிக் குட்டரோகம் உடையவராய், பசுவூனைத் தின்று அலையும் புலையராக இருந்தாலும், கங்கையை நீண்ட சடையின்கண் செருகி வைத்திருக்கின்ற சிவபெருமானுரிடத்தில் அன்புடையவராகில், நாம் வணங்குங் கடவுளார் அவர்கள்தான் என்று அறிந்து கொள்மின்;

குறிப்பு:— சங்கம், பதும்ம் என்பன பெரிய இலக்கங்களைக் குறிப்பன. திரவிய விசேடம் எனினுமாம். ஏகாந்தர்-சிவபெருமான் ஒருவரையே மனத்தில் இருத்தியவர். தொழுநோய்-குட்டரோகம். கரத்தல்-மறைத்தல்; தாண்டகம்-விருத்தப்பா விசேடம்.

6-ஆந் திருமுறை திருத்தாண்டகம்

## திருவாரூர்

3; முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ-ரை:— பெண்களிற் சிறந்த தலைவி முதன் முதலாகப் பேரழகு ஒழுகும் உருவத்தைக் கண்டு அவனுடைய பெயரைக் கேட்டறிந்தாள்; பின்பு அவன் இருக்கும் திசையினையும், பிற இயல்புகளையுங் கேட்டறிந்தாள்; அதன்மேல் அவன் வாழும் ஊர் திருவாரூர் எனக்கேட்டறிந்து கொண்டாள்; மீண்டும் அவனிடத்திலே தடித்த (மாருத) அன்பு கொண்டாள்; அப்பொழுதே தனக்குத் துணையான தாயையும் தந்தையையும் விட்டுப் பிரிந்தாள்; பூமியில் உள்ளோரின் கட்டுப்பாடான ஒழுக்கங்களையும் விட்டுப் பிரிந்தாள்; தன்னையே மறந்தாள்; தன் பெயர் முதலியவற்றை இழந்தாள்; தன் தலைவனே தனக்குப் பற்றுக்கோடு என எண்ணி, அவனுடைய காவலில் அவனடி சேர்ந்து நின்றாள்.

சுவாமி-வன்மீகநாதர், தேவி-அல்லியங்கோதையம்மை.

கு-ரை:— முன்னம்-முதன் முதலாக, நாமம்-பெயர், புகழ், வண்ணம்-நிறம், குணம். பிச்சி-மயக்கம், மால்-தடித்த அன்பு; ஆசாரம்-ஒழுக்கம், கட்டுப்பாடு. தலைப்பட்டாள்-சென்று கூடினாள்; நங்கை-பெண்களிற் சிறந்தவள்;

இப்பாடல் நாயக நாயகி பாவத்தில் அமைந்துள்ளது. இருவினை ஒப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் எய்திய ஓர் உயிர், இறைவனது மெய்ம்மையை உணர்ந்து; அகப்பற்று, புறப்பற்றுக்களை நீக்கி, தானெனும் முனைப்பு இன்றி, தன் அறிவு செயல் முதலியன கெட்டு ஒழிய, இறைவனுடன் இரண்டறக் கலக்கும் பேரின்ப முத்தி நிலையினைத் தலைவன் தலைவி என்னும் உருவக முறையில் வைத்துக் கூறியுள்ளார் நம் நாவுக்கரசர்.

திருவாரூர் சிவத்தலங்களுட் சிறந்தது. இங்கு வீதி விடங்கப் பெருமான் கோயில் கொண்டருளியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்த பசுக்கன்றையும், சோழ அரச குமாரனையும், மந்திரியையுஞ் சிவபெருமான் உயிர் பெற்றெழச் செய்ததும் இப்பதியிலாகும்.

6-ஆந் திருமுறை திருத்தாண்டகம்

## திருவானைக்கா

4. எத்தாயர் எத்தந்தை எச்சுற் றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால் வந்துதவுவார் ஒருவ ரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாஉன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லகண்டங் கொண்டடியேன் என்செய் கேனே.

பொ-ரை:— எந்தத் தாயார், எந்தத் தந்தைமார், எந்த உறவினர், எந்தச் செல்வம், நல்ல செல்வமாகும்? யாவர்தான் நல்லவர்? இறந்தபோது வந்து உதவக் கூடியவர் யார்? இவ்வுலகில் ஒருவருமேயில்லை. அவர்கள் சிறு விறகுகளைக்கொண்டு நெருப்பையுண்டாக்கி எரித்துவிட்டுச் சென்றுவிடுவர். ஞான வடிவமாகிய வேடங்கள் பலவற்றைப் பூண்டவனே! நீண்ட காவிரியின் கரையிலுள்ள திருவானைக்கா என்னுங் கோயிலில் குடிகொண்ட செல்வனே! எந்தன் தந்தையே! உன் பொன்போன்ற திருப்பாதங்களை நான் அடையப் பெறுவேனானல், துன்பத்துக்கு இடமாயிருக்கிற உடலினல் என்ன பயனை அடைவேன்.

கு-ரை:— மாடு-செல்வம், சும்மாடு-நல்ல செல்வம்; பொன்னி-காவேரி நதி, அத்தன்-தந்தை. அல்லகண்டம்-துன்பம். இங்கு-துன்பத்திற்கு நிலைக்களனான உடலை உணர்த்திற்று.

சுவாமி-சம்புகேசுவரர், தேவி-அகிலாண்டநாயகி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. சுந்தரர் தேவாரம்

7-ஆந் திருமுறை பண்-நட்டராகம்

## திருக்கடவூர் வீரட்டம்

1. பொடியார் மேனியனே புரி நூலொரு பாற்பொருந்த
வடியார் மூவிலைவேல் வளர் கங்கையின் மங்கையொடுங்
கடியார் கொன்றையனே கட வூர்தனுள் வீரட்டத்தெம்
அடிகேள் என்னமுதே எனக் கார்துணை நீயலதே.

பொ-ரை:— விபூதியணிந்த திருமேனியுடையவரே! முப்புரிநூல் ஒரு பக்கத்தில் விளங்க, கூர்மை பொருந்திய மூன்று இலைகளையுடைய சூலத்தொடும், சடையின் மேல் வளர்கின்ற கங்கா தேவியோடும், வாசனை நிரம்பிய கொன்றை மலர் மாலையை அணிந்தவரே! திருக்கடவூரின் கண் இருக்கின்ற திருவீரட்டம் என்னுந் திருக்கோயிலில் எழுந்தருளிய பெருமானே! எனக்கு அமுதம் போன்றவரே! நும்மையன்றி எம்க்கு இவ்வகன்ற உலகில் யார் துணையாவர்.

கு-ரை:—வடியார்-கூர்மை பொருந்திய, மூவிலை வேல்-மூன்று இலைகளையுடைய சூலம், கடியார்-வாசனை நிறைந்த. வீரட்டம் என்பது வீரச்செயலைப்புரிந்த தலமாம். சிவபெருமான் எட்டுத் தலங்களில் வீரச்செயல் புரிந்தார் என்பது புராணம். அவற்றுள் திருக்கடவூரும் ஒன்று. இங்குதான் மார்க்கண்டேயர்க்காகச் சிவபெருமான் இயமனை உதைத்தார்.

சுவாமி-அமிர்தகடேசுரர், தேவி-அபிராமியம்மை.

7-ஆந் திருமுறை பண்-தக்கேசி

## திருவலிவலம்

2. பாடுமா பாடிப் பணியுமா றறியேன்
பனுவுமா பனுவிப் பரவுமாறறியேன்
தேடுமா தேடித் திருத்துமா றறியேன்
செல்லுமா செல்லச் செலுத்துமா றறியேன்

கூடுமா றெங்ஙன மோவென்று கூறக்
குறித்துக் காட்டிக் கொணர்ந்தெனை யாண்டு
வாடிநீ வாளா வருந்தலென் பானை
வலிவ லந்தனில் வந்துகண் டேனே.

பொ-ரை:— பாடும் விதத்திற் பாடி வணங்கும் முறைமையை அறியமாட்டேன்; பாடல்களைச் செய்து பாடி வணங்கவும் அறியமாட்டேன்; தேடும் வழியில் தேடி, நன்னெறியில் நெஞ்சைத் திருத்தும் விதமும் அறியேன்; ஐம்புலன்களை அவை செல்லவேண்டிய வழியில் செலுத்துவதற்கும் அறியமாட்டேன்; இந்நிலையில் இறைவனைச் சென்று கூடுதல் எங்ஙனமோ என்று செயலறியாது யான் கூறச் சுட்டிக்காட்டி, என்னைத் துன்பத்தில் நின்று மீட்டு, அடிமை கொண்டு, நீ வீணே வாடி வருந்தாதே என்று உறுதி கூறும் ஐயனை வலிவலம் என்னுந் திருப்பதியில் வந்து கண்டேன்.

கு-ரை:— பாடுமாபாடி-பாடும்வழியாய்ப் பாடி, பனுவுதல்-பாடல்களைச் செய்தல், குறித்துக்காட்டி-சுட்டிக் காட்டி, கொணர்ந்து-மீட்டு, வாளா-வீணே, வருந்தல்-வருந்தாதே, திருவலிவலம்-சோழநாட்டுத் தலம்.

சுவாமி-மனத்துணைநாதர், தேவி-மாழையங்கண்ணியம்மை.

—★—

7-ஆந் திருமுறை பண்-கொல்லிக்கௌவாணம்

## திருக்கச்சூர் ஆலக்கோயில்

3. முதுவாயோரி கதறமுது காட்டெரி
கொண்டாடல் முயல்வோனே
மதுவார் கொன்றைப் புதுவீசூடும்
மலையான் மகள்தன் மணவாளா

கதுவாய்த் தலையிற் பலிநீகொள்ளக்
கண்டாலடியார் கவலாரே
அதுவே யாமா றிதுவோ கச்சூ
ராலக்கோயி லம்மானே.

பொ-ரை:— கிழநரி சத்தஞ் செய்ய, சுடலையின் கண்ணே நெருப்பைக் கையில் ஏந்தி நடனம்புரிகின்றவனே! தேன் ஒழுகுங் கொன்றைப் புதுமலரைச் சூடும் மலையரசன் மகளின் நாயகனே! உடலினின்றும் ஒழிதலையுடைய மண்டை ஓட்டிலே நீ பிச்சை ஏற்றுத் திரிவதை அடியார்கள் கண்டால், துன்பப்பட மாட்டாரோ! திருக்கச்சூர் ஆலக்கோயிலில், கோயில் கொண்ட தலைவரே! அவ்வாறு உன் அடியார் வருந்தவோ இவ்வாறு நீர் பலி ஏற்கின்றீர்.

கு-ரை:— முதுவாய் ஓரி-கிழநரி, புதுவீ-புதும்லர். கதுவாய்-உடலினின்றும் ஒழிதல். பலி-பிச்சை. கவலுதல்-துன்புறுதல்.

ப-வ:— சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கழுக்குன்றத்தைத் தரிசித்துக் கொண்டு, திருக்கச்சூர் ஆலக்கோயிலையடைந்து ஆலய தரிசனஞ் செய்து கொண்டு கோயிற் புறத்தை அடைந்த பொழுது, அவருக்கு அமுது அளிக்கும் பரிசனங்கள் வராமையினால், பசியோடு கோயிலுக்கு வெளியே காத்திருந்தார். அப்பொழுது சிவபெருமான் அவர் முன் ஓர் அந்தணராய்த் தோன்றி 'அன்னப்பிச்சை எடுத்து உமக்கு அளிக்கின்றேன். எங்குஞ் செல்லாமல் இங்கு இரும்' என்று கூறி, அவ்வூரில் வீடு தோறுஞ் சென்று பிச்சை வாங்கி வந்து சுந்தரருக்கு அளித்தார். அவர் உண வருந்தி உவந்திருந்த பொழுது சிவபெருமான் மறைந்தருளினார். வந்தவர் சிவபெருமான் என்பதை அறிந்த சுந்தரர், சிவபெருமான் பெருங்கருணைத் திறத்தை நினைந்து இப்பதிகத்தைப் பாடியருளினார்.

சுவாமி-விருந்திட்ட வரதர், தேவி உமையம்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. திருவாசகம்

திருவாசகம்-அழகிய வாசகம். வாசகம் என்பது மொழி. வீடுபேற்றை விரும்புவோரது உள்ளத்தைக் கவரும் பேரழகுடைய அருட்பாடல்களால் ஆகிய நூல் என்பது பொருள். திருவாசகம் படிப்பவர் மனத்தைப் பரவசப்படுத்தும். இந்நூலை ஒருமுறை ஓதினாலும் உயிர் சிவத்தன்மை எய்தும். எளிய சொற்களால், உயர்ந்த பொருள்களால், நிறைந்த இசையால், எல்லோரையுந் தன்வயப்படுத்துந் தனிப்பெருந் தகவுடையது. வேதத்திலும் உயர்ந்தது; வேதத்தை மட்கலம் என்றால், திருவாசகம் பொற்கலம் எனத்தக்கது என்று ஆன்றோர் கூறுவர். திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது உலக மொழி. மாணிக்கவாசக சுவாமிகள் காலம் கி. பி. 3 ஆம் நூற்றாண்டென்று தமிழ்ப்பேரறிஞர்களான, சிவத்திரு மறைமலை அடிகள், திரு. கா. சுப்பிரமணியபிள்ளை முதலியோர் கூறுவர். மூவர் காலத்திற்குப் பிந்தியவர் என்று கூறுவாரும் உளர். திருவாசகம் 8 ஆந் திருமுறையைச் சேர்ந்தது.

## சிவபுராணம்

சிவனைப்பற்றிய பழைய வரலாறு-அஃதாவது, இறைவன் உயிர்களை உய்விக்கும் வண்ணம் அளவற்ற காலமாக இயற்றி வரும் பழைய திருவருட் செயல் முறைமையைக் கூறும் பகுதி என்பதாம்.

சிவபெருமான் மணிவாசக அடிகளாருக்குத் திருப்பெருந்துறையில் குருந்த மரத்தடியில் குருவடிவாக எழுந்தருளி அருளுபதேசஞ் செய்து அருள்பாலித்து ''சிதம்பரத்தில் அனவரதமும் ஆனந்தத் தாண்டவம் புரிந்தருளுகின்றோம், ஆண்டு வருக'' என்று கட்டளையிட்டு மறைந்தருளினார். அடிகள் அருட்குருவின் திருமேனிகாணும் இன்பத்தை இழந்தோம் என்று கவலை கொண்டார். அன்பரோடு கூடுதலாகிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநெறியின் வழி நிற்பராய் அடியார் குழாத்தை அடைந்தார். அடியார்களுந் தாமுங் குருந்த மரத்தடியில் தெய்வ பீடிகை அமைத்துக் குருநாதர் பாததாமரைகளை வணங்கி வந்தார். ஒருநாள் அவர் மனத்தில் இறைவன் தம்மை அடைந்தவர் ''அன்பிலார் ஆயினும் பாடிப் பணிகின்றவர்களுக்கு இரங்கி அருள் புரிவன்'' என்ற எண்ணம் திருவருளால் உண்டாயிற்று. உடனே நமச்சிவாய எனும் திருவைந்தெழுத்தை முதலாக வைத்துச் சிவபுராணத்தைப் பாடத் தொடங்கினார்.

—★—

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து(ம்) மண்ணிறைந்து(ம்) மிக்காய் விளங்கொளி[யாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லாவினையேன் புகழுமாறு ஒன்று அறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்
உய்யவென் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவுஇறுதி யில்லாய் அனைத்துஉலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்துஎங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டு உணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா அரனேஓ வென்றென்று

போற்றிப் புகழ்ந்துஇருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றுஆடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன்அடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொழிப்புரை:—** 1 — 5 வரிகள்

சிவபெருமானது பெருமையை உணர்த்தும் திருப்பெயராகிய நமசிவாய என்னும் திருவைந்தெழுத்தானது வாழ்க. தலைவனது திருவருட்சக்தியானது என்றும் வாழ்க. கண்ணை மூடி விழிக்கும் நேரமளவுகூட அடியேன் உள்ளத்தில் நின்று நீங்காதவனுடைய திருப்பாதங்கள் வாழ்க. திருப்பெருந்துறையில் எழுந்தருளி எளியேனை அடிமை கொண்ட குருமணியாகிய இறைவனின் திருவடிகள் வாழ்க. ஆகமப் பொருளாய் நின்று, அணுகி அருளை வழங்குகின்றவனுடைய திருவடிகள் வாழ்க. ஒருவனுகியும் பலராகியும் உலகுயிர் எங்கும் தங்குவானது திருவடிகள் வாழ்க.

குறிப்புரை:— நமசிவாய என்னும் சொற்றொடர் வணக்கம் சிவனுக்கு எனும் பொருளது. சாத்திரங்கள் நகரம் மறைப்புச் சத்தியை (திரோதான சத்தியை)க் குறிக்குமென்றும்; மகரம் மலங்களைக் குறிக்குமென்றும்; சிகரம் சிவத்தைக் குறிக்குமென்றும்; வகரம் திருவருட்சத்தியைக் குறிக்குமென்றும்; யகரம் உயிரைக் குறிக்குமென்றுங் கூறும்.

நாதன்-தலைவன், நாதவடிவினனுமாம். கோகழி-ஒரு சிவத்தலம், பசுத்தன்மை நீங்குமிடம் என்றபடி; ஆகமம்-வீட்டு நூல்; ஆன்மாக்களைப் பதியிடம் சேர்ப்பது; அண்ணிப்பான்-அணுகி அருள் வழங்குவான். இனிமை தருவான் என்பதுமொன்று.

**பொழிப்புரை:—** 6 — 10 வரிகள்

என் மனத்தின் வேகத்தைத் தொலைத்து அருள்புரிந்து அடிமைகொண்ட மன்னவனது திருவடிகள் வெற்றி பெறுக. பிறவிப் பிணியை நீக்கும் தலைக்கோலம் உடையவனது திருவருள் பெய்யப்பெற்ற வீரக்கழல்கள் அணிந்த பாதம் வெற்றி பெறுக. அன்புக்குப் புறமானார் அணுகவொண்ணுத தூரத்தில் உள்ளவனது பொலிவுமிக்க பாதங்கள் வெற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுக. கைகூப்பி வணங்குவார் தம்து நெஞ்சில் மகிழ்ச்சி யடைதற்கு ஏதுவாகிய தலைவனது பாதங்கள் வெற்றி யடைக. தலையில் கைகுவித்து வணங்கும் அடியாரை மேன்மையடைவிக்கும் புகழாளனுடைய பாதங்கள் வெல்க;

குறிப்புரை:— வேகம்-மனத்தின் துடிப்பு, பிஞ்ஞகன்-தலைக்கோலமுடையவன், புறத்தார்-அன்புக்குப் புறமாயினர். புறச்சமயத்தவர்களுமாம். உள்-மனம், சிரங்குவிவார்-சிரத்தின் மேல் கைகுவித்து வணங்குவார்.

பொழிப்புரை:— *11 — 16* வரிகள்

ஆண்டவன் திருவடிகள் நம்மைக் காப்பனவாக; எமது தந்தையாக விளங்குபவனது திருவடிகள் நம்மைக் காப்பனவாக; ஒளி வடிவினை உடையவனது பாதங்கள் நம்மைக் காக்க; அன்புவடிவான சிவபெருமானுடைய அழகிய பாதங்கள் நம்மைக் காக்க; அன்பினுள் அகப்பட்டு நின்ற தூயோனது பாதங்கள் நம்மைக் காக்க; வஞ்சகமாகிய பிறவியை அழிக்கும் அரசனது திருவடிகள் காக்க; சிறப்பு நிரம்பிய திருப்பெருந்துறையில் அமர்ந்த கடவுள் திருவடிகள் நம்மைப் பேணிக்காக்க; தெவிட்டாத இன்பத்தை அருளுகின்ற மலைபோன்ற இறைவன் நம்மைக்காக்க.

குறிப்புரை:— ஈசன் - யாவற்றையும் ஆளுகின்றவன்; தேசன்-ஒளியுள்ளவன், சிவம்-அன்பு, நன்மை, மங்கலம்; மாயம்-வஞ்சனை; ஆராத-உண்டு நிரம்பாத.

பொழிப்புரை:— *17 — 22* வரிகள்

சிவபெருமானாகிய முழுமுதற் கடவுள் எனது மனத்தின்கண் நிலைபெற்றிருந்த காரணத்தால் அவனது திருவருள் துணைக்கொண்டு அவனது திருவடிகளை வணங்கி நெற்றிக்கண் முதல்வன் குருமூர்த்தியாக வந்து திருவருள் நோக்கம் செய்யச் சிவ ஞானம் பெற்று மனத்தால் எண்ணுதற்கரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகு நிறைந்த அவனது திருவடிகளைப் பணிந்து மனம் மகிழ்ச்சியடையவும் ஊழ்வினை முழுதும் ஒழிந்து போகவும் சிவனது பழமையான அருட் செயல் முறையினை யான் சொல்லுவேன்.

சிவன் என் சிந்தையுள் நின்ற அதனால் அவன் அருளாலே அவன் தாள் வணங்கிக் கண்ணுதலான் தன் கருணைக் கண்காட்ட வந்தெய்தி எண்ணுதற்கெட்டா எழிலார் கழல் இறைஞ்சி, சிந்தை மகிழ முந்தைவினை முழுதும் ஓய-யான் சிவபுராணந் தன்னை உரைப்பன் என்று கூட்டுக.

**குறிப்புரை:—** சிந்தை-மனம்; அவன் என்பது பல சமயத்தவரும் பொதுவாகக் குறிக்கும் முழுமுதற் கடவுள்; ஓய-கெட, நுணுகவுமாம்; கருணைக் கண்காட்ட என்றதனால் நெற்றிக்கண், கருணைக்கண் என்பது பெறப்படும்.

**பொழிப்புரை:— *23 — 25* வரிகள்**

வானுலகிலும் மண்ணுலகிலும் நிறைந்தும் அவற்றிற்கு அப்பாலுமாய் விளங்குபவரே! விளங்கும் ஒளிவடிவினரே! எண்ணப்படும் சுட்டுப் பொருள் அனைத்தையும் கடந்து அளவற்ற தன்மையை உடையவரே! உமது பெரிய புகழினைக் கொடிய வினையுடையோனாகிய நான் எடுத்துச் சொல்லும் வகை ஒன்றினையும் அறியமாட்டேன்.

**குறிப்புரை:—** நிறைந்து என்றது இறைவனது பூரணத்தை விளக்கியவாறும்; இறந்து-கடந்து.

**பொழிப்புரை:— *26 — 31* வரிகள்**

எங்கள் தலைவரே! புல்லாகியும், பூண்டாகியும், புழுவாகியும், மரமாகியும், பல மிருகங்களாகியும், பறவைகளாகியும், பாம்பாகியும், கற்களாகியும், மனிதர்களாகியும், பேய்களாகியும், பூத கணங்களாகியும், வலிமை மிகுந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுரர் ஆகியும், முனிவர்களாகியும், தேவர்களாகியும், இயங்கு திணை, நிலைத்திணை ஆகிய சரம், அசரம் என்னும் இரு வேறு வகைப் பிறப்பினுள் எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்துப்போனேன்;

குறிப்புரை:— பூடு-பூண்டு; விருகம்-மிருகம்; பேய்-வாயு சரீரம் பெற்ற ஆன்மா; தாவரம்-நிலையியற் பொருள்; சங்கமம்-இயங்கியற் பொருள்.

பொழிப்புரை:— *32 — 35 வரிகள்*

யான் விமோசனமடைய எனது நெஞ்சினுள் ஓம் என்னும் வடிவத்துடன் நின்ற உண்மை வடிவினனே! மலம் அற்றவனே! எருதினை ஊர்தியாய்க் கொண்டவனே! வேதங்கள் ஐயனே என்று அலற, உயர்ந்தும், தாழ்ந்தும் விரிந்தும் நுட்பப் பொருளாய்க் கலந்துள்ளவனே! மெய்மையாக உன் பொன்னடிகளைக் கண்டு இப்போது யான் பாசங்களில் நின்றும் விடுபட்டேன்.

குறிப்புரை:— நுண்ணியனே, மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன் என்று கூட்டுக.

ஓங்காரம்-ஒலிகட்கு முதலாய் எங்கும் நிறைந்திருக்கும் ஓசை. இறைவனது மந்திரவடிவம். விமலன்-பாசங்கள் இல்லாதவன்; ஓங்கி-உயர்ந்து; ஆழ்ந்து-தாழ்ந்து; அகன்று-விரிந்து.

பொழிப்புரை:— *36 — 40 வரிகள்*

வெப்பமுடையவனே! குளிர்ச்சி உடையவனே! வேள்வி முதல்வனாய் விளங்கும் குற்றமற்றோனே! பொய்யாகிய எல்லாம் என்னைவிட்டு நீங்கிப் போகக் குருவாய் வந்து அருள் புரிந்து மெய் அறிவாய் விளங்கும் மெய் ஒளியே! எந்த வகையான அறிவும் இல்லாத எனக்குப் பேரின்பத்தை தந்தருளும் பெருந்தன்மையனே! அறிவின்மையை நீங்கச் செய்யும் தூய அறிவு வடிவினனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்புரை:— சிவபிரானது எட்டு உருவங்களில் சூரியன், சந்திரன், இயமானன் என்னும் மூன்றனையும் வெய்யாய் தணியாய் இயமானனும் விமலா என்பதாற் குறிப்பிட்டார். இயமானன்-வேள்வி முதல்வன்; எஞ்ஞானம்-எந்த வகையான அறிவும்.

பொழிப்புரை:— *41 — 43* வரிகள்

படைக்கப்படுதலும், ஒரு கால அளவாக நிலைபெறுத் தப்படுதலும், ஒடுக்கப்படுதலும் இல்லாதவனே, எல்லா உலகங்களையும் நீயே படைப்பாய், நிலைபெறுத்துவாய், ஒடுக்குவாய், என்னைப் பிறவியிலே செலுத்துவாய், திருத்தொண்டாகிய தவத்தில் புகுவிப்பாய், திருவருளை எனக்குத் தருவாய்.

குறிப்புரை:— புகுவிப்பாய் அருள் தருவாய் என்று கூட்டுக. போக்குவாய்-எல்லாவற்றையும் ஒடுக்குவாய்; புகுவிப்பாய்-பிறவியுள் புகுவிப்பாய். தொழும்பு-அடிமை; திருத்தொண்டு.

பொழிப்புரை:— *44 — 48* வரிகள்

பூவின் மணமென நுட்பமாய் இருப்பவனே! நீ தூரத்தில் இருப்பவனுமாய், சமீபத்தில் இருப்பவனுமாய் சொல்லுக்கும் சிந்தனைக்கும் அப்பாற்பட்ட இரகசியப் பொருளாய் நிற்பவனே! மெய்யடியார் மனத்தின்கண் சிறந்து நின்று பாலொடு சர்க்கரையும் நெய்யும் கலந்து இனிமை பயந்தாற் போல இன்பம் ஊற்றெடுக்குமாறு நிலை பெற்றருளி எடுத்த பிறவியை ஒழிக்கும் எங்கள் பிரானும் உள்ளாய்.

குறிப்புரை:— நாற்றத்தின் நேரியாய் என்றார் - பூவில் அதன் மணம் கண்ணுக்குத் தோன்றாது கலந்திருத்தல் போல இறைவனும் உலகுயிர்களில் தோன்றாது கலந்திருக்கிறான் என்பதனை விளக்கும் பொருட்டாக, நேரியாய்-ஒத்தவனே; நணியாய்-அண்மையில் இருப்பவனே; மாற்றம்-உரை; தேன்-இன்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழிப்புரை:— 49 — 61 வரிகள்

எம்பிரானே பூதங்களைத் திருமேனியாகக் கொண்ட நீ, அவற்றின் நிறங்களாய பொன்மை, வெண்மை, செம்மை, கருமை, புகைமை என்ற ஐந்து நிறங்களையுமுடையவராய்த் தேவர்கள் உன்னை வணங்கிய போதும் நீ அவர்களுக்குத் தோன்ருது மறைந்திருந்தனை. கொடிய வினையை உடைய என்னை முற்ருக மூடியுள்ள மாயையை நல்வினை தீவினை என்னும் அரிய கயிற்றினுல் கட்டி, புழுக்களும், மாசுகளும் புறத்தே உள்ள தோலினுற் போர்த்து மூடப்பெற்றுத் தனது ஒன்பது வாசல்களினுலும் அழுக்கு வடியுங் குடிசையை எனக்குக் கொடுத்தருளி, யான் கலங்கும்படி ஐம்பொறி அறிவுங் கேடு செய்ய அவற்றின் சார்பாய் உனை அணுக ஒட்டாது தடை செய்யும் மனத்தின் இடர்பாட்டினுலுங் குற்றமில்லாதவரே, எம்மிடங் கலந்து உறவாகி உள்ளமுருகி அழுது தொழும் நற்செயல் யாதும் இல்லாத சிறியனேன் பொருட்டு இவ்வுலகிலே குருவடிவங் கொண்டு எழுந்தருளித் திருவடிகளைக் காட்டி, நாயினுங் கீழ்ப்பட்ட நாயேனுக்குத் தாயினும் மேம்பட்ட கருணை வடிவான மெய்யனே.

குறிப்புரை:— மாய இருள்-மாயை; சோர்தல்-வழிதல்; குடிலை-குடிசை, உடல்; விலங்கு மனம்-தடைசெய்யும் மனம்; மலங்க-கலங்க.

பொழிப்புரை:— 62 — 69 வரிகள்

குற்றமற்ற சோதியானது மலரப் பெற்ற பூப்போன்ற ஒளிர் மேனியனே! ஆசிரியனே! இனிமை நிறைந்த அமுதனையானே; சிவலோகத்தில் உள்ளவனே! கட்டுண்டற்கு ஏதுவாய அவாவினை வேரோடு நீக்கி அறிவை விரிவடையச் செய்யும் மேலோனே! காதலொடு கூடிய திருவருளினைச் செய்து என் மனத்தேயுள்ள வஞ்சனையைக் கழுவிக்கொண்டு ஓடியவண்ணம் நிற்கும் கருணைநிதியே! உண்டு தெவிட்டாத அமுதமே! அளவில் அடங்காப் பெருமையை உடையவனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்ந்து அறியார் உள்ளத்தில் இருந்தும் அவர்கட்குப் புல ஞகாத சோதியே! என் மனத்தை நீராக உருகும்படி செய்து என் உயிருக்குயிராய் நின்றவனே!

குறிப்புரை:— தேசன்-ஆசிரியன்; தேன்ஆர்-இனிமை நிறைந்த. பாரித்தல்-பரத்தல், அளவில் அடங்காமை; ஆரியன்-உயர்ந்தோன். நேசம்-காதல். பேராது-பெயராது. ஆரா அமுது-உண்டு தெவிட்டாத அமுது. ஓராதார்-ஆரா யாதவர்.

பொழிப்புரை:— 70—78 வரிகள்

இன்பமும் துன்பமும் இல்லாதவனே! அடியருக்காக அவற்றையும் உடையவனே; அன்பர்களுக்கு அன்பனுக உள்ளவனே! எல்லாப் பொருள்களுமாகி அவை அல்லாத வனுமாய் இருக்கின்ற அறிவுருவனே! நெருங்கிய இருள் போன்றவனே பிறரால் அறியப்படாத பெருமையை உடைய வனே! தொடக்கமும் முடிவும் இடையும் ஆகி, அவை அல்லேயாயும் நிற்பவனே! என்னை வலிய இழுத்து ஆட் கொண்ட அப்பனுகிய பெருந்தன்மையனே! கூரிய மெய்யறி விஞல் கேட்டுத் தெளிபவர் கருத்தில் உள்ள, பிறரால் சுட் டுணர்வால் அறியப்படாத கருத்துப் பொருளே! நுணுகிக் காண்பவர்க்கும் காண்பதற்கு அரிய நுட்பமான உணர்ச்சிப் பொருளாய் உள்ளவனே! போதலும் வருதலும் அடைத லும் இல்லாத மேலானவனே! உயிர்களை எல்லாம் காக்கும் எமது அரசனே! நினது அருட்செயலைக் காண்பதற்கரிய பெரிய அறிவே!

குறிப்புரை:— துன்னிருள்-செறிந்த இருள். ஈர்த்து-இழுத்து, என்றது வலிய ஆட்கொண்டு. நோக்கரியநோக்கு -சுட்டுணர்வால் அறியப்படாதபொருள்! புணர்வு-அடைதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொழிப்புரை:—** 79—83 வரிகள்

இன்ப நதியில் பெருவெள்ளம் போன்றவனே! அப்பனே. உலகத்திற்கு அப்பாற்பட்டு நின்ற விளக்கம் மிக்க கதிரொளிப் பிழம்பாய்ச் சொற்களினுல் விபரித்துச்சொல்லமுடியாத, நுட்ப அனுபவமாய்ப் பரிணுமத்தை அடைகின்ற உலகில் வெவ்வேருகக் காணப்பட்டு வந்து இறுதியில் அறிவாக விளங்கும் தெள்ளியனே! எனது மனத்துள் ஊற்ருகத் ததும்பிய உண்ணத் தெவிட்டா அமுதமே! என்னை அடிமையாக வுடையவனே!

**குறிப்புரை:—** அத்தன்-அப்பன், தலைவனுமாம். சொல்லாத-சொற்களினுல் விபரித்துச் சொல்ல முடியாத. தேற்றன்-தெள்ளியன். ஊற்று-ஊற்றுப்போல் சுரக்கின்ற.

**பொழிப்புரை:—** 84—92 வரிகள்

எமது தலைவரே! வெவ்வேறு திரிபுகளையுடைய ஊனுலாகிய உடலுள் கிடத்தலை யான் பொறுக்கமாட்டேன். பாசத்தை ஒழிப்பவனே! ஓ! என்று துதித்துப் புகழ்ந்து பொய்ப் பொருள்களின் பற்றுக்கெட்டு மெய்ப் பொருள்களோடு ஒன்றுபட்ட பெரியோர் மீண்டும் இவ்வுலகில் வந்து வினைக்கீடாய பிறவி அடையாமல் வஞ்சனை பொருந்தி ஐம்புல வேடரின் சிறுமனையாகிய உடம்பை முற்றிலும் தொலைக்கும் வன்மை உடையவனே! நடு இரவு போன்ற ஊழி இறுதியில் கூத்தினைப் பயின்று படைப்புக் காலத்தே பெருநடம் புரியும் முதல்வனே! தில்லைமன்றினுள் ஆடுபவனே! அழகிய பாண்டி நாட்டை உடையவனே! துன்பம் மிகுந்த இந்தப் பிறவிப் பிணியை நீக்கும் வைத்திய நாதரே! ஓ! என்று சொல்லற்கரியானது புகழைச் சொல்லி.

**குறிப்புரை:—** விடக்கு + உடம்பு—விடக்குடம்பு. விடக்கு-ஊன். விடக்குடம்பு-ஊனுலாகிய உடல். ஓ என்பது இரக்கக் குறிப்பு. குரம்பை - சிறுவீடு: அது உடல்; முழுதும் முடிவுற்ற காலத்தே இறைவன் கூத்தினைப் பழகி (நட்டம் பயின்று) தோற்றக் காலத்தே பெருநட்டம் ஆடுகின்ருன் என்றபடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொழிப்புரை:— 92 — 95 வரிகள்**

அவனுடைய திருவடிகளின் கீழ் இருந்து சொல்லிய இச் சிவபுராணத்தின் பயன் உணர்ந்து சொல்கின்றவர் சிவ லோகத்திற் புகுவார்கள். இறைவன் திருவடிக்கீழ் அன்பர் பலரும் வணங்கிப் புகழுமாறு இருப்பர்.

குறிப்புரை:— திருவடி-இறைவனின் அறிவுச் செயலைக் குறிக்கும்.

—✶—

# 14. திருவிசைப்பா

திருவிசைப்பா என்பது அழகிய (பெருமை) இசை பொருந்திய பாக்களையுடையதெனப் பொருள் தந்து நிற்கும். இது திருவிசைப் பாமாலை என்றும் வழங்கி வந்துள்ளது. திருமாளிகைத்தேவர், சேந்தனர், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பிகாட நம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனர், புருடோத்தம நம்பி, சேதிராயர் என்னும் ஒன்பது பெருமக்களாற் பாடப்பெற்ற திருப்பாடல்களைக் கொண்டது. இதனுடன் சேந்தனர் இயற்றிய திருப்பல்லாண்டையுஞ் சேர்த்து 9ஆந் திருமுறை என்று வழங்கப்பெறும். திருமாளிகைத் தேவர் முதலியோர்களைக் கி. பி. 10ஆம் நூற்றண்டினராகக் கூறுவர்.

அருளியவர்:- சேந்தனர் தலம்:- திருவீழிமிழலை
9-ஆந் திருமுறை பண்-பஞ்சமம்

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
 கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
 மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
 திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டு உள்ளங்
 குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

சுவாமி-வீழியழகர், தேவி-சுந்தரகுசாம்பிகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ-ரை:— கற்று வல்ல பெரியோர்கள் விழுங்குகின்ற கற்பக மரத்தின் கனியை ஒத்தவனை; எல்லையில்லாத கருணையங் கடலை; பிறரால் அறியப்படாத மாணிக்கமலை போல்வானை; தன்னைத் தலைவனென மதித்து வழிபடுவாரின் மனத்துள் இருக்கும் அவியா விளக்குப் போல்வானை; பகைத்த அசுரர்களின் மும்மதில்களைச் சாம்பராக அழித்த எங்கள் சிவபிரானை, திருவீழிமிழலை என்னுந் தலத்தில் கோயில் கொண்டு இருக்கின்ற மன்னவனைப் பார்த்துப் பார்த்து மனம் மகிழ்ச்சியால் குளிர என் கண்களும் குளிர்ந்தன என்றவாறு.

கு-ரை:— கற்றவர்-நல்லறிவு தரக்கூடிய ஞானநூல்களைக் கற்றவர்; விழுங்கி நிற்றல்-இறைவனைத் தம்முட் கண்டு வற்றாத ஆனந்தத்தில் திளைத்து நிற்றல்; கற்பகக் கனி-தேவ உலகத்துக் கற்பக விருட்சம் ஈன்றகனி; மணி விளக்கு-தூண்டா விளக்கு; நந்தா விளக்கு என்பர்; புரங்கள் - மும்மதில்கள் - தாரகாக்கன், கமலாக்கன், வித்தியுன்மாலி என்னும் மூன்று அரக்கர்களின் மதில்கள், கொற்றவன்-வெற்றியால் மேம்பட்டவன்.

—*—

# 15. திருப்பல்லாண்டு

அருளியவர்:— சேந்தனூர் தலம்:— கோயில்
9-ஆந் திருமுறை பண்-பஞ்சமம்

தாதையைத் தாளற வீசிய சண்டிக்கிவ்
வண்டத் தொடுமுடனே
பூதலத் தோரும் வணங்கப் பொற்கோயிலும்
போனகமும் அருளிச்
சோதி மணிமுடித் தாமமும் நாமமுந்
தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசு வைத்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

பதிக வரலாறு:— சேந்தனூர் மிக்க சிவபக்தி உள்ளவர். ஒருமுறை சிதம்பரத் திருவிழாவின் போது, தேர் ஓடாமற் தடைப்பட்டது. எவ்வளவோ பேர் முயன்றும் முடியவில்லை. இதனை அறிந்த சேந்தனூர், இப்பதிகத்தைப் பாடினூர். தேர் முன்போல் ஓடியது. சேந்தனூரின் பெருமையை உலகறியச் செய்யவே இறைவன் இவ்வாறுசெய்தார். திருப்பல்லாண்டுப் பதிகம் ஒன்றேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ-ரை:— தந்தையின் காலை வெட்டி மாபாதகத்தைச் செய்த சண்டேசுரருக்குத் தேவர்களும், மனிதர்களும் வணங்கும்படியாகக் கோயிலையும், வழிபாட்டையும், ஒளி பொருந்திய மணிமுடியில் அணிதற்கான மாலையையும், புகழையும், அடியார்க்குத் தலைமையாய தகைமையையும் அருளிச் செய்த சிவபிரான் பல்லாண்டு வாழ்வாராக என வேண்டுவோமாக.

சுவாமி-சபாநாயகர், தேவி-சிவகாமியம்மை.

வி-ரை:— தாள்-பாதம். சண்டி-சண்டேசுரநாயனார். அண்டம்-தேவ உலகு. போனகம்-திருஅமுது. தாமம்-மாலை. நாமம்-புகழ். நாயகம்-தலைமை. வைத்தான்-கொடுத்தான். பொதுவாகத் தந்தையின் காலை வெட்டுதல் மாபாதகம்; ஆயின் இங்கு இது சிவபுண்ணியமாம். ஆகவே "பாதகத்துக்குப் பரிசுவைத்தான்" என்பது பழிப்பது போலப் புகழ்தல் ஆகும்.

கதை:— திருச்சேய்ஞலூரில் எச்சதத்தன் என்னும் அந்தணருக்கு மகனாகச் சண்டேசுரர் அவதரித்தார். விசாரசருமர் என்பது இவரது பிள்ளைத் திருநாமமாகும். இளமையிலேயே மிக்க சிவபத்தி உள்ளவர். பசுக்களை மேய்க்குந் தொழிலை மேற்கொண்டார். பசுக்களை மிக அன்பாகப் பாதுகாத்தார். அவைகள் அதிக பாலை உடையனவாயின; அதனாற் பாலைத் தாமே சுரந்தன.

விசாரசருமர் நாடோறும் பசுக்களை ஊருக்கு அணித்தாகவுள்ள மண்ணியாற்றங் கரையிலே மேயவிட்டு அங்கு மணலினாலே சிவலிங்கம் அமைத்து, பசுக்கள் சொரிந்த பாலினால் அபிடேகம் செய்து வழிபட்டு வந்தார் பாலை வீணாக்குகின்றார் என்று பிறர் இவரது தந்தைக்கு முறையிட்டனர். இதனை அறிதற்காக அவர் அங்கு சென்றார். இவர் சிவபூசை செய்துகொண்டிருந்தார். பாலினால் அபிடேகம் செய்திருத்தலைக்கண்டு கோபங்கொண்ட தந்தையார் தம்து காலினாற் பாற்குடத்தை இடறினார். சண்டேசுரர் மிகவெறுப்புற்றார். பின் மழுவினால் வீசித் தந்தையின் காலைத் துணித்தார். பின் சிவபூசையைத் தொடர்ந்துசெய்தார். சிவபூசையையுஞ் சிவலிங்கத்தையுஞ் சிறிதும் மதியாது பாற்குடத்தைச் சிதைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊறு செய்தபோது, சிவபக்தி மேலீட்டினால் தந்தை என்பதையும் எண்ணுமல், அவரது காலை வெட்டியது செயற்கருஞ் செயலாகும். உடனே சிவபிரான் எல்லா அடியார்க்குந் தலையாய தன்மையையும், யாவரும் அவரை வழிபடுதற்குரிய உணர்வையும் அருளிச் செய்தார். அன்று முதல் இவருக்குச் 'சண்டேசுரர்' என்னும் பெயர் வழங்குகின்றது. இவர் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். சண்டேசுர நாயனுருக்குத் திருக்கோயில்களில் கோவிலும் வழிபாடும் வகுக்கப்பட்டுள்ளன. இறைவன் தமது கொன்றை மாலையை இவருக்குச் சூட்டினுர்.

—✱—

# 16. திருப்புராணம்

கந்தபுராணம்

கடவுள் வாழ்த்து

## வைரவக்கடவுள்

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவர்
குருதியு 'மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

**பாடலின் வரலாறு:—** இப்பாடல் கந்தபுராணத்திலுள்ள கடவுள், வாழ்த்துப் பாடல்களுள் ஒன்ருக உள்ளது. இது வைரவக் கடவுளுக்கு உரிய பாடலாகும் இவர் சிவபெருமானின் திருக்குமாரர்களுள் ஒருவர். கந்தபுராணம் கந்தக் கடவுளது மகிமைகளை விரிவாகக் கூறும் நூல்; சிறந்த புராணங்களுள் ஒன்று. கந்தக் கடவுள் தேவர்களைத் துன்புறுத்திய சூரன் முதலியோரை இல்லாமற் செய்த வரலாற்றை இந்நூல் கூறுகிறது. இந்நூலைத் தமிழிற் பாடியவர் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகள். 'புராணம்' என்பது கடவுளின் மிகப் பழமையான வரலாற்றைக் கூறும் நூலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ-ரை:— சிவபெருமானை முழுமுதற் கடவுளாக உணர்ந்திடாத பிரமாவினது உச்சித் தலையைக் கிள்ளி எடுத்துச் சென்ற கடவுளும், ஏனைய தேவர்களது இரத்தத்தையுஞ் செருக்கையும் பலிப்பொருள்களாகக் கொண்டு அவர்களைத் தண்டித்தவரும் ஆகிய வைரவக் கடவுளைப் போற்றி வணங்குவோமாக.

வி-ரை:— பரமன்-சிவபிரான். பங்கய ஆசனன்-பிரமா. வடுகன்-வைரவக் கடவுள். வைரவக்கடவுள் சிவபிரானே யாவர். இவரது ஊர்தி நாய் ஆகும்.

கதை:— பிரமா படைத்தற் கடவுள், சிவபிரானைப் போல இவருக்கும் ஐந்து தலைகள் இருந்தன. இவற்றால் ஒரு முறை பிரமாவுக்கு அளவுகடந்த செருக்கு உண்டாயிற்று. இதனாலே சிவபிரானை முழுமுதற் கடவுளாக மதியாதவரானார். பிரமாவினால் ஏனைய தேவர்களுஞ் சிவபிரானை மதியாதவர்களாக ஆயினர். சிவபிரானிடமிருந்து வைரவக்கடவுள் தோன்றினார். வைரவக் கடவுள் பிரமாவுந் தேவர்களும் இருக்கும் இடத்திற்குச் சென்றார். பிரமாவின் உச்சித் தலை சிவபிரானை நிந்தித்தது. வைரவக்கடவுள் அந்தத் தலையைக் கிள்ளி எடுத்தார். ஏனைய தேவர்களைத் தண்டித்து அவர்களது குருதியைப் பலியாகப் பெற்றார். இதனாற் பிரமாவுந் தேவர்களும் அகந்தை நீங்கிச் சிவபிரானே உலகிற்கு முழுமுதற் கடவுள் என உணர்ந்து துதித்தனர்.

—★—

**கந்தபுராணம்** கடவுள் வாழ்த்து

## வீரபத்திரக்கடவுள்

2. அடைந்தவி யுண்டிடும் அமரர் யாவரும்
முடிந்திட வெருவியே முனிவர் வேதியர்
உடைந்திட மாமக மொடியத் தக்கனைத்
தடிந்திடு சேவகன் சரணம் போற்றுவாம்.

பாடலின் வரலாறு:— இது கந்தபுராணத்தில் வீரபத்திரக் கடவுளுக்கு உரிய கடவுள் வாழ்த்துப் பாடலாக உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரபத்திரக் கடவுள் சிவபிரானது திருக்குமாரருள் ஒருவர். சிவபிரானை மதியாத தக்கனைத் தண்டித்தற்காகச் சிவபிரானிடமிருந்து தோன்றியவரே வீரபத்திரர் ஆவர்.

பொ-ரை:— தக்கனது யாகத்திற்குச் சென்று, அங்கு கொடுத்த அவிப்பாகத்தை ஏற்று உண்ட தேவர்கள் யாவரும் இறக்கும்படியாகவும், அங்கு சென்ற முனிவர்களும் அந்தணர்களும் பயந்து ஓடும்படியாகவும், அந்தப் பெரிய யாகம் நடைபெறுதபடி செய்து, அவ் வேள்வியைச் செய்வித்த தக்கனைத் தண்டித்த வீரபத்திரக்கடவுளது திருப்பாதங்களை வணங்குவோமாக.

வி-ரை:— அவி-யாகத்தில் தேவர்களுக்குக் கொடுக்கும் உணவு. அமரர்-தேவர்கள். வெருவி-பயந்து. மா மகம்-பெரிய யாகம். தடிந்திடு-தண்டித்த. சேவகன்-வீரபத்திரக் கடவுள்.

கதை:— முற்காலத்திலே தக்கன் என்னும் ஒருவன் இருந்தான். நல்ல தவங்களைச் செய்து மேலான வரங்களைப் பெற்றுன். இதனுல் ஒருமுறை உமாதேவியாரைத் தனது மகளாகப் பெற்று வளர்த்துச் சிவபிரானுக்குத் திருமணஞ் செய்து கொடுத்தான். இதனுலே சிவபிரானை மதியாது, அதிக அகந்தை கொண்டு. அவருக்கு மாறுக ஒரு பெரிய யாகத்தைச் செய்தான். இவனுக்குப் பயந்து, தேவர்களும் முனிவர்களும் இந்த யாகத்திற்குச் சென்று பங்கு பற்றினர். இந்த யாகத்தைப் பார்க்கச் சென்ற உமாதேவியாரைத் தக்கன் அவமதித்தான். உடனே சிவபிரானிடமிருந்து வீரபத்திரர் தோன்றினர். யாகம் நடக்கும் இடத்திற்குச் சென்றுர். அவரது வருகையைக் கண்ட தேவர்களும் முனிவர்களும் பயந்து ஓடினர். யாகம் நடைபெறுதபடி தடுத்து, யாகத்தைச் செய்வித்த தக்கனது தலையைவெட்டி யாககுண்டத்தில் இட்டு, அங்கிருந்த தேவர்களையுந் தண்டித்தார். பின் தக்கனையுந் தேவர்களையும் உயிர்பெற்றெழச் செய்தார். அதன்பின் சிவபிரானே உலகிற்கு முழுமுதற் கடவுள் எனத் தேவர்கள் உணர்ந்து, அவரைத் துதித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சேக்கிழார் புராணம்** **கடவுள் வாழ்த்து**

## சிவகாமியம்மையார்

3. பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய இருள் நீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றின் ஒளிவிளங்க
அரந்தைகெடப் புகலியர்கோன் அமுதுசெயத் திருமுலைப்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி. [பால்

**பாடலின் வரலாறு:—** இது சேக்கிழார் புராணம் என்னும் நூலில் உள்ள கடவுள் வாழ்த்துப் பாடலாகும். இது உலக மாதாவாகிய சிவகாமியம்மையாருக்கு உரியது. சேக்கிழார் புராணம் என்பது, சேக்கிழார் சுவாமிகளது வரலாற்றைக் கூறும் நூல் ஆகும். சேக்கிழார் சுவாமிகள் சோழப்பேரரசில் முதல் அமைச்சராக இருந்தவர்; தூயதுறவுஞ் சிவபத்தியும்மிக்கவராகவிளங்கியவர்; அறுபத்துமூன்றுநாயன்மார் வரலாறுகளைத் திருத்தொண்டர் புராணம் என்னும் பெயருடன் பெரும் நூலாக அருளியவர். இதன் மூலம் உண்மை நாயன்மார் மகிமைகளை உலகறியச் செய்தார். சேக்கிழார் சுவாமிகளுக்கு, அவர் அவதரித்த தொண்டை நாட்டிலே திருக்கோயில் இருக்கிறது. சேக்கிழார் புராணத்தை அருளியவர், சந்தான குரவர்களுள் ஒருவராகிய உமாபதி சிவாசாரியார் ஆவர்.

**பொ-ரை:—** எங்கும் ஒரு காலத்திலே பரந்து இருந்த சமணம் முதலிய புறச்சமயங்களின் இருள் இல்லாமற் போகவும், மேலான சைவசமயத்தினது திருநீற்றின் மகிமை விளங்கும்படியாகவும், ஆன்மாக்களது அறியாமை அற்றுப் போகவும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பருகுவதற்குத் தமது திருமுலைப்பாலைக் கொடுத்தருளிய உலக மாதாவாகிய சிவகாமி அம்மையாரின் பொலிவாகிய அழகிய திருப்பாதங்களைத் துதிப்போமாக.

**கு-ரை:—** பரசமயம்-புறச்சமயம். சிரம்-தலை. அரந்தை-அறியாமை. புகலியர்கோன்-திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார். அமுது-உணவு. கழல்-திருப்பாதம்.

**கதை:—** திருஞானசம்பந்தமூர்த்திநாயனாருக்கு மூன்றாம் வயதிலே உமாதேவியார் தமது திருமுலைப்பாலைக் கொடுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார். இதனாலே நாயனார் தேவாரப் பதிகங்களைப் பாடிப் பல அற்புதங்களையும் நிகழ்த்தினார். சமணர்களை வாதிலே வென்றார். திருநீற்றை அணிந்து பாண்டியனது நோயை நீக்கினார். சமண சமயம் பரவாதபடி செய்து திருநீற்றின் மகிமையையும், சைவசமயத்தினது உண்மையையும் உலகம் அறியும்படி செய்தார். இவைகளைத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரது வரலாற்றில் விரிவாக அறியலாம்.

—✱—

# 17. திருப்புகழ்

திருப்புகழ் செம்புலச் செல்வராகிய அருணகிரிநாத சுவாமிகளால் முருகப்பெருமானது புகழைப் பல வகையாலும் புகழ்ந்து பாடப்பெற்ற தமிழ் நூலாகும். இது பதினாறாயிரம் பாடல்களைக் கொண்டதெனப் பெரியோர் கூறுவர். பல பாடல்கள் குமரக் கடவுள் கோயில் கொண்டிருக்குந் தலங்கள் மீது பாடப்பட்டவை ஆகும்; சில பொதுவானவையுமாகும். சுவாமிகள் கந்தரலங்காரம் கந்தரனுபூதி, வேல்விருத்தம், மயில்விருத்தம்முதலியவையும் பாடியுள்ளார். முருகப்பெருமானுடையதிருப்படைவீடுகள் ஆறுஆகும். அவை திருச்செந்தூர், (பழநி எனப்படும்) திருவாவிநன்குடி, திருஏரகம், திருப்பரங்குன்றம், பழமுதிர்ச்சோலை, குன்றுதோருடல் என்பனவாம், "திருவேரகம்" சுவாமிமலை என்றும் வழங்கும். இத்திருப்புகழ் திருவேரகத்தில் வீற்றிருக்கும் முருகப்பெருமான் மேலதாகும்.

### சுவாமிமலை (திருஏரகம்)

1. சரணகம லாலயத்தை அரைநிமிட நேரமட்டில்
 தவமுறைதி யானம் வைக்க அறியாத
சடகசட மூடமட்டி பவவினையி லேசனித்த
 தமியன்மிடி யால்ம யக்கம் உறுவேனோ
கருணைபுரி யாதி ருப்ப தெனகுறையிவ் வேளைசெப்பு
 கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே
கடகபுய மீதிரத்ன மணிஅணிபொன் மாலைசெச்சை
 கமழுமண மார்க டப்பம் அணிவோனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்சவுக்ய
சகலசெல்வ யோக மிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணு நெய்த்த வடிவேலா
அருணதள பாதபத்ம மதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தான் அளித்த மயில்வீரா
அதிசயம நேகமுற்ற பழநிமலை மீதுதித்த
அழகதிரு ஏர கத்தின் முருகோனே.

பொ-ரை:— கயிலை மலைக்கு தலைவராகிய சிவபெருமான் ஈன்றருளிய குமரக்கடவுளே! தோள்வளை அணிந்த திருப் புயத்தின்மீது இரத்தினமணிகள் பதித்த அணிகலத்தினையும், பொன்மாலையினையும், வெட்சிமாலையினையும், மணங்கமழுங் கடம்பமாலையினையும் அணிந்து இருப்பவனே! நெய் பூசப் பெற்ற கூரியவேலை ஏந்தியவனே! செந்நிற இதழ்களை உடைய தாமரை போன்ற திருப்பாதங்களைத் தினமுந் துதிசெய்து பாட அருமையான தமிழ் மொழியை எனக்குத் தந்த மயிலை வாகனமாகக் கொண்ட வீரனே! அநேக அதிசயங்கள் பொருந்திய பழநிமலைமீது தோன்றிய அழகனே! திருவேரகம் எனுஞ் சுவாமிமலையில் எழுந்தருளிய முருகப் பெருமானே! தாமரை ஆகிய நின் திருப்பாதக் கோர்யிலை அரைநொடிப்போ தளவாகினுந் தவ வழியில் நின்று தியானிக்கத் தெரியாத தூல சரீரத்தையுடைய குற்றமுடைய அஞ்ஞானம் மிகுந்த, மடமை நிரம்பிய பிறவிக்கு ஏதுவாகிய தீவினையால் பிறந்த தனிப்பட்டவனாகிய யான் வறுமையால் மயக்கம் உறுவது தகுமோ? என்னிடம் இரக்கங் காட்டாது இருப்பதற்கு யான் செய்த குறை என்ன? இவ்வேளையில் சொல்லு ஐயனே! அருள்புரிய இதுதான் தருணம். மிக்க பெருமை பொருந்திய நீண்ட சுகத்தைத் தருவதான எல்லாவிதமான செல்வங்களும் கிடைக்கக்கூடிய யோகம் பொருந்திய பெரிய வாழ்வினையுந் தகுதியுடைய சிவஞானங் காரணமாக உண்டாகும் மேலான முத்தியாகிய வீடுபேற்றையும் நீ எனக்குத் தந்து உதவி புரிதல் வேண்டும் என்றவாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரோனே! அணிவோனே! வடிவேலா! வீரா! அழகா! முருகோனே! ஆலயத்தை தியானம் வைக்க அறியாத தமியன் மயக்கம் உறுவேனோ! கருணை புரியாது இருப்பது குறை என? செப்புஐய, இது தருணம் பெருவாழ்வு(ம்) பரகதி(யும்) கொடுத்து உதவிபுரிய வேணும் என்று கூட்டுக.

கு-ரை:— கடகம் - தோள்வளை. அணி - அணிகலம். செச்சை-வெட்சிமாலை. கடம்பு - மலர் விசேடம், முருகப் பெருமானுக்கு விருப்பமான மலர். அருணம்-கருமை கலந்த சிவப்பு. பத்மம் - தாமரை. நிதமும் - ஒவ்வொரு நாளும். அழக-அழகனே! சரணம்-பாதம். சடம்-தூல சரீரம். கசடு-குற்றம். மூடம்-அஞ்ஞானம். மட்டி-அறிவற்றவன். பவம்-பிறப்பு. சனித்த-பிறந்த. மிடி-வறுமை. தமியன்-தனித்தவன். என-என்ன? இடைக்குறை. தருணம்-சமயம். கனம்-பெருமை. சவுக்கியம்-சுகம்.

திருஏரகத்தில் முருகக்கடவுள் தந்தையாகிய பரமசிவனுக்குப் பிரணவப் பொருளை உபதேசித்தார் என்பர்.

2. இருந்த வீடும் கொஞ்சிய சிறுவரும் உறுகேளும்
இசைந்த ஊரும் பெண்டிரும் இளமையும் வளமேவும்
விரிந்த நாடுங் குன்றமும் நிலையென மகிழாதே
விளங்கு தீபங் கொண்டுனை வழிபட அருள்வாயே
குருந்தி லேறுங் கொண்டலின் வடிவினர் மருகோனே
குரங்கு லாவுங் குன்றுறை குறமகள் மணவாளா
திருந்தவேதந் தண்டமிழ் தெரிதரு புலவோனே
சிவந்த காலுந் தண்டையும் அழகிய பெருமானே;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ-ரை:— குருந்த மரத்திலேறிய மேக நிறத்தினரான திருமாலின் மருகரே, குரங்குகள் உலாவுகின்ற மலையின் மீது வாழும் குறவர் மகளாகிய வள்ளியின் நாயகனே, திருத்தமாக வேதத்தினையுந் தமிழையும் ஆராய்கின்ற புலவனே, சிவந்த காலையும், அதிலணிந்த தண்டையையும் உடைய அழகிய வடிவினரான கடவுளே, வசிக்கும் வீடும் மகிழ்ச்சி தரும் பிள்ளைகளும், உறவினர்களும், பொருத்தமான ஊரும், மனைவியும், இளமைத்தன்மையும், வளமுள்ள பெரிய நாடும், மலைகளும், நிலையானவை என மகிழ்ச்சியடையாது, ஒளிபொருந்திய தீபத்தைக் கொண்டு உன்னை வழிபடுவதற்கு அருளைத் தருவாயாக.

வி-ரை:— கேள்-சுற்றம். தீபம்-விளக்கு. கொண்டல் வடிவினர்-திருமால். குறமகள்-வள்ளி. தண்டை-ஆண்கள் காலில் அணியும் ஒருவகை அணி. குமரக்கடவுள் தலைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து தமிழை ஆராய்ந்தவர்; அகத்திய முனிவருக்குத் தமிழை அறிவுறுத்தியவர். உமாதேவியார் திருமாலுக்குச் சகோதரியாகக் கூறப்படுதலின், இவர் அவருக்கு மருகராயினர். குமரக்கடவுள் குறவர் குலப் பெண்ணாகிய வள்ளிநாயகியாரைத் திருமணஞ் செய்தமை கந்த புராணத்தில் விரிவாகக் கூறப்படுகிறது.

## 18. கந்தர் அலங்காரம்

முருகக் கடவுளின் புகழ் கூறும் நூல்களுள் கந்தர் அலங்காரமும் ஒன்று. இது சிவஞானச் செல்வராகிய அருணகிரி நாத சுவாமிகளால் அருளிச் செய்யப் பெற்றது. சுமார் 500 ஆண்டுகட்கு முற்பட்டது இந்நூல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
 பாதங்கள் மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணை முருகாவெனு
 நாமங்கள் முன்பு செய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு
 தோளும் பயந்த தனி
வழிக்குத் துணை வடிவேலுஞ்
 செங்கோடன் மயூரமுமே.

பொ-ரை:— எனது கண்களுக்குத் துணையாவன திருச்செங்கோட்டில் எழுந்தருளி இருக்கும் முருகக்கடவுளுடைய மென்மையான தாமரை மலர் போன்ற திருவடிகளே! உண்மை தவறாத எனது வாக்கிற்குத் துணையாவது, முருகா என்று விழிக்கப்படும் அவர் நாமமே! யான் முன்பு செய்த பாவத்தை நீக்குதற்குத் துணையாவன அவருடைய பன்னிரு திருக்கைகளுமே! யான் அஞ்சுதற்குரிய தனி வழிக்குத் துணையாவன அவரது ஒளிபொருந்திய வேற்படையும் மயிலுமே!

கு-ரை:— விழி-கண். நாமம்-பெயர். கள்-அசை. பழி-பாவம், ஈண்டுச் சஞ்சித வினை. மயூரம்-மயில். இறப்புக் காலத்தில் மக்களுக்குத் துணையாய் இருப்பது முருகப்பெருமானின் வேலும் மயிலுமாகும்.

2. சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
 வெற்பனைச் செஞ்சுடர் வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்
 தோனை விளங்கு வள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக்
 கார் மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவாத
 வர்க்கொரு தாழ் வில்லையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ-ரை:— சிவந்த திருமேனியை உடையவரும், ஆறு திருவுருவங்களும் ஒன்ருகச் சேர்க்கப்பட்டவரும், திருச்செங்கோட்டு மலையில் எழுந்தருளி இருப்பவரும், சிவந்த ஒளிபொருந்திய வேற்படையை உடைய இறைவரும், செந்தமிழ் நூலை அகத்திய முனிவருக்கு விரித்துரைத் தருளியவரும், அழகு விளங்கும் வள்ளிநாயகியாருக்குத் தலைவரும், வாசனை பொருந்திய கடப்ப மாலையை அணிந்தவரும், பச்சை நிறம் பொருந்திய மயில்வாகனத்தை உடையவரும் ஆகிய முருகக் கடவுளை இறக்கும் நாளளவும் மறவாதார்க்கு ஒரு குறையுமில்லை.

கு-ரை:— கந்தன் - பிணிக்கப்பட்டோன், சேர்க்கப்பட்டோன், பெருந்தோளன் எனினுமாம்; காந்தன்-கணவன்; கந்தம்-வாசனை; கார்-பச்சை, கறுப்பு; துணை-அளவு, எல்லை; போதும் காலம். கடப்பமலர் முருகப்பெருமானுக்கு விருப்பமான மலராகும்.

—✱—

# 19. நீதிப்பகுதி — திருக்குறள்

திருக்குறள் தெய்வப்புலமைத் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது. தமிழ்மறை என்று போற்றப்படுவது; மக்கள் வாழ்வாங்கு வாழ வழி கூறுவது; உலகப் பொது நூலாக விளங்குவது; தண்டமிழ் மொழியிலுள்ள நூல்களுள் பழமை வாய்ந்தது; தமிழ்ப் பண்பாட்டின் உரைகல்லாய்த் திகழ்வது; 1330 குறட்பாக்களால் அமைந்தது. அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பெரும் பிரிவுகளை உடையது; திருவள்ளுவரின் காலத்தைப் பலரும் பலவாறு கூறுவர். பெரும்பாலானோர் கி. பி. 2-ஆம் நூற்ருண்டென்பர். சான்ருேர் திருக்குறளைப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்ருகத் தொகுத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரம் 1 கடவுள் வாழ்த்து

கடவுளை வாழ்த்துதல். நூல் செய்வோர் வாழ்த்து வணக்கம் வருபொருள் உரைத்தல் மரபு. வள்ளுவப் பெருந்தகை கடவுள் வாழ்த்துக் கூறுகின்றார்.

அகர முதல எழுத்துஎல்லாம் ஆதி 1
பகவன் முதற்றே உலகு.

பொ-ரை:— எல்லா எழுத்துக்களும் அகரத்தைத் தமக்கு முதலாக உடையன. அதுபோல் உலகமானது, எல்லாவற்றிற்கும் முற்பட்ட கடவுளைத் தனக்கு முதலாக உடையது.

முதல்-தலைமை; ஆதிபகவன் இருபெயரொட்டுப் பண்புத் தொகை. உலகு இடவாகுபெயராய்உயிரை உணர்த்திற்று.

கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். 2

பொ-ரை:— தூய அறிவினை உடைய கடவுளுடைய திருவடிகளை வணங்காதவர்கள் ஆயின், அவர்கள் கற்ற கல்வியினால் உண்டாய பயன் யாது? ஒன்றுமில்லை.

வால்-தூய்மை; எவன் என்பது என் என்று குறுகி நின்றது. நற்றாள்-திருவடி, இறைவன் திருவடியே பிறவிப் பிணிக்கு மருந்து ஆதலின் நற்றாள் என்று கூறினார். கொல்-அசை நிலை.

மலர்மிசை ஏகினான் மாண்அடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார் 3

பொ-ரை:— அன்பரது நெஞ்சமாகிய தாமரை மலரில் சென்ற இறைவனது மாட்சிமை பொருந்திய திருவடிகளை இடைவிடாது சிந்தித்தவர், நிலவுலகில் நெடுங்காலம் வாழ்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்தல்-இடையறாது நினைத்தல், நிலமிசை என்பதனை மிசைநிலம் எனக்கொண்டு மேலாகிய வீட்டுலகின் என்றும் பொருள் கொள்வர்.

**வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு**
**யாண்டும் இடும்பை இல. 4**

பொ-ரை:— ஒரு பொருளை விரும்புதலும், வெறுத்தலும் இல்லாத இறைவனது பாதங்களை இடைவிடாது சிந்திப்பவர்க்கு எக்காலத்தும் துன்பங்கள் இல்லை.

வேண்டுதல்-விரும்புதல்; வேண்டாமை - விரும்பாமை; இடும்பை-துன்பம்; இது தன்னைப் பற்றியும்; பிற உயிர்களைப் பற்றியுந் தெய்வத்தைப் பற்றியும் வருவன என மூவகைப்படும்.

**இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்**
**பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. 5**

பொ-ரை:— கடவுளின் உண்மையுள்ள புகழை விரும்பினவரிடத்து அறியாமை சேர்ந்த நல்வினை தீவினை இரண்டும் வந்து பொருந்தமாட்டா.

இருள்-அறியாமை, மயக்கமாம்; பொருள் உண்மை. இறைவன்-தலைவன்; புரிதல்-விரும்புதல்.

**பொறிவாயில் ஐந்து அவித்தான் பொய்தீர்ஒழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ் வார். 6**

பொ-ரை:— மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் பொறிகளை வழிகளாக உடைய ஐந்து ஆசைகளையும் அநாதியே அவித்த இறைவனது பொய்மை இல்லாத ஒழுக்கமாகிய வழியில் நிலைபெற்று நின்றவர்கள் நீடூழிகாலம் வீட்டுலகில் வாழ்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயில்-வழி; ஐந்து-ஐந்து அவா; தீர்-தீர்ந்த, இல்லாத; நெறி-வழி.

**தனக்குஉவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.** 7

**பொ-ரை:—** தனக்கு ஒப்பானது எதுவும் இல்லாத கடவுளின் திருவடிகளை அடைந்தவர்களுக்கு அல்லாமல், மற்றவர்களுக்கு மனத்தில் உண்டாகுங் கவலைகளைப் போக்குதல் முடியாது.

உவமை-ஒப்பு; தாள்-பாதம்; அரிது-அருமை, இன்மை குறித்து நின்றது.

**அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.** 8

**பொ-ரை:—** அறக்கடலாகிய இரக்கத்தை உடைய கடவுளது திருவடிகளாகிய தெப்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு அன்றி பிறருக்கு வேருகிய பொருள் இன்பக் கடல்களைக் கடத்தல் முடியாது.

ஆழி - ஆழமுடையது; கடல். அந்தணன் - அழகிய தண்ணளி உடையவன். பிற-அறத்தின் வேருகிய பொருள் இன்பங்கள்.

**கோள்இல் பொறியில் குணம்இலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.** 9

**பொ-ரை:—** தத்தமக்கேற்ற புலன்களைக் கொள்ளுதல் இல்லாத ஐம்பொறிகளைப் போல, எட்டுக் குணங்களையுடைய இறைவனது திருப்பாதங்களை வணங்காத தலைகள் தமக்கேற்ற தன்மை இல்லாதனவேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோள்-கொள்ளுதல்; தலையைக் கூறினாரேனும் பிற உறுப்புக்களும் பயன் இல என்பது கருத்து. ஐம்பொறிகள்-மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன. ஐம்புலன்கள்-சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். எண் குணம்-தன் வயத்தனாதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றுணர்வுடைமை, இயல்பாகவே பாசங்களில் நீங்குதல், பேராற்றல் உடைமை, தூய உடம்பினன் ஆதல், வரம்பில் இன்பம் உடைமை, பேரருள் உடைமை என்பனவாம்.

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்.** 10

பொ-ரை:— கடவுளின் திருவடிகளைச் சேர்ந்தார் பிறவியாகிய பெருங்கடலைக் கடப்பர். இறைவன் திருவடிகளைச் சேரார் பிறவிப் பெருங்கடலைக் கடக்கமாட்டார்.

சேர்ந்தார் சொல்லெச்சமாக நின்றது. இறைவன் எங்கும் நிறைந்து தங்குபவன்.

## அதி: 22 ஒப்புரவறிதல் குறள்: 3

**புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறலரிதே**
**ஒப்புரவின் அல்ல பிற.**

**ஒப்புரவு அறிதலாவது:—** உலக முறைமையை அறிந்து உலகத்திற்கு உபகாரமுள்ளவனாக ஒழுகுதல்.

பொ-ரை:— தேவ உலகத்திலும், இவ்வுலகத்திலும், ஒப்புரவு அறிதல் அல்லாத பிறிதொன்றைக் காணல் அரியது ஆகும்.

வி-ரை:— புத்தேள்-தேவர். ஈண்டு-இவ்வுலகு. இஃது அல்லாத வேறொன்றைக் காணல் அரிது எனக் கூறுதலின், ஒப்புரவு அறிதல் ஒருவர்க்குச் சிறந்த அறம் ஆகும் என்பதாகும்.

## அதி: 23 ஈகை குறள்: 2

**நல்லா றெனினுங் கொளல்தீது மேலுலகம்**
**இல்லெனினும் ஈதலே நன்று.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈகையாவது:— பொருள் முதலிய வளம் படைத்தோர் அவை இல்லாதார்க்குக் கொடுத்தலாம்.

பொ-ரை:— நல்ல வாழ்வுக்கு வழி பாக உதவுமாயினும், பிறரிடம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுதல் நற்பண்புக்கு மாறுனது ஆகும். பிறருக்கு ஈதலினுலே மறுமையிலே மேலுலக வாழ்வு கிடையாது எனக் கூறப்பட்டாலும், அக் கொடுத்தலைச் செய்தல் நன்று ஆகும்.

வி-ரை:— ஆறு-வழி. மேலுலகம்-மேலுலக வாழ்வு. இல் எனினும்-இல்லை எனக் கூறப்படினும். ஈகை சிறந்த ஓர் அறம் என்பதாம்.

## அதி: 24 புகழ் குறள்: 1

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
ஊதியம் இல்லை உயிர்க்கு.

புகழாவது:— அறநெறிகளைப் போற்றியதனுல், ஒருவரைத் தாமாக வந்தடைந்து இவ்வுலகில் நிலைத்து நிற்பதாகிய சிறப்பு.

பொ-ரை:— பொருளைப் பிறருக்குக் கொடுத்து, அதனுற் புகழ் வந்தடையும்படியாக வாழும் அறநெறியேயன்றி, உயிர்களுக்குப் பயன்தரும் வழிகள் வேறு இல்லை.

வி-ரை: ஈதல்-கொடுத்தல். இசை-புகழ். பட-உண்டாகும்படி. ஊதியம்-பயன். அது என்பது புகழ் பெற வாழ்தலைக் குறிக்கும், புகழ் உண்டாவதற்கு வேறுவழிகள் உளவேனும், அவை யாவினும் ஈகையே சிறந்தது ஆதலின், அதனையே புகழ் பெறுதலுக்கு வழியாகக் கூறினுர் வள்ளுவனுர்.

## அதி: 25 அருளுடைமை குறள்: 3

அருள்சேர்ந்த நெஞ்சினுர்க்கு இல்லை இருள் சேர்ந்த
இன்னு உலகம் புகல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளுடைமையாவது:— தொடர்பு கருதாது எல்லா உயிர்களிடத்துஞ் செல்வதாகிய கருணையுள்ளம்.

பொ-ரை:— இருள் நிறைந்த துன்ப உலகத்துட் செல்லுதல், அருள் பொருந்திய உள்ளத்தையுடையவர்களுக்கு இல்லை.

வி-ரை— நெஞ்சினர்-உள்ளத்தினர். இன்னு - துன்பந் தருகின்ற. புகல்-அடைதல். ஆகவே அருளுடைமையைச் சிறந்த அறமாகப் போற்றுக என்பதாம்.

## அதி: 26 புலான் மறுத்தல் குறள்: 10

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்.

புலான் மறுத்தலாவது:— பிற உயிர்களது உடலை உண்ணும் முறையை நீக்குதல்.

பொ-ரை:— பிற உயிர்களைக் கொன்று அவைகளின் உடலை உண்ணும் முறையை நீக்கிய அறநெறியாளரை, உலகத்து உயிர்கள் யாவும் உள்ளம் உவந்து வணங்கும்.

வி-ரை:— புலால்-உயிர்களின் உடற்தசை. அத்தகைய அறநெறியாளனை மக்களேயன்றி வேறு உயிர்களுந் தொழும். எனவே புலால் மறுத்தல் அறநெறியாளனுக்குச் சிறந்த ஓர் அறமாகும்.

## அதி: 27 தவம் குறள்: 1

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு.

தவமாவது:— மனத்தைப் பொறிவழி போகாது தடுத்து நிறுத்துதலும், தம் உயிர்க்கு வருந் துன்பங்களைப் பொறுத்தலும், பிற உயிர்க்குத் துன்பஞ் செய்யாதிருத்தலும் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ-ரை:— தம் உயிர்க்கு வந்த துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுதலும், பிற உயிர்களுக்குத் துன்பஞ் செய்யாதிருத்தலும் ஆகிய இவையே தவத்திற்கு உரிய தன்மைகளாகும்.

வி-ரை:— நோய் - துன்பம். நோற்றல் - பொறுத்துக் கொள்ளல். உறுகண்-துன்பம். அற்று-அத்தன்மையானது. உரு-வடிவம். தவமாவது இன்னது என்பதை இச்செய்யுளினால் உணர்த்தினர்.

## அதி: 28 கூடாவொழுக்கம் குறள்: 10

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின்.

கூடாவொழுக்கமாவது:— தவத்திற்குப் பொருந்தாத தீய ஒழுக்கம். புறத்தே தூய தவமுடையவராகவும், உள்ளத்திற் பொய் ஒழுக்கமுடையவராகவும் ஒழுகுதல்.

பொ-ரை:— செய்யத் தகாதது எனப் பெரியோர்களால் விலக்கப்பட்ட பொய் ஒழுக்கத்தை, அறநெறியாளன் ஒருவன் முற்றாக விட்டுவிடுவானாயின், அவன் தன் துறவுக்காகத் தலையை மொட்டையடித்தலுஞ் சடையை வளர்த்தலும் ஆகிய புறவேடங்களை மேற்கொள்ள வேண்டியதின்று.

வி-ரை:— மழித்தல்-தலையை மொட்டையடித்தல். நீட்டல்-சடை வளர்த்தல். உலகம்-பெரியோர். அகத் தூய்மை இல்லாவிடத்துப் புறவேடங்களாற் பயனில்லை. தவத்திற்கு அகத் தூய்மையே முக்கியமானது.

## அதி: 29 கள்ளாமை குறள்: 5

அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல்.

கள்ளாமையாவது:— பிறரது உடைமையான பொருள்களை மனத்தினாலேனுங் கவர்ந்து கொள்ளக் கருதாமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ-ரை:— பிறரது பொருளைக் கவர்ந்து கொள்ளக் கருதி, அவர்களது சோர்வை எதிர்பார்த்திருப்பவர்களிடத்திலே அருளை மேலான பொருளாக மதித்து, அவ்வருள் வழியிலே அன்பு செலுத்துந் தன்மை இல்லையாகும்.

வி-ரை:— பொச்சாப்பு-சோர்வு. கருதி-நினைத்த. இல்-இல்லை. பிறரது பொருளைக் கவர நினைப்பவரிடத்தில் அருளியல்பு இராது. களவைச் செய்தலேயன்றிக் களவு எடுக்க நினைத்தலுமே பாவத்திற்கு இடனாகும்.

## அதி: 30 வாய்மை குறள்: 8

புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.

வாய்மையாவது: எவ்வுயிர்க்காயினுந் தீங்கு பயக்குஞ் சொற்களைச் சொல்லாதிருத்தல்.

பொ-ரை:— ஒருவரின் புறத்ததான உடற்சுத்தம் நீரினால் உண்டாகும். அவரது உள்ளத்தின் தூய்மை உண்மை பேசுதலாகிய இயல்பினால் உண்டாகும்.

வி-ரை:— புறம்-உடல். அமையும்-ஆகும். அகம்-உள்ளம். காணப்படும்-உண்டாகும். புறத்தூய்மையை உண்டாக்கும் வாய்மையே சிறந்தது.

## அதி: 31 வெகுளாமை குறள்: 1

செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கிலென் காவாக்கா லென்.

வெகுளாமையாவது:— பிறர்மேற் கோபங்கொள்வதற்குக் காரணம் இருப்பினும், அதனைச் செய்யாதிருத்தல்.

பொ-ரை:— கோபஞ் செல்லக்கூடிய இடத்தில் அதனை செய்யாதவனே கோபத்தைத் தடுத்து நிறுத்திய சிறப்புக்குரியவனாவான்; கோபஞ் செல்லாத இடத்திலே அதனைத்தடுத்தாலுந் தடுக்காவிட்டாலும் ஒன்றேயாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வி-ரை:— செல்லிடம்-தம்மினும் வலிமை குறைந்தவர்கள். அல்லிடம்-தம்மினும் வலிமை கூடியவர்கள். காத்தல்-தடுத்தல். மெலியார் தம்மீதுவரும் கோபத்தைத் தடுக்கும் ஆற்றல் இல்லாதவர்; ஆதலின் அவரிடம் கோபம் பலிதமாகும்; அதனாற் பாவச் செயல்களுக்கு இடனுகும். வலியார், தம்மீது வருங் கோபத்தைத் தடுக்கும் ஆற்றல் உள்ளவர். ஆதலின் அவர்மீது கோபம் பலிதமாகாது. அதனுற் பாவச் செயல்களும் நிகழா. ஆகவேதான் கோபத்தைச் செய்தாலுஞ் செய்யாவிட்டாலும் ஒன்றே என்றுர்.

## அதி: 32 இன்னுசெய்யாமை குறள்: 10

நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.

இன்னுசெய்யாமையாவது:— பிற உயிர்களுக்குத் துன்பந் தரக்கூடியவைகளைச் செய்யாமை.

பொ-ரை:— பிற உயிர்களுக்குச் செய்யுந் துன்பங்கள் யாவும், அவைகளைச் செய்தவர்களிடமே பின்பு வந்துசேரும்; ஆகவே, துன்பம் இல்லாமல் வாழவிரும்புபவர் பிறருக்குத் துன்பஞ் செய்யார்.

வி-ரை:— நோய்-துன்பம். மேலவாம்-வந்துசேரும். இன்மை-இல்லாமை.

## அதி: 33 கொல்லாமை குறள்: 6

கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று.

கொல்லாமையாவது:— பிற உயிர்களைக் கொல்லாதிருத்தல்; கொல்லுதல்-உயிர்களை அவற்றின் உடம்பிலிருந்து நீக்குதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொ-ரை:— உயிர்களைக் கவர்ந்து செல்லும் இயமனானவன், கொல்லாமை ஆகிய விரதத்தை மேற்கொண்டவர்களிடம், அவர்களது உயிரைக் கவர்வதற்குச் செல்லமாட்டான்.

வி-ரை:— கொல்லாமை-கொல்லாமையாகிய அறம். மேற்கொண்டொழுகுதல்-உயர்ந்ததாகக் கொண்டு அதனைச் செய்தல். கூற்று-இயமன். ஆகவே கொல்லாமை என்னும் அறம் உயர்ந்தது.

## அதி: 34 நிலையாமை குறள் 1:

நில்லா தவற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

நிலையாமையாவது:— உலகப் பொருள்களும், உலகமும், நிலையில்லாதவை என்பதை உணருதல். இதனால் நிலையுள்ள கடவுளை அறிதற்கும், அவரை அடைவதற்கும், அதற்கு வழிப்படுத்தும் அறங்களைச் செய்தற்கும் உள்ளம் ஒருப்படும்.

பொ-ரை:— நிலையில்லாதனவாகிய பொருள்களை நிலையுள்ளவை என நினைக்கின்ற அற்ப அறிவு, அறநெறியாளரிடத்தில் இருத்தல் மிக இழிவானது.

வி-ரை:— நில்லாதன-உலகப் பொருள்களும், உலகமும். நிலையின - நிலைத்து நிற்பவை. உணர்தல் - நினைத்தல்; புல் அறிவு-அற்ப அறிவு. ஆண்மை-தொடர்ந்து இருத்தல். கடை-இழிந்தது; பயனைத் தராதது.

## அதி: 35 துறவு குறள்: 7

பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

துறவாவது:— புறப்பற்றுக்களையும், அகப்பற்றுக்களையும் விடுதல். ஏனெனில், இவை நிலைபேறான பயன்களைக் கொடுக்கமாட்டா. புறப்பற்றுத் தனது செல்வம் முதலியவற்றில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருக்கும் அன்பு. அகப்பற்று-தனது உடம்பு முதலிய வற்றில் வைத்திருக்கும் அன்பு. இப்பற்றுக்களை விடுவதனாலே கடவுளிடத்தே பற்று உண்டாகும்.

பொ-ரை:— இருவகைப்பற்றுக்களையும் பற்றிக்கொண்டு அவைகளை விடாதவர்களைப் பல்வகைத் துன்பங்கள் பற்றிக்கொண்டு, அவர்களை விட்டு நீங்கா.

வி-ரை:— இடும்பை-துன்பம். விடாஅ-விடமாட்டா. பற்றுக்களை விட்டவர்களுக்குத் துன்பங்கள் இல்லை என்பதாம்.

## அதி: 36 மெய்யுணர்தல் குறள்: 1

**பொருளல்ல வற்றைப் பொருளென்றுணரும்**
**மருளானும் மாணப் பிறப்பு.**

**மெய்யுணர்தலாவது:**— கடவுளைப்பற்றிய உண்மைகளை உணருதல். மெய்-நிலைபேருக உள்ள பொருள்.

பொ-ரை:— நிலையில்லாதனவாகிய பொருள்களை, நிலையுள்ள பொருள்கள் என நினைக்கின்ற அறியாமையினாலே, உயிர்களுக்குத் துன்பங்களுக்குரிய பிறப்பு உண்டாகிறது.

வி-ரை:— பொருளல்ல - நிலையில்லாத பொருள்கள்; பொய்ப் பொருள்கள்; பொருள்-நிலையுள்ள பொருள்; மெய்ப்பொருள். உணரும் - நினைக்கின்ற. மருள் - மயக்க அறிவு; அறியாமை. ஆம்-உண்டாகிறது. மாண-மாட்சிமைப்படாத; துன்பத்திற்குரிய. உண்மை அறிவு உள்ளவர்களுக்குப் பிறப்பு உண்டாகாது. பிறப்பு இல்லையானால் இறப்பும் இல்லை. இவை தருந் துன்பங்களும் இல்லை. கடவுளின் திருவடிக்கீழ் என்றும் பேரானந்தமான நிலை கிடைக்கும்.

## அதி: 37 அவாவறுத்தல் குறள்: 2

**வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது**
**வேண்டாமை வேண்ட வரும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அவாவறுத்தலாவது:—** பொருள்களைப் பெறவேண்டு மென மேன்மேலும் உண்டாகும் ஆசையை நீங்குதல்.

**பொ-ரை:—** ஒன்றை ஒருவர் விரும்பும்போது, பிறவா திருக்கும் நிலையையே விரும்புதல் வேண்டும், அவாவின் மையை மேற்கொள்வதனாலே அப்பிறவா நிலை கிடைக்கும்.

**வி-ரை:—** வேண்டுங்கால் ஏதாவதொன்றை விரும்பும் போது, வேண்டும்-விரும்புதல் வேண்டும். வேண்டாமை— விருப்பமற்ற தன்மை; அவாவின்மை வேண்ட-மேற்கொள்ள. அது-பிறவா நிலை. மற்று அசைச் சொல். 'வேண்டுங்கால் பிறவாமை வேண்டும்; வேண்டாமை வேண்ட அது வரும்' எனச் சொற்களைச் சேர்க்கவும். அவா பிறப்பைக் கொடுக் கும். அவாவின்மை, பிறவாமையைக் கொடுக்கும்.

## அதி: 38 ஊழ் குறள்: 10

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்.

**ஊழாவது:—** அவரவர் செய்த நல்வினை, தீவினைகளினால் வரும் பயன். விதி, தெய்வம் எனினும் பொருந்தும்.

**பொ-ரை:—** ஊழை விலக்குதற்காக வேறோர் உபாயத் தை மேற்கொண்டாலும், அவ் உபாயத்தைப் பயனற்ற தாக்கிவிட்டு, அந்த ஊழ்தான் கொடுத்தற்குரிய பயனைக் கொடுக்கும்; ஆதலின், ஊழினும் வலிமையானது இவ்வுல கில் எதுவும் இல்லை.

**வி-ரை:—** ஊழ்-விதி, பெருவலி-மிக்க வலிமையுள்ள பொருள்கள். யா-எவை. உள-இருக்கின்றன. மற்றொன்று- வேறோர் உபாயம். சூழினும்-மேற்கொண்டாலும். தான்— அந்த ஊழ். முந்து உறும்-முன்னுக்கு நிற்கும்; கொடுத்தற் குரிய பயனைக் கொடுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதி: 40 கல்வி குறள்: 1

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

**கல்வியாவது:**— கற்றற்கு உரிய நூல்களைக் கற்றல்.

பொ-ரை:— கற்க வேண்டிய நூல்களைச் சந்தேகமும், மயக்கமும் இல்லாமற் கற்றல் வேண்டும். அங்ஙனம் கற்ற பின், அந்நூல்கள் சொல்லிய முறைப்படி ஒழுகுதல் வேண்டும்.

வி-ரை:— கசடற-சந்தேக மயக்கங்கள் இல்லாமல். அதற்குத்தக - நூல்கள் சொல்லியபடி. ஆகவே கல்வியை முறைப்படி கற்றலுங் கற்றபடி ஒழுகுதலும் முக்கியமாகும். 'கற்பவை கசடறக் கற்க; கற்றபின் அதற்குத் தக நிற்க" எனச் சேர்க்கவும்.

அதி: 42 கேள்வி குறள்: 4

கற்றில ரையினுங் கேட்க அஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை.

**கேள்வியாவது:**— கற்றற்குரிய நூல்களினுற் கூறப்பட்ட உண்மைகளைக் கற்றறிந்தார் கூறக் கேட்டல்.

பொ-ரை:— கற்க வேண்டிய நூல்களை ஒருவன் உரிய காலத்திலே கற்கா தானாயினும், பின்பு அவைகளைக் கற்றறிந் தார் கூறும்போது கேட்டல் வேண்டும். அவ்வாறு கேட்ட லாற் பெற்ற அறிவானது, அவனுக்குத் தளர்வு ஏற்படும் போது நல்ல துணையாகும்.

வி-ரை:— 'அஃது ஒருவர்க்கு ஒற்கத்தின் ஊற்றாம்" எனப் பிரிக்க. ஒற்கம்-தளர்வு. ஊற்று-பற்றுக்கோடு.

அதி: 43 அறிவுடைமை குறள்: 3

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுடைமையாவது:— உண்மை அறிவு உடையவனாய் இருத்தல்.

பொ-ரை:— எந்த நூற்பொருளையேனும், எவரிடம் கேட்டாலும், அப்பொருளின் உண்மைத் தன்மையைப் பகுத்து அதனைக் கொள்வதே அறிவுடைமையாகும்.

வி-ரை:— வாய்க்கேட்டல் - சொல்லக் கேட்டல். அப்பொருள் மெய்ப்பொருள் - அப்பொருளினது உண்மைத் தன்மையை. அறிவுடைமையாவது இன்னதெனக் கூறினார்.

## 20. மங்கையர்க்கரசியார்

முன்னொரு காலத்திலே சோழவள நாட்டிலே மணிமுடிச்சோழன் அரசியற்றி வந்தான். அவன் சிறந்த சிவபத்தன். அவன் செய்த தவப்பயனால் மங்கையர்க்கரசியார் அவதரித்தார். மங்கையர்க்கரசியார், இளமையிலே சகல கலைகளையுங் கற்று அறிவொழுக்கங்களில் சிறந்து விளங்கினார். பாண்டியன் நெடுமாறன் அவரை மணமுடித்தான். இவன் கூன்பாண்டியன் எனவும், நின்ற சீர்நெடுமாறன் எனவும் பேசப்படுவான். மங்கையர்க்கரசியாருக்கு "மானி" என்னும் ஒரு பெயருண்டு. ஞானசம்பந்தப்பெருமான் "வரிவளைக்கை மடமானி" என்று போற்றுவர். சேக்கிழார் பெருமான் 'மங்கையர்க்குத் தனி அரசி எங்கள் தெய்வம்' என்று ஏத்துவர். அம்மையார் சிவபத்தியிலும் அடியார் பத்தியிலுஞ் சிறந்தவர். நெடுமாறனின் மந்திரியார் குலச்சிறையார். இவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் 'பெருநம்பி குலச்சிறையார்' என்று போற்றப்பட்டவர். சிறந்த சிவபக்தர். அடியார்களை ஆதரிக்கும் அருநியமம் பூண்டவர். நெடுமாறன் காலத்தில் பாண்டிநாட்டில் சமணசமயம் பெருமளவில் பரவியிருந்தது. பிரசாரத்தில் வல்ல சமணகுருமாரின் போதனையால் நெடுமாறனுஞ் சமணனாகி இருந்தான். குடிமக்களுஞ் சமணமதத்தைக் கைக்கொண்டு ஒழுகினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையில் பாண்டிமாதேவியாருங் குலச்சிறையாருஞ் சைவநெறியில் நின்றொழுகினர். சைவசமயங் குன்றுதலையும், சமணசமயம் ஏற்றம் பெற்று வருதலையுங் கண்டு பெரிதும் மனம் தளர்ந்தனர். ஞானசம்பந்தப் பிள்ளையார் வேதாரணியத்தில் எழுந்தருளி இருத்தலைக் கேள்விப்பட்ட மங்கையர்க்கரசியாருங் குலச்சிறையாரும் மிகவும் மகிழ்ச்சி எய்தினர். ஞானசம்பந்த ஞாயிற்றைப் பாண்டி நாட்டில் எழுந்தருளச் செய்து சமண சமயமாகிய காரிருளை ஓடச் செய்ய வேண்டும் என்று விழைந்து, பரிசனங்களை அனுப்பி அவரை வருமாறு வேண்டினார்கள். ஞானசம்பந்தப் பெருமான் அங்கு வந்து பாண்டியன் வெப்பு நோயைத் தீர்த்து, அனல்வாதம் புனல்வாதம் முதலியவற்றில் சமணர்களை வென்று சைவ சமயத்தைத் தாபித்தருளினார்.

பாண்டியன் சைவனானான். பாண்டியநாடெங்குஞ் சைவ சமயந் தழைத்தோங்கலாயிற்று. மங்கையர்க்கரசியாரது அரும்பணியைக் குறித்து ஞானசம்பந்தப் பெருமான் தமது தேவாரப் பதிகங்களில் சிறப்பித்துப் பாடி அருளினார்.

ஞானசம்பந்தப் பெருமான் பாண்டிநாட்டில் இருந்தும் யாத்திரையை மேற்கொண்டபோது, பாண்டிய மன்னனும் மங்கையர்க்கரசியாரும் இராமேச்சுவரம் வரை யாத்திரை செய்து மீண்டனர். பாண்டிமாதேவியார் நாவுக்கரசப் பெருமான் பாண்டி நாடடைந்தபோது, அவரை வரவேற்று உபசரிக்கும் பெருமையும் பெற்றவர்.

மங்கையர்க்கரசியார் இறைவன் திருவருளால் நெடுங் காலந் தம்முடைய கணவனாருக்குச் சைவவழித் துணையாகிப் பாண்டி நாடெங்குஞ் சைவத் திருநெறியைப் பரிபாலனஞ் செய்து கொண்டிருந்து, பின் கணவருடன் சிவபதம் அடைந்தார்.

அம்மையாரது காலம் ஏழாம் நூற்றாண்டு என ஆராய்ச்சி அறிஞர்கள் கூறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. மெய்கண்ட தேவர்

செந்தமிழ் நாட்டிலே திருப்பெண்ணாகடம் என்னுந் திருப்பதி உள்ளது. அது குடந்தைநகர் எனவும் வழங்கும். அத்திருப்பதியிலே அச்சுதகளப்பாளர் என்னுஞ் சைவ வேளாளர் ஒருவர் இருந்தார். அவருக்குச் சகலாகம பண்டிதர் என்னும் அருணந்திசிவாசாரியார் குலகுரு. நெடுங்காலம் புத்திரப்பேறு இன்றி வருந்திய அச்சுதகளப்பாளர் தங்குறையைக் குருவிடந் தெரிவித்தார். அருணந்தியார் தேவாரத் திருமுறையில் கயிறு சாத்திப் பார்த்த போது, ஞானசம்பந்தப் பெருமான் பாடியருளிய,

"பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ளநினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா வொன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாந் தீவினையே"

எனும் திருப்பதிகம் வந்தது. அத் திருப்பாட்டில் திருவெண்காட்டில் உள்ள முக்குளநீரில் நீராடுபவர்க்குப் பிள்ளையினோடு எண்ணிய யாவுங் கைவருமென்று அறுதியிட்டுக் கூறியிருத்தலின் அருணந்தி சிவாசாரியார் அச்சுதகளப்பாளரைத் திருவெண்காட்டிற்குச் சென்று, முக்குளநீரில் மூழ்கி அங்கெழுந்தருளியிருக்கும் இறைவனையும் இறைவியையும் வழிபட்டு வரும்படி கட்டளை இட்டார். அச்சுதகளப்பாளர் அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு தம் மனைவியாரோடு திருவெண் காட்டிற்குச் சென்று, ஆசிரியர் விதித்தபடி அறங்கள் பலவுஞ் செய்து கொண்டிருந்தார். அங்ஙனம் அவர் வதியுங் காலத்தில், ஒருநாள் சிவபெருமான் அவர் கனவில் தோன்றி "அன்பரே இப்பிறவியில் மகப்பேறு எய்தும் பான்மை நினக்கில்லை" என்று உரைத்தார். அது கேட்ட அச்சுதகளப்பாளர், ஞானசம்பந்தப் பெருமான் திருவருட் பாடலை நம்பித் தவங்கிடந்தேன்! இம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலே அடியேற்கு நற்புதல்வனை அருளல் வேண்டும்'' என்று வேண்டுதல் செய்து பலமுறை பணிந்தார். இறைவன் கருணை கூர்ந்து ஞானசம்பந்தன் நம்மைத் துதித்த பாட்டின் கண் உறுதி வைத்து எம்மை வழிபட்டமையின், அவன் போன்ற மகவினை நீயும் பெற்று வாழ்தி'' என்று கூறி மறைந்தார். அதனைக் கேட்ட அச்சுதகளப்பாளர் பெருமகிழ்வெய்தினார்; முன்போலவே சிவபெருமானை வழிபட்டு அறநெறியில் ஒழுகலானார்.

பின்னர் அச்சுதகளப்பாளர், மனைவியார் வயிறு வாய்த்த தறிந்து பத்து மாதங்களிலுஞ் செயற்பாலனவாகிய சடங்குகள் அனைத்தையும் உவகையோடு செய்து முடித்தார். சைவ சித்தாந்த இளவள ஞாயிறாகிய மெய்கண்ட தேவர் நல்ல வேளையில் நிலவுலகம் உய்ய உதித்தருளினார்.

அக்காலத்தில் செய்ய வேண்டிய சடங்குகள் எல்லாஞ் செய்து முடித்துத் திருவெண்காட்டப்பரிடம் விடைபெற்றுச் சுற்றத்தார் புடைசூழப் பிள்ளையோடும் மனைவியோடும் அச்சுதகளப்பாளர் திருப்பெண்ணாடகஞ் சென்று, தமது இல்லத்தில் தங்கினார். ஊரரெல்லாம் அச்சுதகளப்பாளர் பிள்ளைப்பேறெய்திய நற்செய்தி கேட்டு மகிழ்ந்தனர். திருவெண்காட்டீசர் திருவருளால் பிறந்த குழந்தை ஆதலின், அவ்வருட் குழந்தைக்குச் சுவேதனப்பெருமாள் என்னுந் திருப்பெயரிட்டனர்.

சிலநாள் சென்றதுந் திருவெண்ணெய் நல்லூரில் உள்ள குழந்தையின் நன்மாமனார் குழந்தையைத் தமது இல்லத்துக்கு எடுத்துச் சென்று வளர்த்துவருவராயினர்.

சுவேதனப்பெருமாள் முன்னைப் பிறவியில் சரியை, கிரியை, யோகம் முதலியன முடித்துச் சிவஞானம் அடைதற்குரிய பெருந்தவம் செய்திருந்தாராதலின், இரண்டு வயதிலே ''அடிசேர் ஞானம்'' எய்தற்குரிய சாமுசித்த நிலை எய்தி இருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவேதனப் பெருமான் திருவெண்ணெய் நல்லூரில் இருந்த காலையில், திருக்கைலாசத்தில் இருந்து சனற்குமார முனிவரது ஞானப்புதல்வராகிய சத்தியஞான தரிசனிகளி டம் உபதேசம் பெற்ற பரஞ்சோதி முனிவர் என்பார் அகத் தியர் வீற்றிருக்கும் பொதியமலையை நோக்கி வந்து கொண் டிருந்தார். அவரது ஒளி விமானமானது திருவெண்ணெய் நல்லூருக்கு வந்தவுடன் நின்றுவிட்டது. அதன் குறிப்பை உணர்ந்த பரஞ்சோதியார் சுவேதனப் பெருமானைக் கண்டு, அவருக்கு மெய்யுணர்வு அளித்து, மெய்கண்டார் என்ற தம்து தந்தையின் திருப்பெயரையுஞ் சூட்டிச் சென்றார்.

மெய்கண்டார் கலைஞானமனைத்தையுந் திருவெண் ணெய் நல்லூரில் எழுந்தருளியுள்ள பொல்லாப் பிள்ளையா ரிடங் கேட்டுத் தெளிந்தார். மெய்கண்டார் தான் பெற்ற இன்பம் இவ்வையகம் பெற வேண்டும் என்னுந் திருவுளக் கருத்தால், சிவஞானபோதம் என்னும் சைவ சித்தாந்தத் தனிப்பெரும் பொருள் நூலை அருளினார்.

மெய்கண்டார் சிவஞானபோதப் பொருளை நன்மாணாக் கர்களுக்கு உபதேசிப்பதை அவருடைய தந்தையாரின் குலகுருவாகிய அருணந்தி சிவாசாரியார் கேள்விப்பட்டார்; அவர் இவரிடம் வந்து ஆணவமலத்தைப் பற்றி வினவ, அவர் செருக்குற்று நிற்கும் நிலையைச் சொல்லாமல் சொல்ல எண்ணி, ஒருமுறை அருணந்தியாரை ஏற இறங்கப் பார்த் தார். உடனே அருணந்தியார் மெய்கண்டார் திருவடிகளில் விழ்ந்து வணங்கித் தமக்கும் உபதேசிக்கும்படி வேண்டினார். மெய்கண்டதேவர் அருணந்தியாருக்கு உபதேசஞ் செய்து தமது சிவஞானபோதத்திற்கு ஒரு விரிந்த வழிநூல் செய்யு மாறு கட்டளையிட்டார். அருணந்தியார் செய்த நூல் சிவ ஞான சித்தியார் ஆகும். அருணந்தி சிவாசாரியார், மன வாசகங் கடந்தார் முதலிய நாற்பத்தொன்பது நன் மாணாக் கர்களுக்கு மெய்கண்டார் உபதேஞ் செய்து, ஐப்பசி மாதத் துச் சோதி நன்னாளில் சிவபெருமானோடு இரண்டறக் கலந் தார். இவர் காலம் கி. பி. 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி யாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்கண்ட தேவர் அருளிய சிவஞானபோதத்திற்குப் பல உரைகள் உண்டு. சிவஞான சுவாமிகள் எழுதிய சிற்றுரையும் மாபாடியமும், பாண்டிப்பெருமாள்பிள்ளை எழுதிய விருத்தியுரையுமே பெரும்பாலும் வழக்கில் உள்ளன.

—*—

## 22. அருணந்தி சிவாசாரியார்

செந்தமிழ் நாட்டிலே திருவதிகை என்னுந் திருப்பதிக்கு வடக்கிலே, திருத்துறையூர் எனும் பதி உள்ளது. இத்திருத்துறையூரிலேதான் தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமக்குத் தவநெறி அருளுமாறு இறைவனை வேண்டிக் கொண்டார். திருத்துறையூரிலே ஆதிசைவர் மரபிலே அருணந்திதேவர் திருவவதாரம் செய்தருளினர். இவர் வடமொழி தென்மொழிகளைத் துறைபோகக் கற்றவர். சிவாகமங்களை அவற்றின் உபாகமங்களுடன் நன்கு கற்றுச் சிறந்து விளங்கியமை கண்டு அந்நாளில் இவரைச் சான்றோர்கள் சகலாகம பண்டிதர் என்னுஞ் சிறப்புப் பெயர் தந்து பாராட்டினர்.

சந்தான குரவருள் முதல்வரும், சிவஞானபோதம் அருளிச் செய்த சிவஞானச்செம்மலுமாகிய மெய்கண்ட தேவர்பால் அருளுபதேசம் பெற்று, அவர் மாணவருள் முதல்வராய் விளங்கினர்.

இவர் சிவஞானசித்தியார், இருபாவிருபஃது என்னும் இரு நூல்களை இயற்றியருளினர். மெய்கண்டதேவர் அருளிய சிவஞானபோதத்திற்கு உரை கூறும் முறையில் தமிழ் நலங் கனித்த விருத்தப்பாக்களால் சிவஞானசித்தியார் இயற்றப்பெற்றுள்ளது. இந்நூல் பரபக்கம், சுபக்கம் என இருபகுதிகளைக் கொண்டது. பரபக்கத்தில் பரசமயக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கைகளும், சித்தாந்த நெறி நின்று அவற்றை மறுத்துரைக்கும் மறுதலைகளும் அடங்கியுள்ளன. சுபக்கத்தில் சைவ சித்தாந்த உண்மைகள் விளக்கப்பட்டுள்ளன.

''பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே
ஓர் விருத்தப் பாதிபோதும்'' எனச் சிவபோக சார நூல் உடையாரும்,

"பாதி விருத்தத்தால் இப்பார் விருத்த மாக உண்மை
சாதித்தார் பொன் அடியைத் தான் பணிவதெந்நாளோ''
எனத் தாயுமான சுவாமிகளும் இந்நூலைப் புகழ்ந்துள்ளனர்.

''சிவத்திற்குமேல் தெய்வமில்லை சிவஞானசித்திக்குமேல்
சாத்திரம் இல்லை'' என்பது உலகப் பழமொழி.

இவர் காலமும் மெய்கண்ட தேவர் காலமே. அது கி.பி. 13-ஆம் நூற்றூண்டாகும். சுவாமிகள் திருத்துறையூரிலே புரட்டாதி மாதத்துப் பூரநாளிலே, இறைவன் திருவடி நிழலை எய்தினூர். திருத்துறையூரில் அருணந்தி சிவஞூரது இடமொன்று உண்டு. அது திருவாவடுதுறை ஆதீனத்துக்கு உரியதாகும். அங்கு அருணந்தி சிவஞருக்கு நாள் வழிபாடும் குருபூசை விழாவும் நடைபெற்றுவருவதாகக் கூறுவர்.

## 23. மறைஞான சம்பந்த சிவாசாரியார்

இவர் சகலாகம பண்டிதராய அருணந்தி சிவாசாரியாரின் மாணவர். திருப்பெண்ணுகடத்தில் பிறந்தவர். வேதியர் குலத்தினர். வேத சிவாகமங்களைத் துறைபோகக் கற்றவர். இவர் இயற்பெயர் சம்பந்தர் என்று கூறுவர். மறைகளை நன்கு உணர்ந்த காரணத்தால் மறைஞானசம்பந்தர் எனப் போற்றப்பட்டார் என்பர். தம் குருநாதரிடம் பெற்ற உபதேசங்களைத் தம் மாணவர்களுள் தலைசிறந்தவராய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமாபதி தேவருக்கு உபதேசித்தருளினுர். சிதம்பரத்தை அடுத்த திருக்களாஞ்சேரியிலே தங்கிச் சில ஆண்டுகள் மௌன விரதம் பூண்டிருந்தார். இவர் மௌன நிலைமையை மேற்கொண்டிருந்தமையால் நூல்கள் எதையுஞ் செய்யவில்லை என்பர். இவர் ஆவணி மாதத்து உத்தர நாளிலே இறைவனுடன் இரண்டறக் கலந்தார். திருக்களாஞ்சேரியில் இவரது சமாதி உண்டு. மறைஞான சம்பந்த சுவாமிகள் காலமும், உமாபதி சிவாசாரிய சுவாமிகள் காலமும் ஒன்ருகும்.

## 24. உமாபதி சிவாசாரியார்

இவர் தில்லைவாழ் அந்தணர்களில் ஒருவர். சிதம்பரத்தைச் சார்ந்த கொற்றவன் குடியில் வசித்தவர். அதனுல் கொற்றங்குடி முதலியார் என வழங்கப்பெற்ருர். வேத சிவாகமங்களை ஐயந்திரிபறக் கற்றறிந்தவர். மறைஞானசம்பந்தர்பால் உபதேசம் பெற்றவர். சிவபத்தியிலும், அடியவர் பத்தியிலும் சிறந்தவர்.

ஒருநாள் கூத்தப்பெருமானைப் பூசித்துவிட்டுச் சிவிகையில் தீவர்த்தி முதலிய விருதுகளுடன் வந்து கொண்டிருந்தார். இவரது ஆடம்பரத்தை மறைஞானசம்பந்த சுவாமிகள் கண்டார். திருவருள் கைகூடுதலால் அவரைப் பார்த்து "பட்டகட்டையில் பகற் குருடு போகின்றது" என்று குறிப்பாகக் கூறினுர். உடனே உமாபதியார் கேட்டுச் சிவிகையை விட்டிறங்கி மறைஞானசம்பந்தரை வணங்கி அவருக்குச் சீடர் ஆனுர். குருதேவர் தம் மாணவனின் அதிதீவிர பக்குவ நிலையை உலகோர்க்கு வெளிப்படுத்த எண்ணி, புடைவை நெய்வார் வீதிவழியே சென்று அவர்களில் ஒருவரிடங் கூழ் வாங்கி உண்டார். அவர் உண்ணும் போது, கூழ் முழங்கை வழியே ஒழுகியது. குருவின் பக்கலில் நின்ற உமாபதியார் அதனைப் பேரானந்தத்துடன் ஏந்திப்பருகினுர்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமாபதியார் செய்கையைக்கண்ட தில்லைவாழ் அந்தணர்கள், அவரை இகழ்ந்து கூத்தப்பெருமானைப் பூசிக்க விடாது தடுத்தனர் என்று பெரியோர்கள் கூறுவர்.

சுவாமிகள் நடேசப்பெருமானது திருமுகப்படி, பெற்றான் சாம்பான் என்னுஞ் சிவபக்தருக்குத் தீட்சை நல்கி முத்தி கொடுத்தார். அன்றியும் முள்ளிச் செடிக்கு அரசன் முதலியோரது வேண்டுகோட்படி முத்தி கொடுத்தார் என்பர். சிதம்பரத்திலே மார்கழி மாதத் திருவிழா ஒன்றிலே கொடி ஏறாது தடைபட்டுநின்றகாலை, கொடிக்கவி என்னும் நூலைப் பாடி கொடி ஏறச் செய்தருளினார்.

சுவாமிகள் பாடிய கோவிற்புராணம் அரங்கேற்றப் படாமல் பெட்டகத்துள் வைக்கப்பட்டிருந்தது. கூத்தப் பெருமான் தாம் உமாபதி சிவத்தின் பெட்டகத்துள் இருப்பதாகத் தில்லைவாழ் அந்தணர்களுக்கு அறிவித்து, அவர்களைக் கொண்டு அப்புராணத்தை அரங்கேற்றுவித்தார்.

சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கனுள் சுவாமிகளால் அருளப் பெற்றவை எட்டாகும். அவற்றை ஆன்றோர் "சித்தாந்த அட்டகம்" என்று வழங்குவர். அவை சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்பனவாம்.

சுவாமிகள் இவற்றை அன்றிக் கோயிற்புராணம், திருத்தொண்டர் புராண சாரம், திருமுறை கண்ட புராணம், சேக்கிழார் புராணம், திருப்பதிகக்கோவை, வடமொழி பௌட்கராகம வியாக்கியானம் முதலிய நூல்களையும் செய்துள்ளார். சிவப்பிரகாசம், திருவருட்பயன் என்பன சைவசித்தாந்த உண்மைகளை மிகவும் தெளிவாக விளக்குவனவாம்.

சுவாமிகளின் மாணாக்கர்கள் நமச்சிவாய தேசிகர் முதலியோர். நமச்சிவாய தேசிகரே, திருவாவடுதுறை ஆதீனத்தை அமைத்தார் என்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிகள் சித்திரை மாதத்து அத்தநாளில் சிவபதம் அடைந்தார்கள். சுவாமிகளின் திருக்கோயில் சிதம்பரத்தை அடுத்த கொற்றவன் குடியில் அமைந்துள்ளது. சுவாமிகள் காலம் கி. பி. 13 ஆம் நூற்றூண்டின் பிற்பகுதியும், 14 ஆம் நூற்றூண்டின் முற்பகுதியுஞ் சார்ந்தது என்பர்.

சந்தானுசாரியர் குருபூசை நாட்கள்:

சித்திரை அத்தமுபாபதி ஆவணித் திங்கடனில்
உத்திரஞ் சீர்கொண் மறைஞான சம்பந்தர் ஓதுகன்னிச்
சுத்த மெய்ப்பூரம் அருணந்தி ஐப்பசிச் சோதிதனில்
வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி மேவினரே.

## 25. கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள்

தொண்டைநாட்டிலுள்ள காஞ்சிபுரத்திலே, காளத்தியப்ப சிவாசாரியார் என்னும் ஒருவர் இருந்தார். இவர் குமரகோட்டம் என்னுங் கோவிற் பூசகராக விளங்கினுர். குமரக்கடவுளின் திருவருளாலே இவருக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. இக்குழந்தைக்குக் கச்சியப்பர் என்னுந் திருப் பெயரை இட்டனர். கச்சியப்பர் உரிய காலத்திலே கல்வி கற்று தென்மொழியிலும் வடமொழியிலும் வல்லவரானுர்.

கச்சியப்பர் சமய. விசேட தீட்சைகள் பெற்றுக் குமர கோட்ட அருச்சகராக இருந்தார். குமரக் கடவுளிடம் மிகவும் பத்தியுடையவரானுர். குமரக் கடவுளின் மகிமைகளைக் கூறுவதாகிய வடமொழிக் கந்தபுராணத்திலுள்ள சிவரகசிய காண்டத்தைத் தமிழிலே ஒரு நூலாகச் செய்ய விரும்பினுர். இதற்காக நாள்தோறுங் குமரக்கடவுளை வேண்டினுர்; இதன் பேருகக் குமரக் கடவுள் "திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்" என்னும் முதலடியை இவருக்கு உணர்த்தினுர். இதனை முதலாகக்கொண்டு குமரக் கடவுளை வணங்கி நாள் தோறும் நூறு செய்யுட்களாகப் பாடினுர், இவ்வாறு ஆறு காண்டங்களையும், 10345 பாக்களையுங் கொண்டதாகப் பாடிக் 'கந்தபுராணம்' என்னும் பெயருடன் நூலை நிறைவாக்கினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலை அரங்கேற்றுவதற்கு உரிய நாளில் நகரம் நன்கு அலங்கரிக்கப்பெற்றது. பெருந்தொகையான அடியார்களும் புலவர்களும், அரசாளுஞ் சபையிலே நிறைந்திருந்தனர். கச்சியப்பசிவாசாரியார் குமரக் கடவுளை வணங்கித் 'திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்' என்னும் முதற் செய்யுளை பாடி, அதற்கு உரை கூற ஆரம்பித்தார். அப்போது அச் சபையிலிருந்த புலவர் ஒருவர் ''திகழ் + தசக்கரம்'' என்னுஞ் சொற்கள் ''திகடசக்கரம்'' என வரமாட்டா. இதற்குத் தமிழிலக்கண நூல்களிலே விதியில்லை என்றார். குமரக்கட வுளே அவ்வாறு அருளினர் எனக் கச்சியப்பசிவாசாரியார் கூறினர். இதனைச் சபையிலிருந்தவர்கள் ஏற்கவில்லை.

அன்று அவர் உணவு அருந்தாமல் இருந்து குமரக்கட வுளை வேண்டினர். சோழ நாட்டிலே வீரசோழியம் என் னும் நூல் இருக்கிறது. அதில் இதற்கு விதி இருக்கிறது. நாளை ஒருவர் வந்து அந்நூலைச் சபைக்குக் காட்டுவார். எனக் குமரக்கடவுள் அவருக்கு அறிவுறுத்தினர். அவ்வாறே அடுத்த நாள் அரங்கேற்ற மண்டபத்திற்கு ஒரு நூலுடன் ஒருவர் வந்தார். தாம் சோழநாட்டிலிருந்து வந்தவர் எனவும், தாம் வைத்திருப்பது வீரசோழியம் என்னும் நூல் எனவும், அந்நூலிலே ''திகழ் + தசக்கரம்-திகட்சக்கரம்'' என வந்தமைக்கு விதி இருக்கிறது எனவுங்கூறி, அவ்விதியை அந்நூலிற் காண்பித்தார். பின்னர் நூலைக் கச்சியப்பரிடங் கொடுத்துவிட்டு மறைந்தருளினர். அவ்வாறு வந்தவர் கும ரக்கடவுளே என்பதைக் கச்சியப்பருஞ் சபையோரும் அறிந் தனர். அதனாலே சபையோர் கச்சியப்பசிவாசாரியாரின் பெருமையை உணர்ந்தனர்.

இதன்பின் புராண அரங்கேற்றந் தடையின்றி இனிது நடைபெற்றது. நாள்தோறும் பல்லாயிரக்கணக்கானோர் கச்சி யப்ப சிவாசாரியாரின் கந்தபுராண உரையினைக் கேட்டு மகிழ்ந்தனர். காஞ்சி நகரச் செல்வர்கள் அரங்கேற்றத் திற்கு நாள்தோறும் வரும் அனைவர்க்கும் அன்னதானம் வழங்கினர். ஓராண்டுவரை புராண அரங்கேற்ற உரை நீடித் தது. ஈற்றில் தொண்டை நாட்டுச் சான்றோர் கந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணத் திருமுறையையுங் கச்சியப்ப சிவாசாரியாரையும் முறைப்படி வணங்கினர்; அந்நூலையுஞ் சிவாசாரியாரையும் ஊர்வலமாக அழைத்து வந்தனர்; அவருக்குத் தக்க பரிசுகள் வழங்கி அவரை மகிழ்வித்தார்கள். அவர் தொடர்ந்து தம் பணிகளை நிறைவுறச் செய்து குமரக்கடவுளின் திருவடிகளை அடைந்தார். இன்று தமிழ் வழங்கு நல்லுலகம் எங்கும் இந்நூலைப் பெரும் பத்தியுடன் யாவரும் போற்றுகின்றனர்.

# 26. தாயுமான சுவாமிகள்

திருமறைக் காட்டிலே கேடிலியப்பபிள்ளை என்பவர் இருந்தார். இவர் அடியார் பணியிலுந் திருக்கோயிற் தொண்டுகளிலும் ஈடுபட்டுள்ளவர். திருச்சிராப்பள்ளியிலே அரசராக இருந்த விசயரகுநாத சொக்கலிங்க நாயக்கர், இவரது அறிவாற்றல்களை அறிந்து இவரைத் தமக்கு அமைச்சராக்கினர்.

கேடிலியப்பபிள்ளை, திருச்சிராப்பள்ளியின் மலைக்கோவிலிலே தாயுமானவர் என்னும் பெயருடன் வீற்றிருக்குஞ் சிவபிரானிடத்து அன்புள்ளவராயிருந்தார். இவருக்கு முதலில் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. முன் வாக்குக் கொடுத்தபடி அச்குழந்தையைப் பிள்ளைப்பேறில்லாமலிருந்த தமது மூத்த சகோதரனிடங் கொடுத்தார். ஆகவே இரண்டாவது ஆண் குழந்தை ஒன்றைத் தந்தருளும்படி திருச்சிராப்பள்ளி இறைவனிடம் வேண்டினர். அப்பெருமான் அருளால் ஓர் ஆண்மகவு பிறந்தது. திருச்சிராப்பள்ளி இறைவர் அருளாற் பிறந்தமையால், அப்பெருமானது திருப்பெயராகிய 'தாயுமானவர்' என்னும் பெயரை இக்குழந்தைக்கு இட்டனர்.

இக்குழந்தையைப் பெற்றோர் செவ்வனே வளர்த்து வந்தனர். கல்விப் பருவம் அடைந்ததும், தாயுமானவர் கல்வியை நன்கு கற்றுச் சைவசித்தாந்த அறிவிலும், பொது அறிவிலும் வல்லவரானர். இவரது தந்தை இறந்தபோது அவரது

அமைச்சியற் பொறுப்பு இவருக்குக் கிடைத்தது. அக்கடமையை அரசரது வற்புறுத்தலினால் ஏற்றிருந்தாராயினும் உலகப் பொருள்களிலே பற்றற்றவராக இருந்தார். உயிர்க்கு உறுதிபயக்கும் உயர்நெறியையே இவர் கருத்திற் கொண்டார்.

திருமூலர் மரபிலே வந்த மௌனகுரு என்னும் பெரியாரை அடைந்து, அவரிடம் அருளுபதேசம் பெற்றார். அதனாற் சிவத்தியானத்திலே அதிகம் ஈடுபாடுடையவரானார். தம்து தமையனாரின் வேண்டுகோளுக்கிணங்க மட்டுவார் குழலி என்னும் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு ஓர் ஆண்மகவு பிறந்தது. தம் குருவின் கட்டளைக்கிணங்க இவர் துறவு நிலையை மேற்கொண்டார். இதன் பின் தலயாத்திரையிலும், பாடல்களை அருளுவதிலுஞ் சிவத்தியானத்திலும், அதிகம் ஈடுபாடுடையவரானார்.

திருவாரூர், திருத்தில்லை, திருவருணை, மதுரை முதலிய சிவப்பதிகளை வணங்கி, இராமேசுவரத்தை அடைந்தார். சில காலம் அங்கு தங்கிப் பின் இராமநாதபுரத்தை அடைந்தார். அங்கு சிவயோகத்தமர்ந்து சமாதி நிலையைப் பெற்றார். உயிரோடிருக்குங்காலை அருளையர், கோடிக்கரை ஞானியார் ஆகிய தம் மாணாக்கர்களுக்கு மெய்ஞ்ஞானத்தை இவர் கற்பித்தார்.

இவர் இராமேசுவரத்திலிருந்தபோது ஒரு முறை பல மாதங்கள் மழையில்லாமலிருந்தது. மக்கள் யாவரும் அல்லலுற்றனர். அவர்களிடங் கொண்ட கருணையினாலே

''சைவ சமயஞ் சமயமெனில் அச்சமயத்
தெய்வம் பிறைசூடுந் தெய்வமெனில் — ஐவரைவென்
றானந்த இன்பில் அழுந்துவது முத்தியெனில்
வானங்காள் பெய்மின் மழை'' என்னும் பாடலைப் பாடினார். பெருமழை பெய்தது. இவ்வாறு இவர் செய்த அற்புதங்கள் பல.

இவரது பாடல்கள் 'தாயுமானவர்பாடல்' என்னும் நூலாக இருக்கின்றன. இவை திருமுறைகளின் பின் ஓதப் பெறுவன. இவரது பாடல்கள் சிறந்த உயர்ந்த கருத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை உடையன; எளிமையும் இனிமையும் உள்ளன; எவர் உள்ளத்தையும் உருக்குவன; பிறமதத்தவரும் இவரது பாடலை விரும்பிப் படிப்பர். இவரது வரலாறும் பாடங்களும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு இருக்கின்றன.

இவர் தமக்கு முன் இருந்த பெரியார்கள் பலரைத் தம் பாடல்களிற் போற்றியுள்ளார். இவரையும், இவர் பின் வந்த பெரியார்கள் பலர் போற்றியுள்ளனர்.

## 27. சிவஞான முனிவர்

தென்பாண்டிநாட்டிலே, பாபநாசத் திருப்பதிக்குஅருகே விக்கிரமசிங்கபுரம் என்னும் ஊரிலே, இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன் ஆனந்தக்கூத்தர் என்பவர் இருந்தார். இவரது மனைவியார் மயிலம்மை என்பவராவர். இருவரும் இறைபத்தி உள்ளவர்கள். இவர்களுக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. இக்குழந்தைக்கு 'முக்காளிங்கர்' என்னும் பெயரிட்டு அன்புடன் வளர்த்து, உரிய பருவத்திற் கல்வி கற்கச் செய்தனர்.

இவர் குழந்தையாக இருக்கும்பொழுது ஒருமுறை வழியிலே திருவாவடுதுறை ஆதீனத் துறவிகளது காவியுடை முதலியவற்றைக் கண்டு, அவர்களிடம் பற்றுக் கொண்டார். அவர்களைத் தம்து வீட்டிற்கு அழைத்துச் சென்றார். தந்தையார் அவ்வமயம் இல்லை. தாயாரிடஞ் சொல்லி அவர்களுக்கு நல்ல உணவு கொடுத்து உபசரித்தார். துறவிகள் இவரது நல்லியல்பைப் பாராட்டிச் சென்றனர். பின்பு தந்தையார் வந்து நடந்தவைகளை அறிந்து மகனைப் பாராட்டினர்.

ஆதீனத் துறவிகளிடங் கல்வி கற்கும் விருப்பம் முக்காளிங்கரிடம் உண்டாயது. அதனைத் தந்தையாரிடந் தெரிவித்தார். மகனைப் பிரிந்திருக்க ஆனந்தக் கூத்தர் விரும்பாவிடினும், மகனின் உறுதிமிக்க வேண்டுதலினால் அதற்கு அநுமதித்தார். அத்துறவிகள் அவரைச் சுசீந்திரத்துக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துச் சென்று, வேலப்பதேசிக சுவாமிகளிடம் ஒப்படைத்தனர். அவர் விருப்புடன் ஏற்று இவருக்குத் தீட்சை முதலிய கொடுத்து ஞானநூல்களைக் கற்பித்தார். பின் பக்குவ நிலையை அறிந்து, காவியுடை கொடுத்துச் 'சிவஞானம்' என்னுந் தீட்சைப் பெயருங் கொடுத்தார். இவர் இலக்கண இலக்கியங்களிலும், தருக்கம், வடமொழி ஆகியவற்றிலுஞ் சிறந்து விளங்கினார்.

வேலப்பதேசிகர் தமது ஞான குரவரைக் காண்பதற்காக சிவஞான முனிவரையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார். வழியிலே செப்பறை என்னுந் தலத்தை அடைந்தார். தேசிகரது விருப்பப்படி சிவஞான முனிவர் திருப்பதிகம் பாடி அங்கு அரங்கேற்றினார். பேரூர் என்னும் இடத்திலே தங்கியிருந்தபோது, வேலப்பதேசிகர் இறைவனடி சேர்ந்தார். பின் சிவஞான முனிவர் திருவாவடுதுறையை அடைந்து ஆதீன முதல்வராகிய சுவாமிகளைத் தரிசித்து, அங்கு தங்கியிருந்தார். அங்கு தங்கியிருந்தபோது 'பஞ்சாக்கரத் தேசிகர் மாலை', 'இலக்கண விளக்கச் சூறுவளி', சித்தாந்த மரபு கண்டனம், சிவஞானபோதச் சிற்றுரை, முதலிய நூல்களை இயற்றினார். நன்னூல் விருத்தியுரையைப் புதுக்கியுந் திருத்தியும் பதிப்பித்தார்.

பின்னர் தலயாத்திரைக்காகப் புறப்பட்டு மயூரம், தில்லை முதலிய தலங்களைத் தரிசித்து, திருப்பாதிருப்புலியூரில் தங்கியிருந்தார். அப்போது நூறு பொன் பண முடிப்பைப் பரிசாகப் பெற விரும்பிய வறியவர் ஒருவரின் வேண்டுதலுக்காக ''கரையேறவிட்டமுதம்'' என்னும் பாடலைப் பாடிக் கொடுத்தார். அவன் அப்பாடலைக் காட்டி அப்பரிசைப் பெற்றான். பின்பு காஞ்சிபுரஞ் சென்றார். அங்கு கம்பராமாயண முதற் செய்யுட் சங்கோத்தர விருத்தி, சிவசமவாதவுரை மறுப்பு, தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தியுரை முதலிய நூல்களை எழுதினார். சித்தாந்தப் பிரகாசிகை, தர்க்க சங்கிரக அன்னம் பட்டீயம், சிவதத்துவ விவேகம் முதலிய வடமொழி நூல்களையுந் தமிழிலே எழுதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு திருவொற்றியூருக்குச் சென்று, அங்கு இருந்த போது, சிவாகமங்களை அவைகளில் வல்ல அந்தணர்களிடமிருந்து கற்ருர். பின் காஞ்சிபுரஞ் சென்று சிவஞானமா பாடியத்தை எழுதினர். அதனைத் திருவாவடுதுறையிலே அரங்கேற்றினர். காஞ்சிப் புராணத்தைப் பாடி, காஞ்சி புரத்திலே அரங்கேற்றினர். திருமுல்லைவாயில் அந்தாதி, சோமேசர் முதுமொழி வெண்பா, கலைசைப்பதிற்றுப் பத்தந்தாதி, செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ் ஆகிய நூல்களைப் பாடினர். தம்மையடுத்த பல மாணவர்களுக்கு இலக்கண இலக்கியங்களையுஞ் சைவ சித்தாந்த நூல்களையும் கற்பித்தார். திருவாவடுதுறையில் இருக்கும் போது சிவனடி எய்தினர்.

கச்சியப்பதம்பிரான், சுப்பிரமணியத்தம்பிரான் ஆகியோர் இவரது மாணவர் ஆவர். சிவஞான முனிவர் சைவத்திற்குந் தமிழுக்குஞ் செய்த தொண்டு மிகப்பெரியதாகும்.

*

## 28. மன்று தொழுத பதஞ்சலி

இறைவன் அளவில்லாத கருணை உடையவன். உயிர்கள் மெய்ப்பொருளை அறிந்து ஒழுகி இன்பம் துய்க்க வேண்டும் என்பது அவன் பெரு விருப்பமாகும். அதனுல் வினையின் நீங்கி விளங்கிய அறிவினர்க்கு உண்மைப்பொருளை உணர்த்துகின்றன். அவர்கள் வாயிலாக உயிர்க்குலம் உண்மைஞானத்தைப் பெற்று உயர்வடைகின்றது. இறைவன் கல்லாலின் கீழ் இருந்து அறமுரைத்தான். இறைவன்பால் அறங்கேட்ட பரம்பரை இரண்டென்பர். ஒரு பரம்பரையில் சனகர், சனற்குமாரர், சனந்தனர், சனுதனர் முதலியோர் அடங்குவர். மற்றப் பரம்பரையில் சிவயோகமா முனிவர், பதஞ்சலி, வியாக்கிரபாதர், திருமூலர் என்போர் அடங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை திருமால், தாருகாவனத்தில் சிவபெருமான் ஆனந்தத்தாண்டவம் இயற்றியபோது, தாமும் மற்றுந் தேவர்களும் பெற்ற சிவானந்த அனுபவத்தை ஆதிசேடனுக்கு விரித்து விளக்கினர். அதைக்கேட்ட ஆதிசேடனுக்குச் சிவபெருமானின் நடனத்தைக் காணவேண்டும் என்னும் ஆவல் பெருகிற்று. திருமாலிடம் விடைபெற்றுக் கொண்டு சென்று கைலைமலைப் பக்கத்திலே சிவபெருமானைக் குறித்து நெடுங்காலந் தவமியற்றினன். சிவபெருமான், ஆதிசேடன் தவத்திற்கு மகிழ்ந்து. காட்சி அளித்து அவன் தலைமேல் கையை வைத்து அருள் புரிந்து "அன்பனே! ஐந்தொழிலே எமது நடனமாகும். அன்று தாருகாவனமே எனது நடனத்தைப் பொறுக்கமாட்டாது அசைந்தது. நீ விரும்பியபடி இவ்வனத்தில் எமது நிருத்தத்தைக் காண்பிக்கின், இவ்வனம் எமது நடனத்தைப் பொறுக்கவல்லதன்று. எமது கூத்தைக் காண விரும்பின், தில்லைவனத்துக்கு வா, அங்கு மூலலிங்கமும், அதற்குத் தெற்கே ஒரு சபையும் உண்டு. அங்கு நாம் எக்காலத்தும் நடனஞ் செய்து கொண்டு இருப்போம்" என்று கூறியருளினர். அவர் மேலுந் தொடர்ந்து, "அன்பா! நெடுங்காலமாக அத்திரி முனிவரும், அநசூயையும் நின்னைப் பிள்ளையாகப் பெறக் கருதித் திருமாலைக் குறித்துத் தவஞ் செய்தனர். ஒரு சமயம் அநசூயையும் நின்னைப் பிள்ளையாகப் பெறக் கருதித் திருமாலைக் குறித்துத் தவஞ் செய்தனள். ஒரு சமயம் அநசூயை நீராடிக் கரையேறினள். நீ ஐந்து தலைகளை உடைய சிறு பாம்பாய் அவள் கையில் அமர்ந்தாய். அவள் பயத்தினால் கையை விடுப்ப நீ கீழே விழுந்து "பதஞ்சலி" என்ற பெயரைப் பெற்ருய். இப்பொழுது உன் ஆயிரந் தலைகளோடு செல்லாது, பதஞ்சலியாக வடிவும் பெயரும் கொண்டு செல். முதலில் நாக உலகத்துக்குப் போ. அங்கு ஒரு மலை உண்டு. அதன் அருகில் ஒரு குகை தோன்றும். அக்குகையின் முடிவு தில்லைவனமாகும். அவ்வழியே சென்று தில்லைவனத்தை அடைதி; மலையின் சிகரமே சிவலிங்கமாக இருக்கின்றது. வியாக்கிரபாதன் நமது திருக்கூத்தைக் காண விரும்பி அங்கு பூசித்துக் கொண்டிருக்கின்றான். நீயுஞ்சென்று இரு. உங்கள் இருவருக்கும் நமது திருக்கூத்தைக் காட்டியருளுவோம்" என்று கூறி மறைந்தருளினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிசேடன் இறைவன் பணித்தபடியே பதஞ்சலியாக வடிவங்கொண்டு நாகலோகஞ் சென்று மலையைக் கண்டு வணங்கிக் குகை வழியே தில்லைவனத்தையடைந்து, வியாக்கிரபாதரைக்கண்டு வணங்கித் தன் வரலாற்றைக் கூறினான். பதஞ்சலி சிவகங்கையில் நீராடித் திருமூலட்டான முடையாரையுந் திருப்புலீச்சரமுடையாரையும் வழிபட்டு வந்தார். அந்நாளில் பதஞ்சலி தில்லைக்காட்டின் வடபகுதியில் ஒரு குளத்தைக் கண்டு அதன் கிழக்குப் பக்கத்தில் சிவலிங்கம் அமைத்து, வடக்குப்புறத்தில் ஒரு குடிசையமைத்து முறையே திருமூலட்டான முடையாரையும், திருப்புலீச்சரமுடையாரையுந் தாந் தாபித்த சிவலிங்கத்தையும் பூசித்து வந்தார். சிவபெருமான் தாம் வாக்களித்த படியே வியாக்கிரபாதர், பதஞ்சலி என்பவர்கட்குக் குறித்த நாளிற் காட்சி கொடுத்தார்.

சிவபெருமானது திருநடனத்தைக் கண்டு மகிழ்ந்த பதஞ்சலி இறைவனை வணங்கி, எந்தாய்! இந்த ஞானசபையில் ஆன்மகோடிகள் உய்யும் வண்ணம் எல்லாக் காலத்தும் உமாதேவியாரோடும் ஆனந்தக் கூத்தாடிக் காட்டி அருள் செய்ய வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார். அந்த இடத்திலே தேவர்கள் பொற்சபையை உண்டாக்கினார்கள். சிவபெருமான் சிவகாமி அம்மையுடன் பதஞ்சலி வியாக்கிரபாதர் மற்றும் முனிவர்களும் பிறருந் துதித்து வணங்க எல்லாக் காலத்தும் நடனம் புரிந்து காட்சி அளித்துக்கொண்டு இருக்கின்றார்.

பதஞ்சலி என்னும் பெயரினர் மூவர் இருந்ததாக அறிகின்றோம். ஒருவர் மகாபாடியம் இயற்றியவர்; இன்னொருவர் யோகசூத்திரம் எழுதியவர்; மன்று தொழுத பதஞ்சலி இவர்களில் வேறானவர்.

—✻—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29. சிதம்பரம்

சிதம்பரம் என்பது புண்ணிய சிவத்தலங்கள் எல்லாவற்றுள்ளும் மேலாகிய ஒரு திருத்தலமாகும். இதற்குத் தில்லைவனம், கோயில், பெரும்பற்றப் புலியூர் முதலிய திருப்பெயர்களும் புராணதிகளில் வழங்குகின்றன. சிதம்பரம் [சித் + அம்பரம்] என்ற வடசொல், ஞானமயமாகிய ஆகாசம் என்ற பொருளுடையது.

மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரத்தலங்களுள்ளே, 'அநாகதம்' என்ற ஆதாரமாயமைந்த தலமுஞ் சிதம்பரமேயாகும். மேலும், பஞ்சபூத தலங்கள் ஐந்தினுள்ளே, சிதம்பரம் ஆகாசத் தலம் எனவுங் கூறப்படும் விசேடமுடையது. சிவகங்கையாகிய பொற்றாமரை வாவி, பரமானந்த கூபம் முதலிய பத்துத் தீர்த்தங்களையுடைய தலம். பரமானந்த கூபம் சிற்சபைக்குக் கிழக்குப் பிராகாரத்தில் உள்ள அபிடேக தீர்த்தக் கிணறாகும். சிவகங்கை வடக்குக் கோபுரவாயிலின் உட்பக்கஞ் சார மூன்றாம் பிராகாரத்திற் பொருந்திய தீர்த்தக் குளம். கௌடதேச இராசகுமாரனாகிய சிங்கவர்மா இத்தீர்த்தத்தில் நீராடித் தனது உடற்குற்றமாகிய வெண்ணிறம் நீங்கிப் பொன்னிறமேனி பெற்றான். அதன் பின் இரணியவர்மா எனப் பெயர் பெற்றான்.

சிதம்பர ஆலயத்துள் இருக்குஞ் சபாநாயகர் தரிசிக்க முத்திதரும் மூர்த்தியாவார். மூலலிங்கம் நாகலோகத்திலுள்ள ஒரு மலையின் உச்சிக்கொழுந்தாய் உள்ள சுயம்பு லிங்கமூர்த்தி. ஞானசோதி வடிவாய் அமர்ந்து அருள் செய்யும் விசேடமூர்த்தி. மானுடலிங்கம் முதலிய ஐவகை லிங்கங்களுள், சுயம்புலிங்கமே மிகவும் கூடுதலான அனுக்கிரக பலனைத் தருவதாகும். இங்குள்ள அம்மன் சந்நிதியில் உள்ள சிவகாமியம்மையாரும், சபாநாயகரின் கொடிமரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கு மேற்குப் பக்கமாக உள்ள தண்டபாணி மூர்த்தமாய் எழுந்தருளியிருக்கும் முருகக் கடவுளும், வேண்டுவோர் வேண்டும் வரங்களைத் தரும் மூர்த்திகள்.

சிதம்பரம், இவ்வாறு மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றினாலும் மகிமை பெற்று விளங்குஞ் சிவத்தலமாயிருத்தலின், 'கோயில்' என்ற பொதுப் பெயரைத் தனக்குச் சிறப்புப் பெயராகப் பெற்று விளங்குவதாயிற்று. வைணவ சமயத்திலும் விஷ்ணு தலங்களுள் மிக மேலாய் விளங்கும் 'ஸ்ரீரங்கம்' என்ற தலம் 'கோயில்' என்ற பெயர் பெற்று வழங்குவது நோக்கத்தக்கது.

புலியூர் என்ற பெயர், புலிக்கால் முனிவராகிய வியாக்கிரபாதர் சிவபெருமானைப் பூசித்துப் பேறுபெற்ற தலம் என்ற காரணம் பற்றி உண்டாயது. தில்லை என்ற மரஞ் செறிந்துள்ள காடாக ஆதியில் இருந்த காரணத்தால் தில்லை வனம் எனப் பெயர் பெற்றது.

தில்லைவனமாக இருந்த ஆதி காலத்தில், வியாக்கிரபாத முனிவரும், பதஞ்சலி முனிவரும் ஓர் ஆலமரத்தின் கீழிருந்த சுயம்புலிங்கமாகிய மூலலிங்கத்தைப் பூசித்துத் தவஞ்செய்தனர் என்றும், நடன தரிசனம் பெறுதற் பொருட்டு வரம் வேண்டிச் செய்யும் அவர்களின் பூசைக்குந் தவத்திற்கும் மகிழ்ந்த சிவபெருமான், சிற்சபை எல்லையிடத்தில் சிவகணங்களோடும், பிரமவிட்டுணு முதலிய தேவர்களும் முனிவர்களும் போற்றவும், குடமுழா முதலிய வாத்தியங்கள் ஒலிக்கவும், ஆனந்தத் தாண்டவஞ் செய்து தரிசனந் தந்தருளினார் என்றும், அப்போது பதஞ்சலி முனிவர் வேண்டிக்கொண்ட வரத்தினால் அன்று தொடக்கம் எந்நாளும் பத்தர் கண்டு பேறு பெறும்படி அங்கே நடனஞ் செய்தருளுவாராயினர் என்றுங் கோயிற் புராணம் கூறுகின்றது.

சபாநாயகர் நடனஞ் செய்யும் இடமாகிய சிற்சபையும், அவருடைய அபிடேகம் பூசைகள் நடத்துதற்குரிய கனக சபையும் இணைந்துள்ளன; அவற்றை மத்தியாகக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயம், ஐந்து சுற்றுப்பிராகாரங்களோடு நாற்புறமும் உயர்ந்த சுற்றுமதில்களையும், நாற்றிசையிலுமாக நான்கு பெரிய கோபுர வாயில்களையும் உடையதாக அமைந்துள்ளது. ஆலயத்தின் பிராகாரங்களில் விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், தட்சணாமூர்த்தி, சமய குரவர், அறுபத்து மூன்று நாயன்மார், முக்குறுணி விநாயகர், நவக்கிரகங்கள், சண்டேசுரர் முதலிய மூர்த்திகளுக்குத் தனித்தனி கோவில்கள் உள்ளன. பராசக்தியாகிய சிவகாமியம்மை கோயில் தனியாக ஒன்றும், நவலிங்கங்களின் கோயிலுஞ் சிவகங்கைக் கரைகளில் உள்ளன;

ஆலயத்தில் ஐந்து சபைகள் உண்டு. அவை, சிற்சபை, கனகசபை, நிருத்தசபை, தெய்வசபை, இராசசபை [ஆயிரக்கால் மண்டபம் என்பன]

சபாநாயகருக்கு நாடோறும் ஆறுகாலப் பூசைகள் நடைபெறும். அவற்றுள் திருவனந்தல்; காலைச் சந்திப் பூசை, உச்சிக்காலப்பூசை என்பன முற்பகலில் நடைபெறும். பின்னர் மாலை தொடக்கம் நடைபெறுஞ் சாயரட்சைப் பூசை, இராப்பூசை, அர்த்தயாமப் பூசைகள் மூன்றும் ஒன்றன் பின் ஒன்ருக உரிய காலங்களில் நடைபெறும்.

எங்களுக்குரிய பன்னிரு மாசங் கொண்ட ஒரு வருடகாலம் தேவர்களுக்கு ஒரு நாளாகவும், உத்தராயண காலம் ஆறு மாசமும் பகலாகவும், தட்சிணாயண காலமாகிய ஆறு மாசமும் இரவாகவுங் கணிக்கப்படும். அவ்வகையில் ஒரு வருடத்துக்கு ஆறு அபிடேகம் சபாநாயகருக்குஞ் சிவகாமியம்மைக்கும் நடத்தப்படுகின்றன. அவ்வபிடேகத் தினங்கள் பின்வருமாறு:—

(1) மார்கழி மாதத் திருவாதிரை நட்சத்திரம்— திருவனந்தற் (வைகறைப்) பூசைக்குச் சமம்.

(2) மாசி மாதப் பூர்வபட்சத்துச் சதுர்த்தசித் திதி— காலை சந்திப் பூசைக்குச் சமம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) சித்திரை மாதத் திருவோண நட்சத்திரம் — உச்சிக் காலத்துப் பூசைக்குச் சமம்.

(4) ஆனிமாத உத்தர நட்சத்திரம் — சாயரட்சைப் பூசைக்குச் சமம்.

(5) ஆவணிமாதப் பூர்வபட்சச் சதுர்த்தசித் திதி— இராக்காலப் பூசைக்குச் சமம்.

(6) புரட்டாதி மாதப் பூர்வபட்சச் சதுர்த்தசித் திதி — அர்த்தயாமப் பூசைக்குச் சமம்.

சபாநாயகருக்கு வருடந்தோறும் இருமுறை மகோற்சவம் நடத்தப்படுகின்றது. மார்கழி மாதத் திருவாதிரை நட்சத்திரத்தினைப் பத்தாம் நாள் விழாவாகிய தீர்த்தோற்சவமாகக் கொண்டு, அதற்கு முந்திய ஒன்பது நாளுங் கொடியேற்றவிழா முதலியன நடத்தப்படும். இவ்வாறே ஆனி மாசத்தில் உத்தர நட்சத்திரத்தைத் தீர்த்தோற்சவ தினமாகக் கொண்டு, அதற்கு முந்திய ஒன்பது நாள் விழாவும் நடத்தப்படும். பத்தாம் நாளில் வைகறையில் ஆயிரக்கால் மண்டபத்தில் நடேசர் அபிடேகமும், பின்னர் தீர்த்த விழா, நடனதரிசனவிழா இரண்டும் அம்மண்டபத்திலிருந்து நடேசரையுஞ் சிவகாமியம்மையாரையும் எழுந்தருளப் பண்ணி நடத்தப்படும்.

சிதம்பர தல தீர்த்த மூர்த்தி மகிமை முதலியவற்றை விரித்துக் கூறும் புராணங்கள், தமிழில் உமாபதி சிவாசாரியர் இயற்றிய கோயிற்புராணமும், பிறர் இயற்றியனவாகிய சிதம்பர புராணம், சபாநாதர் புராணம், புலியூர்ப் புராணம் என்பனவுமாம். கோயிற்புராணஞ் சபாநாயகர் கட்டளைப்படி அவர் சந்நிதியில் அரங்கேற்றப்பட்ட மகிமையுடையது.

இத்தலத்தைப் பற்றிய பதிகங்கள், பிரபந்தங்கள், பாடல்கள் பல மகான்களால் அருளப்பட்டுள்ளன; அவற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுள் மூவர் தேவாரப் பதிகங்களும், மாணிக்கவாசகசுவாமி களின் திருவாசகப் பதிகம் பலவும், திருக்கோவையாரும், திருவிசைப்பாத் திருப்பல்லாண்டுப் பதிகங்கள், திருத் தொண்டர் புராணப் பாடல்களும் ஆகிய அருட்பாக்கள் ஐந்தும் விசேடமாகக் குறிப்பிடத்தக்கன. ஏனையவை பட்டி னத்தடிகள் அருளிய கோயில் நான்மணி மாலை, குமரகுரு பரசுவாமிகள் அருளிய சிதம்பர மும்மணிக் கோவை, சிதம்பரச் செய்யுட் கோவை, தாயுமானவர் பாடல்கள், இரட்டையர், காளமேகப் புலவர் முதலாயினோர் பிரபந் தங்களும் பாடல்களுஞ் சிதம்பரத் தல, மூர்த்தி, தீர்த்த மகிமைகளைப் பற்றிப் போற்றுவனவாகும். திருமூலர் திருமந்திரத்திலுந் தில்லைவனம், பொன்னம்பலக்கூத்து முதலியனப் பாடப்பட்டுள்ளன.

கனகசபையின் முற்பக்கத்தில், விட்டுணுவுக்குரிய ஆல யமும் மண்டபமும் அமைந்துள்ளன. ''தில்லைத் திருச்சித் திரகூடம்'' என்று அதனை வைணவர்கள் கொண்டாடி வணங்குவர். ஆழ்வார்கள் பதிகங்கள் பாடித் தில்லைக் கோவிந்தராசப் பெருமானைத் துதித்து வணங்கிய தலம் அது. மூல மூர்த்தி பள்ளிகொண்ட பெருமாள் ஆகும். இலக்குமியம்மைக்கு ஆலயமுந் தனியாக நிருத்தசபையின் பின்சாரப் பக்கத்தில் உண்டு. அவ்விரண்டுக்கும் நித்திய பூசையும் விழாவும் வைணவப் பிராமணர்களால், வைணவ ஆகம விதிப்படி செய்யப்பட்டு வருகின்றன. அவர்களு டைய நிருவாகத்தில் அவை உள்ளன.

இத்தல வரலாறு கொண்டு அறியப்படும் மற்றுஞ் சில விசேடங்கள் பின்வருமாறு:-

(1) வியாக்கிரபாத முனிவரின் புதல்வராகிய உபமந் நியு முனிவர், குழந்தைப் பருவத்திற் பாலை விரும்பி அழ, மூலலிங்கப் பெருமான் பாற்கடலை வருவித்து உண்ணும்படி கொடுத்தமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) மாணிக்கவாசக சுவாமிகள் சபாநாயகர் உத்தரவுப்படி புத்தரை வாதில் வென்றமை;

(3) மாணிக்கவாசக சுவாமிகளிடத்தே சிற்றம்பலப் பெருமான் அந்தணர்வேடங்கொண்டு சென்று அவர்முன் பாடிய திருவாசகத்தையும், புதிதாகப் பாடிய திருக்கோவையாரையும் ஏட்டில் எழுதித் தங்கையொப்பமிட்டுச் சிற்சபையில் வைத்தருளியமை;

(4) தில்லைவாழந்தணர்கள் அந்நூல்களைக் கண்டெடுத்து, அவற்றின் பொருளை அறிவிக்கும்படி மாணிக்கவாசகர் இருந்த தில்லை ஆச்சிரமத்திற்குச் சென்று கேட்ட, மாணிக்கவாசகர் அவர்களை அழைத்துக் கொண்டு சபாநாயகர் ஆலயத்துட் சென்று, சபாநாயகரைச் சுட்டிக்காட்டி ''இவரே இந்நூல்களின் பொருளாயுள்ளவர்'' என்று கூறி, சிற்சபையுள்ளே திருவருட் குறிப்பின்படி புகுந்து, சிவத்தோடு இரண்டறக் கலத்தலாகிய முத்தியை அடைந்தமை;

(5) சபாநாயகர் எழுதியனுப்பிய சீட்டுக்கவி பெற்ற உமாபதி சிவாசாரியார், பெற்றான் சாம்பான் என்ற சிவபக்தருக்கு முத்தி கொடுத்தமை;

(6) திருநாளைப் போவார் சபாநாயகர் கட்டளைப்படி வளர்க்கப்பட்ட சிவாக்கினியில் மூழ்கி, ஒரு முனிவராகிச் சிற்சபையுட் சென்று, நடேசரைத் தரிசித்துச் சிவத்தோடு இரண்டறக் கலந்து முத்தி பெற்றமை;

(7) திருக்களிற்றுப்படியார், கொடிக்கவி என்ற சித்தாந்த சாத்திரம் இரண்டுஞ் சபாநாயகர் முன்னிலையில் முறையே பஞ்சாட்சரப்படியில் வைத்தும், பாடியும் மகிமை பெற்றமை. உமாபதி சிவாசாரியாரின் உண்மை ஞான நிலைமையைத் தில்லை வாழந்தணர்க்கும் மற்றும் யாவர்க்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்துதற் பொருட்டாகச் சபாநாயகருடைய அசரீரி வாக்கின் பிரகாரம் உமாபதி சிவாசாரியார் ஒருமுறை கொடியேற்ற விழாவில் ஏறுது நின்ற கொடியை ஏறச் செய்தற் பொருட்டுப் பாடப்பட்டது 'கொடிக்கவி' என்ற சாத்திர நூல்;

(8) சேந்தனாரின் உண்மைப் பத்தித் தொண்டினை உலகினர்க்கு வெளிப்படுத்தற் பொருட்டு நடேசருடைய தேர் விழாவில் ஒரு வருடத்தில் தேர் மழைச்சேற்றில் ஓடாமல் அடியார் வருந்துகையில், சேந்தனார் பல்லாண்டுப் பதிகம் பாடித் தேரோடச் செய்தமை;

(9) திருஞானசம்பந்த சுவாமிகளுக்குத் தில்லைவாழந்தணர்கள் யாவரும் உருத்திர வடிவினராகத் தோற்ற, அவ்வற்புதத்தை அப்போது பாடிய தேவாரப் பதிகத்திற் குறிப்பிட்டமை;

(10) சேக்கிழார் நாயனார் பெரிய புராணம் பாடிச் சபாநாயகர் திருவருள் பெற்று அரங்கேற்றிய தலம் இது. அவர் அதனைப் பாடுதற்குச் சபாநாயகர் ''உலகெலாம்'' என்று அசரீரியாக அடியெடுத்துக் கொடுத்தமை;

(11) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் முற்சந்ததியினராய் ஏறக்குறைய 350 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாண நாட்டின் திருநெல்வேலியிற் பிறந்து வாழ்ந்த ஞானப்பிரகாச சுவாமிகள் இந்தியாவுக்குச் சென்று, சிதம்பர தலத்தின் தென்கீழ்த் திசையில் ஒரு திருக்குளம் வெட்டுவித்தார். அஃது அவர் பெயரால் ''ஞானப்பிரகாசகர் குளம்'' என இப்பொழுது விளங்குகிறது. இன்று அது அவ்வூரவர்களுக்கும் யாத்திரிகர்களுக்கும் நீராடுவதற்கு உதவுகிறது.

பிராமணப் பிள்ளைகளுக்கு வேதமோதலைப் பயிற்றும் பாடசாலைகளும், சைவ வேளாளர், பிராமணர்களுடைய பிள்ளைகள் பண்முறைப்படி தேவாரம் முதலிய அருட்பாக்களைப் பயிலுதற்குரிய தேவாரப் பாடசாலைகளும், பல தருமவான்களால் அத்தலத்திலே தாபிக்கப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறுகின்றன. மகோற்சவ காலங்களில் இப்பாடசாலை மாணவர்களும் பிறருஞ் சிவகாமியின் விழாவுலாவின் போது சுவாமிக்கு பின்னே நிரையாக நின்றும், வெவ்வேறு குழுவாக நின்றும் வேதமோதல், தேவாரம் அருட்பா ஓதல் ஆகியவற்றைச் செய்து வலம் வருவர்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களால் தமிழுஞ் சைவ சமய அறிவுந் தழைத்து வளர்தற் பொருட்டாக, இலவசமாகக் கற்பிக்குந் தமிழ் வித்தியாசாலை ஒன்றுந் தாபிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. அஃது அவ்வூரில் மேற்குத்தேர் வீதியில் உள்ளது.

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சைவ போதினிகள்

❀ கொழும்பு விவேகானந்த சபை வெளியீடு ❀

கொழும்பு விவேகானந்த சபையாரால்
நடாத்தப்பட்டுவரும்
அகில இலங்கைச்

**சைவ சமய பாடப் பரீட்சைக்கென,**
கல்விப் பகுதியினரின் பாடவிதானங்களுக்கு
அமைய எழுதப்பட்டவை.

## ★ சைவ போதினிகள் ★

எமது இவ் வெளியீடுகள் யாவும், பாடசாலை களில் சைவ சமயங் கற்பிப்பதற்குப் பாட நூல்க ளாகக் கைக்கொள்ளுதற்கு ஏற்றவை என, கல்விப் பகுதியினரின் அங்கீகாரம் பெற்றனவாம்.

**வெளியீடுகளின் விலை விபரம்:-**

| வகுப்பு | ரூ. ச. |
|---|---|
| 2 | -60 |
| 3 | -65 |
| 4 | -70 |
| 5 | -95 |
| 6 | 1-55 |
| 7 | 1-75 |
| 8 | 2-00 |

## சைவசமயம்

க. பொ. த: சாதாரணம் 4-00

பாடசாலைகளுக்கும், புத்தகவியாபாரிகளுக்கும்

★ தகுந்த கழிவு கொடுக்கப்படும் ★

விபரங்களுக்கு சபையின் புத்தகசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளவும்.

**விவேகானந்த சபை**

34, விவேகானந்த மேடு, கொழும்பு-13:
தொலைபேசி: 22646.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org